திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



வடபழநி ஆண்டவர், கோடம்பாக்கம், சென்னை.

மாலை 14] விரோதிகிருது-மாசி-மார்ச் 1972 [மணி 6

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு.



சோளிங்கபுரம் திரு. இலக்குமி நரசிம்மசுவாமி திருக்கோயில் திரு. பக்தோசிதப் பெருமாளுக்குத் தமிழ் அர்ச்சனை தொடக்க விழா நிகழ்ந்தபோது, தமிழ்நாடு அரசின் கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. நாவலர் டாக்டர் நெடுஞ்செழியன் M.A., D. Litt., அவர்களும், அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு. பலராமன், M.L.A., அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

பொருளடக்கம்

(1) சேக்கிழாரடிகளும், இளங்கோவடிகளும்
(2) வடலூர் சத்தியஞான சபை நூற்றாண்டு விழா வாழ்த்துரை
(3) தில்லைச் சிவகாமி அம்மை கோயில் திருக்குடமுழுக்கு வாழ்த்துரை
(4) மீனாட்சியம்மை குறம்
(5) கனி கொள்வோம்
(6) இயற்கையும், இறைவனும்
(7) திருமால் திருவுருவங்கள்
(8) ''வாழ்முதல் ஆகிய பொருள்''
(9) ஞான நூல்களில் திருமுறைக் குறிப்புகள்
(10) கூத்துக் கலையும் தெய்வ நலமும்
(11) தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய திருமாலை
(12) படிமத் திருக்கோலங்கள்
(13) இந்திர விழா
(14) திருவிடை மருதூர் திருமுறைக் கருத்தரங்கம்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா. பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34'' என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.



மாலை 14] விரோதிகிருது — மாசி — மார்ச்சு, 1972 [மணி 6

சேக்கிழாரடிகளும், இளங்கோவடிகளும்

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

முன்னுரை

'சேக்கிழாரடிகளும் இளங்கோவடிகளும்' என்னும் தலைப்பு, மிகப் பெரும்பாலோர்க்கு வியப்பினை விளைவித்தல் கூடும். ஏனெனில், மேம்போக்காகக் காண்புழி இவ்விருவருக்கும் இடையே இயைபு எதுவும் இருப்பதாகப், பொதுவாகப் புலப்படவில்லை. இளங்கோவடிகள் இருந்த காலமும், சேக்கிழாரடிகள் திகழ்ந்த காலமும் வெவ்வேறானவை. இருவர்க்கும் இடைப்பட்டகாலம், ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகும். அன்றியும், சேக்கிழாரடிகள் சிவநெறிப் பெருந்தலைவர்களுள் ஒருவராகத் திகழா நிற்க, இளங்கோவடிகளோ சமண சமயத்தினைச் சார்ந்தவர் என்று, ஒருசிலராற் கருதப்படுபவர். இளங்கோவடிகள் உலகியற் கலைநோக்கமே பெரிதும் அமையத் தம்

குன்றத்தூர் வட திருநாகேசுவரசுவாமி கோயிலில் நிகழ்ந்த திருக் குடமுழுக்குவிழாவில், சென்னைத் துணையாணையர் திரு. அ. வேங்கடாசலம், B.Sc., B.L. அவர்கள் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது (21—2—72). —ஆசிரியர்.

JL Q2M24, N59TK
148695

அரும்பெரும் நூலினை இயற்றினர்; சேக்கிழாரடிகளோ அருளியல் இறை நாட்டமே பெரிதும் குறிக்கோளாகக்கொண்டு, தமது நூலினை யாத் தருளினர்.

இனைய சில வேறுபாடுகள் காரணமாக இதுகாறும் ஒருவரேனும் இவ்விரு பெரு மக்களை யும் இணைத்து, ஒப்பிட்டு நோக்கி ஆராயத் தலைப்பட்டிலர். இளங்கோவடிகளையும் சிலப் பதிகாரத்தையும் இன்று பல்வேறு திறமக்களும் மிகவும் போற்றிப் பெருமிதம் கொள்ள முற்பட் டுள்ளனர். ஆனல், சேக்கிழாரடிகளையும், பெரிய புராணத்தையும் சமய அமைப்புகள் மட்டுமே, போற்றி வருகின்றன. 'இளங்கோ'1 என்று பலர், இன்று தமக்குப் பெயர் வழங்கிக் கொண்டு மகிழ்தலைக் காண்கின்றேம். ஆனல், 'சேக்கிழான்' என்று சமயவுணர்வு மிக்கவர் களுங்கூடத் தம் பிள்ளைகளுக்கு யாண்டும் பெய ரிட்டு அழைத்து மகிழ்தலைக் காண்கின்றிலம். "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளு வர் போல் இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று பாரதியார் அண்மையிற் பாடிப் புகழ்ந்ததனல், இளங்கோ வடிகளுக்கு இன்று முன்பிலும் ஒரு புதிய புகழும் பெருமையும் ஏற்பட்டுள்ளன.

ஆனல் சேக்கிழாரடிகள், அத்தகைய புதுப் பெருமைகள் ஏதும் எய்தாமல், ஒரு சில அறிஞர்களுக்கும் பக்தியாளர்களுக்கும் மட்டுமே, உரியவராக விளங்கிக்கொண்டு வருகின்றர். சிலப்பதிகாரம் பற்றிப் பேசுவோர் பெரியபுராணத்தையும், பெரிய புராணம் பற்றிப் பேசுவோர் சிலப்பதிகாரத்தையும், அத்துணை மிகுதியாக மதித்துப் போற்றிப் பாராட்டி மகி ழும் வழக்கம் காணப்படவில்லை. எனவேதான், இன்றைய சூழ்நிலையில் இவ்விரு பெருஞ் சான் றேர்களையும், இணைத்து ஒப்பிட்டு நோக்கி ஆராய்ந்துணர்தல் (Comparative study)மிகவும் நலம் பயப்பதாகும் என்று கருதி விரும்பி, இத் தலைப்பு ஈண்டு எடுத்துக் கொள்ளப்பெற்றது. இப்பெரும் பொருளைக் குறித்து, ஈண்டு இயன்ற வரையில் ஒரு சிறிது ஆராய்ந்து கண்டு இன்புற முயல்வோம்.

ஒப்புமை இயல்புகள் சில:

(1) இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும் "மூத்தமிழ்த்துறையின் முறைபோகிய உத்தமக் கவிஞர்கள்" என்பதில் தடையில்லை. இவ்விரு வருமே தமிழகம் போற்றத்தகுந்த தலைசிறந்த சான்றேர்கள், அறவோர்கள் ஆவர்.

"உலகப் பெருங்கவிஞர்களின் பேரவை யில், இங்கிலாந்து நாட்டின் சார்பாளர்களாக விளங்குவதற்கு, செகப்பிரியரும் மில்ட்டனும் மிகவும் தகுதி உடையவர்கள். ஆயினும், அவர் கள் இங்கிலாந்துக்கு மட்டுமேயன்றி, உலகத் திற்கேயுரிய பெருங் கவிஞர்கள் ஆவர்" என்று ஆங்கில அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றர் (2). அம் முறையிற் கூறுதலுறின், இளங்கோவடி களும் சேக்கிழாரடிகளும், உலகப் பெருங்கவிஞர் களின் பேரவையில், தமிழ் நாட்டின் சார்பாளர் களாக விளங்குதற்குரிய சிறந்த தகுதியுடைய வர்கள் ஆவர், என நாமும் துணிந்து கூறலாம்.

(2) இளங்கோவடிகள் சேரர் குலத்துத் தோன்றல்; சேக்கிழாரடிகள் சோழ நாட்டின் தலைமை முதலமைச்சர். இருவருமே வாழ்க்கை வளங்கள் பலவும் வாய்ப்புற அமைந்து, 'நிரம் பிய வாழ்க்கை' வாழ்ந்து சிறந்து விளங்கியவர் கள்; தமிழகத்துச் சமுதாயத்திற் பெருநிலையும் பெருமதிப்பும் பெற்றுப் பிறங்கியவர்கள்.

(3) இவ்விருவரும் பல வகையில் தம்முள் உணர்ச்சியொத்த உள்ளத்தினராகக் காணப் படுகின்றனர். புலமைத்துறையிலும், சான் றாண்மை நலங்களிலும், இருவரும் ஒருவர்க் கொருவர் 'சரிநிகர் சமானமாகவே' விளங்கு கின்றனர்.

(4) அரசுரிமை துறந்த இளங்கோவடிகள் 'குணவாயிற் கோட்டம்' என்னும் கோயிலில் இருந்து, சிலப்பதிகாரம் இயற்றினர். அமைச் சுரிமை துறந்த சேக்கிழாரடிகள், தில்லைத் திருக்

---

(1) 'இளங்கோ' என்பதுதான் திருத்தமான பெயர். "இளங்கோவன்" என்பது பிழை. "ஆமாகோ னவ் வணையவும் பெறுமே" என்னும் விதியின்படி, வேண்டுமாயின் 'இளங்கோன்' என இப்பெயர் வழங்கலாம். 'இளங்கோவன்' என வழங்குவது சொற்பிழையும், ஒருவகையிற் பொருட்பிழையும் ஆகும். —ஆசிரியர்.

(2) "England may choose to be repersented by Milton and Shakespere at an international congress of World-poets, but they are more than English. They are of all countries, Milton no less than Shakespeare."

—Mark Pattison,
English Men of Letters.

கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் இருந்து, திருத்தொண்டர் புராணம் பாடினர்.

" தவநலஞ் சான்ற சிறந்த பெருமக்கள் தாம் அழியாத பேரிலக்கியங்களை இயற்ற முடியும்"(3) என்பர் அறிஞர். அவ்வாற்ருல் நோக்கிலும், தூய துறவுள்ளம், உயரிய தவ வொழுக்கம் முதலியவற்றில், இளங்கோவடி களும் சேக்கிழாரடிகளும் பெரிதொத்துக் காணப்படுகின்றனர்.

(5) பற்றற்ற தூய துறவுணர்ச்சி மிக்க வாழ்வில், இருவரும் தலைசிறந்து விளங்கின ராயினும், நாட்டுப்பற்று - மொழிப்பற்று - அருங் கலையார்வம் என்னும் இன்னோரன்ன நலங் களில், ஒரு சிறிதும் குறைவிலா நிறைவினராய், இவர்கள் இருவருமே தமக்கு நிகர் பிறர் எவரும் இன்றித் திகழ்கின்றனர்.

(6) வெறும் கலையறிவும், நூலறிவும் ஆகிய புலமை மட்டுமே, எய்தி நிற்கும் ஏனைய சில கவிஞர்களும் புலவர்களும்போல் அன்றி, "காவற் சாகாடு கைத்து" நாடு காத்தோம்ப வல்ல அறிவாற்றல் ஆள்வினைத் திறங்களும், மிக்குடையவர்களாக இவ்விருவரும் இலங்கி யிருந்தனர்.

(7) இசைக் கலையுணர்வும் ஈடுபாடும், மக்கள் மனத்தைப் பண்படுத்திப் புனிதமாக் கும் சிறப்புடையன. "எவன் இசையுணர்வு இல்லாதவனே, எவனுக்கு இசை கேட்டு உள்ளம் உருகவில்லையோ, அவன் வஞ்சகம் சூழ்ச்சி கொலை கொள்ளை முதலிய கொடுஞ் செயல்களைப் புரியவல்ல இயல்பினன் ஆவான்"(4) என்று செகப்பிரியர் பாடுவர்.

இனியநல் இசையைக் கேட்டும்
இளகிடா திருப்பான் நெஞ்சம்;
துனிதரும் நரகம் போலச்
சூழ்ந்திருள் படர்ந்து நிற்கும்;
முனிதகு வஞ்சம் சூழ்ச்சி
முதற்பல தீங்கே செய்வான்;
நனிமிகக் கொடியன்; அந்தோ!
அவனைநாம் நம்பொ ணாதே! (4)

—மொழி பெயர்ப்பு, ஆசிரியர்.

கலைகளுள் தலைமை சான்ற அத்தகைய இசைக் கலையின்பால் இவ்விருவர்க்கும் பேரீடு பாடு இருந்தது. இளங்கோவடிகள் இசைக் கலையில் ஈடுபாடு கொண்டவர் என்பது, சிலப்பதிகாரத்துள் ஆங்காங்கு இடையிடையே விரவிவரும் இசைக்கலைபற்றிய நுணுக்கக் குறிப்புகளாலும், இசைநலங் கனிந்த வரிப்பாடற் பகுதிகளாலும், தெளிவுறப் புலனாகின்றது. அங்ஙனமே சேக்கிழாரடிகளும், "மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழ்" இசையிற் பெரிதும் ஈடுபட்டுத் திளைத்து இன்புற்றவர் என்பது அவர்தம் பெரிய புராணத்தால் தெளியப் படுகின்றது.

உள்ளம் ஆர்உரு காதவர்? ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள், பைங்
கிள்ளை பாடுவ: கேட்பன பூவைகள்.

என்பன போன்று வரும் பெரியபுராணப் பாடல் கள் பல, சேக்கிழாரடிகளுக்குத் திருநெறித் தமிழிசையின்பால் இருந்த எல்லையற்ற ஈடு பாட்டின் பெற்றியினை விளக்கும்.

இவ்வண்ணமே, நல்லிசைக் கவிஞர் அனைவர் மாட்டும் பொதுமைச் சிறப்பியல் பாகக் காணப்பெறும் இயற்கைப் பொருளழகின் ஈடுபாட்டுத் துறையிலும், மரம் செடி கொடி மலர் பறவை விலங்கு ஆறு மலை காடு சோலை நாடு நகரம் என்னும் இயற்கைப் பொருள்களின் இயல்புகளை நுனித்துணர்ந்து காண்டலிலும்,

---

(3) "He who is not a seer cannot produce a great literature, 'Nanrish kurute Kavyam.' The intense concentration of mind is essential not only for saintliness but also for artistic creation. The impulse for great literature comes from a higher consciousness. The possession of our mind by a master-spirit is the phenomenon of inspiration......"

—Dr. S. Radhakrishnan, In a P.E.N. Conference.

(4) " The man that hath no music in himself,
Nor is not moved with concord of sweet sounds,
Is fit for treasons, strategems, and spoils;
The motions of his spirit are dull as night,
And his affections dark as Erebus
Let no such man be trusted ".

—William Shakespeare.

அவையிற்றின் அழகுகளையெல்லாம் இயல்நெறி திறம்பாமல் தன்மைநவிற்சி அமைய உள்ள வாறு விளக்கிப் பாடுதலிலும், இளங்கோவடி களும், சேக்கிழாரடிகளும் பெரிதொத்த நிலை யினராகக் காணப்படுகின்றனர். சிலப்பதிகாரத் தும், பெரியபுராணத்தும், ஆங்காங்கே போத ரும் அழகிய இனிய இயற்கைப் புனைவுப் பகுதி கள், இவ்வுண்மைக்குச் சான்று பகரும்.

இயற்கைப் பொருளின் அழகுகளைச் சுவை யொழுகக் காப்பியத்தின்கண் அமைத்துப் பாடும் திறனில், இளங்கோவடிகள் சேக்கிழாரடி கள் போன்ற சான்றோர் பெருமக்களுக்கும். பிற்காலக் கவிஞர்களுக்கும் இடையே பெரிதும் வேறுபாடுண்மை கருத்திற் பதிக்கற்பாலதாகும். இயற்கைப் பொருளின் இயல்புகளை நுனித்து நோக்கி யுணர்ந்து கொள்ளாமல், வெறும் வாய்பாடுமாத்திரத்தான் நூல்களிற் கற்றறிந்த வற்றையே திரும்பப்பாடிச் சென்றொழியும் பிற்காலத்துக் கவிஞர்களைப்போல் அன்றி, இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும், பொரு ளியல்புகளையெல்லாம் கூர்ந்து நோக்கி, ஓர்ந் துணர்ந்து ஆராய்ந்து தெளிந்து, புதுமை நலம் தோன்றப் பாடும் மதி நலஞ் சான்றோர் ஆவர்.

(9) இளங்கோவடிகள், தாம் சேரர் குலத் துத் தோன்றல் ஆயினும், ஏனைய சோழ, பாண்டிய வேந்தர்களின் நாடுகளையும், அவர் தம் அறனும் மறனும் ஆற்றலும் பண்பும் விளங்க, நடுவுநிலை சிறிதும் பிறழாது, பொதுமையுணர்வு மேல் ஓங்கிய நிலையிற் சேர நாட்டுடன் ஒப்ப வைத்துச் சிறந்தெடுத்துப் பாடியருள்கின்றார். இங்ஙனமே, சேக்கிழாரடி களும், தாம் சோழ நாட்டின் முதலமைச்சராகத் திகழ்ந்திருந்தனராயினும், ஏனைய பிறநாடுகளை யும் வேறுபாடின்றித் திறம் தெரிந்து நடுவு நிலை பிறழாது புகழ்ந்து பாடுகின்றார். அடியவர்கள் அனைவரையும், அவர்கள் எந்நாட்டாராயினும் எக்குலத்தின ராயினும், 'இவர் தேவர் அவர் தேவர் என்று, இரண் டாட்டாது ஒழிந்து, ஈசன் திறமே பேணி' வேறுபாடு சிறிதும் கருதாமல், ஒத்தநிலையின ராகவே வைத்து மதித்துப் போற்றிப் புகழ்ந்து பாடிப் பரவுகின்றார். இத்தகைய நடுவுநிலைப் பொதுமை நல்ல உணர்வில், இளங்கோவும் சேக்கிழாரும், எத்தகைய சிறு வேறுபாடுகளும் இன்றி இணைந்தியைந்து நிகரொத்துத் திகழு கின்றனர்.

(10) தேசிய கவிஞர் பாரதியார் பாராட்டிச் சிறப்பித்துப் பாடியதற்கு ஏற்ப, 'நெஞ்சை யள்ளும்' திறனில், இளங்கோவடிகளின் சிலப் பதிகாரம் போலவே, சேக்கிழாரின் திருத் தொண்டர் புராணமும், ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றிமை சான்று தலைசிறந்து திகழ்கின்றது. எளிமை, இனிமை, தெளிவு முதலிய நலங்கள் அமைந்து, சொற்பொருட் சுவைநலங்கள் மிகுந்து, இழுமெனும் இசையில் ஒழுகிய நடை யின் விழுமியது பயந்து, கலைத் திறங்கள் செறிந்து, இணையற்று இலங்கும் இலக்கியப் பெருமணிகளாக அறிவொளி பரப்புதற்கண், பெரியபுராணம், சிலப்பதிகாரம் என்னும் இவ்விரண்டும் தமக்கு உவமை தாமேயாக விளங்குகின்றன. தமிழ் நாட்டின் பழம் பெருஞ் சிறப்புகளையும், வரலாறுகளையும், பண்பாடுகளை யும் எல்லாம், நம்மனோர் தெளிந்துணர்ந்து கொள்ளுதற்கு இவ்விரு பெருமக்களின் நூல் களே, நமக்குச் செவ்விய துணைக்கருவிகளாகச் சிறந்தொளிர்கின்றன. தமிழ்நாட்டின் நாகரிகப் பண்பாட்டு நலங்களை உள்ளவாறு உணர்தற் குச் சிலப்பதிகாரம், பெரியபுராணம் போன்ற சிறந்த இலக்கியங்களே, தக்க ஆராய்ச்சிக் கருவிகளாகத் தலைமை முதலிடம் பெறத் தக் கனவாகும்.

சேக்கிழாரும் சங்கநூல்களும் :

சேக்கிழாரடிகள், சோழ நாட்டின் ''முதிர்ந்த கேள்வித் தொன்னெறி அமைச்சர்.'' அமைச்சர்க்குரிய பண்பு நலங்கள் பலவும் அமைந்து சிறந்தவர். ''மதிநுட்பம் நூலோடு உடையவர்''. ''ஆராய்ந்த கல்விச் செறிவு'' மிக்கவர். ''நுணங்கிய கேள்வி மேலோர்''. எனவே திருத்தொண்டர் வரலாறுகளையெல் லாம் திறம்தெரிந்து சிறந்தெடுத்துப் பாடிய அவர், பழந்தமிழகச் செய்திகளையும், பழந்தமிழ் நூற் பொருள்களையும் நுண்ணிதின் ஆராய்ந்து எண்ணிக் கற்றிருந்தாராதல் வேண்டும். மும்மையால் உலகாண்ட மூர்த்திநாயனர் வரலாற்றுள், மதுரைமாநகர் பற்றிப் பாட வருங்கால், பின்வரும் கருத்து அமையச் சேக் கிழார் பாடுகின்றார்.

''கலைத்துறைகளின் நிறைவுமிக்க இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழ்களும், தங்கி நிலைபெற்ற அழகிய இடத்தையுடைய அந்தப் பழமையான மதுரைமாநகரில், நூல்கள் பரவுகின்ற இடங்களில், செய்யுட்கள் பெருமை பெற்று அரங்கேறுகின்ற தமிழ்ச்சங்கங்களும்;

எருமைகள் மிகுதியாக வந்து பாய்ந்து படிவதனுல், அவற்றின் மடியினின்று சுரந்த பெருகும் பாலும், தாமரை மலர்களினின்று ஒழுகும் தேனும், கலந்து எங்கும் பரவுதலால், அவற்றை உண்டு கொழுத்த சேல்மீன்கள் துள்ளிப் பாய்கின்ற நீர்நிலைகளில், வயல்களில் மிகுதியாகத் தோன்றி, வரப்புகளில் ஏறுகின்ற வளைகள் ஆகிய சங்கங்களும் நிரம்ப உள்ளன''.

சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய
அங்கண் மூதூர்
நூல்பாய் இடத்தும் உள; நோன்றலை
மேதி பாயப்
பால்பாய் முலைத்தோய் மதுப்பங்கயம்
பாய எங்கும்
சேல்பாய் தடத்தும் உள; செய்யுள்
மிக்கேறு சங்கம்

இவ் வினிய செய்யுளின்கண் வரும் ''செய்யுள் மிக்கேறு சங்கம்''என்னும் சிறந்த தொடர், மிகவும் பொருள் நலம் மிகுந்தது. மதுரைமா நகரில் நூல்பாய் இடத்தும், சேல்பாய் தடத்தும், செய்யுள் மிக்கேறு சங்கங்கள் மிகுதியாக உள்ளன. மதுரை நகரத்திற் செய்யுட்கள் அரங்கேறப்பெறுகின்ற தமிழ்ச் சங்கம் அமைந்துள்ளது; அதன் வயல்களில் சங்குகள் மிகுதியாகத் தோன்றி உலவுகின்றன என்னும் செய்தியை, இருபொருட்டிறன் என்னும் சிலேடையணி அமைய, இப்பாடல் இனிது உணர்த்துகின்றது.

இம்மட்டோ! மதுரையின் சிறப்பையும், அதற்குக் காரணமாக அங்குத் தமிழ்ச் சங்கம் அமைந்திருந்ததனையும், அதன்கண் சிவபிரான் தலைமைப் புலவராக அமர்ந்து பணியாற்றிய தனையும், இறையனுர் களவியல் என்னும் நூல் இயற்றியருளியதனையும், இனிதெடுத்துக் குறிப்பிட்டுப் பின்வரும் கருத்து அமையப் பாடுகின்ருர் சேக்கிழார்.

''திருவாலவாய் என்னும் கோயிலில் எழுந்தருளி, எங்கள் பிறவியைத் தீர்த்தருள்பவர் ஆகிய சிவபெருமான், இறையனுர் என்னும் பெயருடைய புலவராக அமர்ந்து தலைமை தாங்கிச் சங்கம் இருந்து தமிழாராய்ந்ததும், மெய்ம்மைப் பொருளாம் தமிழ்நூலின் விளங்கு வாய்மை ஆகிய அகப்பொருள் இலக்கணத்தினை அழகுற விளக்கும் இறையனுர் களவியல் என்னும் நூலைத் தந்தருளியதும்; அதற்கு உரை காண்பதில் ஏற்பட்ட சங்கத்தார் கலகம் தீர்த்ததும், ஆகிய திருவிளையாடல்கள் நிகழ்வதற்கு ஏதுவாகப் பண்டைத் தமிழ்ச்சங்கம் அமைந்திருந்த தலம் மதுரையே யாகும். அந்நகரம் மூன்று உலகங்களிலும் தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத மேம்பாடு உடையது அன்ருே?''

மும்மைப் புவனங் களின் மிக்கது
அன்றே அம்மூதூர்!
மெய்ம்மைப் பொருளாம் தமிழ் நூலின்
விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார்
திருவால வாயில்,
எம்மைப் பவம்தீர்ப்பவர் சங்கம்
இருந்தது என்ருல்!

எனவரும் செய்யுளால், மதுரை மாநகரின்கண் 'தமிழ்ச்சங்கம்' அமைந்து விளங்கியிருந்த செய்திகளைப் புகழ்ந்து பாடியருளும் சேக்கிழார், சங்கத் தமிழ் நூல்களைத் தம் இளமையிற் கற்றுச் சுவைத்து மகிழ்ந்திருப்பார் எனத் துணியலாம் அன்ருே? சங்கத் தமிழ் நூல்களைச் சேக்கிழார் தமது இளமைப் பருவத்தில் தகவுறக் கற்றுச் சுவைத்து மகிழ்ந்திருப்பார் என்று துணிந்தனமாயின், நெஞ்சையள்ளும் செஞ்சொற் காப்பியமாம் சிலப்பதிகாரத்தினையும், அவர் கற்று மகிழ்ந்திருப்பார் எனக் கொள்ளலாம். அங்ஙனம் கொள்ளின், சிலப்பதிகாரத்தின் சொற்பொருட் கருத்துச் சாயல்கள் ஒருசிலவேனும், பெரிய புராணத்தி காணப்படுதல் கூடும். ஆதலின் அவற்றுள் ஒருசிலவற்றை மட்டும் ஈண்டுக் காண்போம்.

இமயத்திற் புலிக்கொடி :

(1) பழந்தமிழ்ச் சோழ வேந்தர்கள் இமயம் வரையிற் சென்று புலிக்கொடி பொறித்து மீண்டு வந்த செய்தியினை, அச்சோழநாட்டின் முதலமைச்சாக விளங்கியிருந்த சேக்கிழாரடிகள் பெருமிதம் தோன்றப் பாடுகின்ருர்.

பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன்.

பொன்மலைப் புலிநின் ருேங்கப்
புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியே ஆக
அயல்வழி அடைத்த சோழன்

எனவரும் பெரியபுராணப் பாடல்கள், சோழ வேந்தர்கள் இமயத்திற் புலிக்கொடி நாட்டிய செய்தியை வற்புறுத்துதல் காணலாம். இங்ஙனம், சேக்கிழார் பாடியருளியமைக்குரிய சான்றுகளுள்,

இருநில மருங்கிற் பொருநரைப் பெறுஅச்
செருவெங் காதலில் திருமா வளவன்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்,
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலை என,
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற்பெயர்வோன்,
இப்பால் இமயத்து இருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா, எப்பாலும்,
செருமிகு சினவேற் செம்பியன்,
ஒருதனிஆழி உருட்டுவோன் எனவே !

என்பன போல வரும் சிலப்பதிகாரப் பகுதிகள், குறிப்பிடத்தக்க சிறப்பினவாதல் ஒருதலை. சேக்கிழாரடிகள் மேலைச் சிலப்பதிகாரப் பகுதிகளைப் படித்துச் சுவைத்து மகிழ்ந்திருப்பார்! மகிழ்ந்ததன் பயனாகவே, சோழவேந்தர்கள் இமய வெற்பிற் புலிக்கொடி பொறித்த செய்தியைப் புகழ்ந்து பாடியிருப்பார் என நாம் கருதி மகிழலாம்.

கார் எனும் பருவ நல்லாள் :

(2) சேக்கிழாரடிகள், ஆனாய நாயனார் புராணத்துள், முல்லை நிலத்துக்குரிய கார் காலத்தினையும், மாலைப் பொழுதினையும் அழகுறப் புனைந்து பாடுகின்றார். கார் காலம் தோன்றினால் காட்டில் முல்லைப் பூக்கள் மலரும்; மயில்கள் ஆடும்; வண்டுகள் பாடும்; சிவந்த ஈயற் பூச்சிகள் தோன்றிப் பறக்கும். மேகங்கள் வானத்தில் திரண்டு கவியும். மாலை வேளைகளில் மின்னல்கள் தோன்றி அசைந்து பளிச்சிடும். இவ்வியற்கை நிகழ்ச்சிகளைப் பாடலுறும் சேக்கிழார், "கார்காலம் என்னும் அழகிய பருவ நங்கையானவள், மயில்கள் அகவவும், வண்டுகள் பாடவும், வெண்மையான முல்லை மலர்கள் பூக்கவும், சிவந்த நிறமுடைய இந்திர கோபப் பூச்சிகள் பறக்கவும், மின்னல்கள் இடையிடையே தோன்றவும், மாலை நேரத்தில் மேகங்கள் அசையும்படி, மழைக்காலம் ஆகிய பருவத்தில் வந்தாள்" என்னும் கருத்தமையப் பாடுகின்றார்.

நீலமா மஞ்ஞை ஏங்க
நிரைக் கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகைஏர் முல்லை
கோபம் வாய் முறுவல் காட்ட
ஆலும்மின் இடைசூழ் மாலைப்
பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ டரங்கில் ஆடக்
கார்எனும் பருவ நல்லாள்

"இத்தகைய அழகிய இனிய சாயல் நமக்கு இல்லையே என்று, மயில்கள் கண்டு மனத்தினில் ஏக்கம் கொண்டு நிற்கவும்; வரிசையாக நின்று, கொடி போன்ற இளம் பெண்கள் முல்லைப் பண்ணைப் பாடவும்; வெண்மையான முல்லை மலர்களே பற்களாகவும், சிவந்த நிறமுடைய இந்திர கோபம் என்னும் பூச்சிகளே எழில் கனிந்த இதழ்களாகவும் தோன்ற; மின்னலைப்போன்று நுடங்குகின்ற நுண்ணிய இடையுடன், தனது இளங்கொங்கைகள் அசையும்படி, உலகம் ஆகிய நாடகமேடையின்மீது, கார்காலம் என்னும் பருவ நலம் வாய்ந்த அழகிய இளம்பெண் வந்து சேர்ந்தாள்" என வேறொரு பொருளும் புலப்படுமாறு, உருவக முறையிற் சிறந்த சொல்லோவியம் ஒன்றைப் பெரிய புராணத்துள் அமைத்துக் காட்டுகின்றார் சேக்கிழார்.

இதனை ஒருபுடையே ஒத்து, இதனுடன் தொடர்பு உடையதோ என நம்மனோர் எண்ணுதற்கு இடனுண்டாமாறு,

"விரிகதிர் பரப்பி உலகம் முழுதாண்ட
ஒருதனித் திகிரி உரவோற் காணேன் !
அங்கண் வானத்து அணிநிலாத் திகழ்தரும்
திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்? எனத்
திசைமுகம் பசந்து செம்மலாக் கண்கள்
முழுநீர வார முழுமெயும் பனித்துத்
திரைநீர் ஆடை இருநில மடந்தை
அரைசுகெடுத் தலமரும் அல்லற் காலை"

எனவரும் இளங்கோவடிகளின் "அந்திமாலைச் சிறப்புச் செய்காதை" வரிகள், அழகுற அமைந்து விளங்குதல், ஒப்புநோக்கி யுணர்ந்து மகிழற்பாலனவாகும்.

"தனது கதிர்களைப் பரப்பி உலகம் முழுவதும் ஆண்ட, ஒற்றைச் சக்கரத்துத் தேரையுடைய சூரியன் ஆகியபேரரசன் மறைந்தான். அடுத்துத் தோன்றி, முடிசூடி ஆளுதற்குரிய

சந்திரன் ஆகிய இளவரசன் எங்கே இருக்கின்ருனே? தெரியவில்லையே என்று, திசை ஆகிய முகம் பசலை நிறம் அடைந்து, சிவந்த மலர் போன்ற கண்களினின்று நீர் பெருக, வானம் ஆகிய உடம்பு முழுவதும் பனி கொண்டு, கடல் ஆகிய ஆடையை உடுத்து, நிலம் ஆகிய அரசியானவள், தன் கணவனை இழந்து, செய்வது அறியாது திகைத்து வருந்துகின்ற அந்தி மாலைக் காலம்'' என்பது. இவ்வினிய வரிகளின் பொருள். சேக்கிழார் கார்காலத்தை ஒரு நடனப் பெண்ணாக உருவகம் செய்தது போலவே, இளங்கோவடிகள் அந்திமாலைக் காலத்தினை ஓர் அரசியாக உருவகம் செய்திருக்கும் கருத்தொப்புமையுணர்ந்து மகிழ்தற்குரியது.

புகைகளும், ஒலிகளும் :

(3) இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில், கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகர் நோக்கிச் செல்லுங்கால், மதுரை நகருக்குச் சிறிது தொலைவில் நெருங்கிக் கொண்டிருக்கும்பொழுது, அங்கே பலவகைப் புகைகள் வெளிப்படுதலைக் கண்டனர் என்கின்ருர். சமையலறைப்புகை, அப்பவாணிகன் அப்பம் சுடும் புகை, அந்தணர்கள் இயற்றும் வேள்விகளின் புகை, முதலிய பலவேறு இனிய நல்ல புகைகள், மதுரைமா நகரினின்று எழுந்து விசும்பிற் பரவி யுலவுதலைக் கோவலனும் கண்ணகியும் கண்டனர்.

அட்டிற் புகையும், அகல் அங்காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையும்
மைந்தரும் மகளிரும் மாடத்து எடுத்த
அந்தீம் புகையும் ஆகுதிப் புகையும்,
பல்வேறு பூம்புகை அளைஇ......

இங்ஙனமே, கோவலனும் கண்ணகியும் மதுரை நகரினை நெருங்கி மிகவும் அணித்தாக நடந்து சென்று கொண்டிருக்கும்போது, வைகறை ஆகிய விடியற்கால வேளையில், மதுரையினின்று எழும் பலவகை ஒலிகளைக் கேட்கின்றனர். "பாண்டிய மன்னனின் அரண்மனையிற் காலைவேளையில் அறையப்பெறும் முரசத்தின் ஒலியும், அந்தணர்கள் ஓதும் வேதங்களின் ஒலியும், முனிவர்கள் மந்திரங்களை ஓதி, வழிபடுகின்ற ஒலியும், நாட்காலையில் வாட்போர் வீரர்கள் எழுப்பும் முரசின் ஒலியும், யானைப் படைகள் பிளிறி முழங்கும் ஒலியும் ஆகிய ஒலிகள் பலவும், கடலின் ஒலியைப் போல அவர்களுக்குக் கேட்டன'' என்று இளங்கோவடிகள் பாடுகின்ருர்.

காலை முரசக் கனைகுரல் ஓதையும்
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்
மாதவர் ஓதி மலிந்த ஓதையும்
வாளோர் எடுத்த நாளணி முழவமும்
போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்
பணைநிலைப் புரவி ஆலும் ஓதையும்
கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்
கார்க்கடல் ஒலியிற் கேட்டனர்.........

இச்சிலப்பதிகாரப் பகுதிகளைப் படிக்கும் போது, சேக்கிழார் பாடல்கள் சிலவும் நம் நினைவுக்கு வருகின்றன. "சோழநாட்டு மாட மாளிகைகளையும் சோலைகளையும் பலவகைப் புகைகள் சூழ்கின்றன. அவைகள், கரும்பு ஆலைகளின் நறும் புகையோ, மகளிர் தம் கூந்தலுக்கு இடும் அகிலின் தூபமோ, யூபம் என்னும் தூண்களை நாட்டி நடத்தும் வேள்விகளின் புகையோ, வானத்திற் பரவும் மேகமோ, இவை தாம் என்று சுட்டிச் சொல்லல் அரிது'' என்கின்ருர் சேக்கிழார்!

கரும்படு களமர் ஆலைக்
 கமழ்நறும் புகையோ, மாதர்
கரும்பெழ அகிலால் இட்ட
 தூபமோ, யூப வேள்விப்
பெரும்பெயர்ச் சோலை தோறும்
 பிறங்கிய புகையோ, வானின்
வருங்கரு முகிலோ, சூழ்வ
 மாடமும் காவும் எங்கும்

கழறிற்றறிவார் என்னும் சேரமான் பெருமாள் நாயனர் வாழ்ந்து, அரசு செலுத்திய கொடுங்கோளூர் என்னும் சேரநாட்டுத் தலைநகரம் பற்றிப் பாடத் தலைப்படும் சேக்கிழாரடிகள், மதுரை நகரில் வைகறைப்பொழுதில் எழும் பலவகை ஒலிகளையும்பற்றி இளங்கோவடிகள் குறிப்பிட்டிருப்பதனை நினைவுகூரும் வகையில், பின்வருமாறு பாடியருளியிருத்தல் ஒப்பிட்டு உணர்ந்து மகிழ்தற்கு உரியது.

"கொடுங்கோளூர் என்னும் மலைநாட்டுத் தலைநகரத்தில், காலை நேரத்திற் பலவகை ஒலிகள் எழுகின்றன. கலைஞர்கள் பலரும் வைகறையிலேயே விழித்தெழுந்து, தத்தம் கலைகளைப்

பயிலுகின்ற ஒலியும்; 'வேழம் உடைத்து மலைநாடு' என்பராதலின், யானைப் படைகள் பிளிறுகின்ற ஒலியும்; சோலைகளில் மலருகின்ற பூக்களின் தேனையுண்டு மகிழ்ந்து மிழற்றுகின்ற வண்டுகளின் ஒலியும்; அரபிநாட்டினின்று வரும் குதிரைப் படைகள் அங்கு மிக்கிருத்தலால், அவைகள் கனைக்கின்ற ஒலியும்; மக்கள் ஒரு குறைவும் அற்று இன்புற்று வாழ்தலினால் நிகழ்கின்ற ஆடல் பாடல் முழவுகளின் ஒலியும்; கடலின் பேரொலியையும் விழுங்கி மிகுந்தெழும் முறையில் விளங்கி, எவரும் வியக்கும்படி திகழ்கின்றது கொடுங்கோளூர்'' எனப் பாடுகின்றார் சேக்கிழார்!

காலை எழும்பல் கலையினொலி,
　களிற்றுக் கன்று வடிக்குமொலி,
சோலை எழும்மென் சுரும்பினொலி,
　துரகச் செருக்காற் சுலவுமொலி,
பாலை விபஞ்சி பயிலுமொலி,
　பாடல் ஆடல் முழவினொலி,
வேலை ஒலியை விழுங்கிஎழ,
　விளங்கி ஓங்கும் வியப்பினதால்!

பாலைநிலப் புனைவு:

(4) கோவலன், கண்ணகி, கவுந்தி என்னும் மூவரும் உறையூரினின்று நீங்கி, வைகறையிற் புறப்பட்டுத் தென்திசை நோக்கிச் செல்கின்றனர். வழியில் ஓர் இளமரக்காவின்கண் தங்கினர். அங்கே மாங்காட்டு மறையோன் என்பவனைக் கண்டு அவன்பால் உரையாடினர். அவன் திருவேங்கடமும் திருவரங்கமும் கண்டு தொழுவதற்காகத் தான் வந்த செய்தியைக் கூறினான். அதுகேட்டு மகிழ்ந்த கோவலன், அவனை மதுரைக்குச் செல்லும் வழி யாது? என வினவினான். ''வெப்பம் மிக்க கொடிய இவ்வேனிற் காலத்தில், இப்பாலைநில வழியில் நடந்தோ, நீங்கள் மதுரை செல்லப் போகின்றீர்கள்?'' என நயந்து வினவி, மதுரைக்குச் செல்லும் நெறியை, அவன் கோவலனுக்குத் தெரிவிக்கின்றான். அப்பகுதியில்,

''முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்''

என்னும் அழகிய சிறந்த வரிகள் வருகின்றன. பாலைத் திணையின் இயல்பினை விளக்குதற்குச் சிவஞான முனிவர் முதலிய சான்றோர்கள் பலரும், இச்சிலப்பதிகார வரிகளையே, இலக்கண நூல்களில் மேற்கோள்காட்டுவர். தமிழ நாட்டில் தனியே பாலை என்று ஒரு நிலம் கிடையாது. வேனிற் கால வெப்பத்தினால், முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும், தம்வளம் குன்றித் திரிதலால், பாலை என்னும் நிலமாகத் தோன்றும். எனவே பாலைக்கு 'நடுவு நிலைத்திணை' என்றும் ஒருபெயர் உண்டு. பாலைத் திணைக்கு வேனிற்காலமும் நண்பகலும் முறையே பெரும் பொழுதும் சிறுபொழுதுமாக உரியன என்று கூறுவர். பின் பனிக் காலமும் பாலைக்குரிய பெரும்பொழுதாகும். இப்பாலை நிலத்திற்குரிய தெய்வமாக, ஞாயிற்றையும் வாயுவையும் ஒரு சிலர் கூறுவது உண்டு. கலித்தொகை என்னும் சங்க நூலின், பாலைத்திணை பற்றிய பாடல்கள், அவர்தம் கருத்திற்கு அரண் செய்யும். எனினும், கொற்றவையினையே பாலைத் திணைக்குரிய தெய்வமாக இளங்கோவடிகள் கொண்டார். ''வேட்டுவ வரி'' என்னும் சிறந்த பகுதியிற் பாலைநில வேடர்கள் கொற்றவையைப் பரவி வழிபட்டதாக அடிகள் பாடியிருத்தல் கொண்டு, இதனை யுணரலாம்.

ஆசிரியர் சேக்கிழார், இளங்கோவடிகளின் கருத்தினையே, தாமும் இயைந்து தழுவிப் பாடியருள்கின்றார். தமிழகத்திற் பாலைநிலம் என்பது ஒன்று தனியே இன்மையின், 'பாலையும் சொலல் ஆவன உள' என்றும்; அவை பரற்கற்கள் நிறைந்த முரம்பு நிலங்களாகும் என்றும்; முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்த பகுதிகளே பாலை என வழங்கப்படுமாதலின், அவற்றை 'முல்லையும் குறிஞ்சியும் அடுத்த சில இடங்கள்' என்றும்; சேக்கிழார் குறிப்பிடுகின்றார். அதற்குரிய தெய்வம் நீலி (காளி, துர்க்கை): பெரும்பொழுது வேனில்; சிறுபொழுது கடும்பகல்; எனச் சேக்கிழாரும் இளங்கோவைப் போலவே சிறந்தெடுத்துப் பாடுகின்றார்.

கோல முல்லையும் குறிஞ்சியும்
　அடுத்தசில் இடங்கள்,
நீல வாட்படை நீலி
　கோட்டங்களும் நிரந்து,
கால வேனிலிற் கடும்பகற்
　பொழுதினைப் பற்றிப்
பாலையும் சொலல் ஆவன
　உள, பரல் முரம்பு.

எனப் பெரிய புராணத்தில், திருக்குறிப்புத்

தொண்டநாயனார் வரலாற்றுத் தொடக்கத்தின் கண், தொண்டை நாட்டின் ஐந்திணை வளங்களும் பாடப்பெறும் பகுதியில் வரும் அழகிய இனிய பாடல் அமைந்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியதாகும்.

(5) இங்ஙனமே, திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றுத் தொடக்கத்தின்கண், தொண்டை நாட்டின் சிறப்பினைப் புகழ்ந்து பாடுங்கால், சேரநாடும் தொண்டை நாடும். தம்முள் 'மைத்துனக் கேண்மை' பேண நீடிய முறைமையின எனச் சேக்கிழார் மொழிகின்றார்.

ஆணையாம்என நீறுகண்டு
அடிச்சேரன் என்னும்
சேண் உலாவுசீர்ச் சேரனார்
திருமலை நாட்டு
வாள் நிலாவுபூண் வயவர்கள்
மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது
பெருந் தொண்டை நாடு.

என்பது பெரியபுராணச் செய்யுள். இங்ஙனம் சேக்கிழார் பாடியமைக்கு அடிப்படை, சிலப்பதிகாரமே ஆகலாம் போலும் எனத் தோன்றுகின்றது. சிலப்பதிகாரத்தில் வஞ்சிக் காண்டத்து, நீர்ப்படைக் காதையின் கண்,

மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
வளநாடு அழிக்கும் மாண்பினர் ஆதலின்
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்துப்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்!

எனவரும் வரிகளால், சேரன் செங்குட்டுவனுக்கு மைத்துனன் ஆகிய சோழன் ஒருவன் இருந்தான் என்பதும், இளவரசனாக இருந்த அம் மைத்துனச் சோழனுக்குத் தாயத்தார் சிலர் இடையூறு விளைத்து அரசை நிலைகுலையச் செய்து வந்தனர் என்பதும், நேரிவாயில் என்னும் இடத்திற் போர் நிகழ்த்திச் சேரன் செங்குட்டுவன் அத் தாயத்தார்களை வென்று அடக்கித் தன் மைத்துனச் சோழனின் ஆட்சி நிலைபெறுமாறு துணைபுரிந்தனன் என்பதும், அறியப்படுகின்றன. இவ்வாற்றால் சேரனுக்குச் சோழன் மைத்துனக் கேண்மையன் ஆதலும், சோழநாட்டின் ஒரு பகுதியாகவே தொண்டை நாடு மிகப் பழங்காலத்தில் விளங்கியதாதலும் கருதியே, சேரனின் மலைநாட்டு வாள்வீரர்கள் மைத்துனக்கேண்மை கொண்டாடத் திகழ்வது தொண்டை நாடு எனச் சேக்கிழார் பாடினராதல் வேண்டும்! இதற்குத் 'தொண்டை மண்டல சதகம்' என்னும் நூல், வேறொரு கதையைக் கூறுகின்றது. எனினும், இங்கு நாம் குறிப்பிட்டதும் ஒருவகையில் ஏற்புடைத்தென்று கொள்ளுதல் கூடும்.

பார்ப்பனவாகை :

பெரியபுராணத்துட் புகழ்ந்தோதப்பெறும் அறுபான்மும்மை நாயன்மார்களுள் சண்டேசுர நாயனார் ஒருவர். அவர் தோன்றியருளிய தலம் திருச்சேய்ஞலூர் என்பது. அங்கே மறையவர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். அவர்கள திருநீற்றின்பால் ஒன்றுபட்டு உறைத்த அன்பு கொண்டவர்கள். உபநயனத்திற்கு முன்பு ஒரு பிறப்பும், உபநயனத்திற்குப் பின்பு ஒரு பிறப்பும், ஆகிய இரண்டு பிறப்பின் சிறப்பினைப் பெற்றவர்கள். காட்டுத்தீ வீட்டுத்தீ ஞானத்தீ என்னும் மூன்று எரியினையும் வளர்த்துக் காப்பவர்கள். இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாகக் கற்றவர்கள். ஐந்து புலன்களுக்கு அடிமையாகி அவற்றின் பின்னே தாம்செல்லாமல், தமக்கு அவற்றை அடிமையாகக்கொண்டு, தம்பின்னே அவைகள் அடங்கிநின்று தொடர்ந்து வரப் பெறும் மேன்மை வாய்ந்தவர்கள். ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறு தொழில்களையும் தவறுமற் புரிந்து, உண்மையான ஒழுக்க நெறியில் நிற்பவர்கள். ஆதலின், ஏழு உலகங்களும் அம்மறையவர்களைப் புகழ்ந்து போற்றும் என்று, எண் அலங்காரம் என்னும் அணி நலம் அமையுமாறு, சேக்கிழாரடிகள் அத்தலத்தினைப் புகழ்ந்து பாடியருள்கின்றார்.

செம்மை வெண்ணீற்று ஒருமையினார்;
இரண்டு பிறப்பின் சிறப்பினார்;
மும்மைத் தழல்ஓம் பியநெறியார்;
நான்கு வேதம் முறைபயின்றார்;
தம்மை ஐந்து புலனும்பின்
செல்லும் தகையார்; அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும்
போற்றும் மறையோர் விளங்குவது!

இப்பகுதியானது, சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்துள் கட்டுரைகாதை என்னும் பகுதி யின்கண், மதுராபதித் தெய்வம், பாண்டிய வேந்தரின் பழம்பெரும் செங்கோற் பண்பினை யெல்லாம், கண்ணகிக்கு எடுத்துக்கூறி விளக்கியதாக வரும் பகுதியில், பராசரன் என்னும் பார்ப்பனன் ஒருவனைப் பற்றிக் குறிப் பிடுவதாக வரும் பகுதியை நினைப்பிக்கும் வகை யில் அமைந்துள்ளது.

பராசரன் என்னும் அந்தணன், வீடுபேறு விரும்புதல் ஆகிய ஒன்றுபுரி கொள்கையினன்; கல்வித் தொடக்க நிலைக்கு முன்னர் ஒரு பிறப் பும், அதன்பின்னர் ஒரு பிறப்பும் ஆகிய இரு பிறப்பை யுடையவன்; ஆகவனீயம் காருக பத்தியம் தக்கிணாக்கினி என்னும் மூன்று நெருப்பை வளர்த்து வருபவன், நான்கு வேதங் களையும் முறையே முழுதும் கற்றவன், கடவுள் வேள்வி முனிவர்வேள்வி உயிர்வேள்வி மனித வேள்வி தென்புலத்தார் வேள்வி என்னும் ஐந்து பெரு வேள்விகளையும் செய்து ஒழுகு பவன்; ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித் தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறு தொழில்களை யும் தவறுமற் புரிபவன். இதனை,

ஒன்றுபுரி கொள்கை இருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்முறை முற்றி
ஐம்பெரு வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில் அந்தணர் பெறுமுறை வகுக்க
நாவலங் கொண்டு நண்ணூர் ஒட்டிப்
பார்ப்பன வாகை சூடினன்........;

எனச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், எண் அலங்காரம் என்னும் அணியமையப் பாடு கின்றார். மேலைப் பெரியபுராணப் பாடலும், இச்சிலப்பதிகார வரிகளும், தம்முட் பெரி தொத்து விளங்குதல் நினைத்து மகிழ்தற் குரியது.

அருமந்த அரசாட்சி ;

(7) மதுரை மாநகரிற் கோவலன் கொலை யுண்டதும், கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என வழக்குரைத்ததும், அதனால் தன் தவறுணர்ந்து கலங்கிய பாண்டியன் நெடுஞ் செழியன் தன் உயிர் துறந்ததும் ஆகிய செய்தி களைச் சேரவேந்தன் ஆகிய செங்குட்டுவன் கேள்வியுற்று, மிகவும் மனம் வருந்துகின்றான். அப்போது செங்குட்டுவன்,

மழைவளம் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயிர் எய்திற் பெரும்பேரச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்லை

என அரசாட்சிப் பொறுப்பினால் ஏற்படும் அச் சம் கவலை முதலிய அலக்கண்கள் குறித்துக் கூறுவதாக வரும் பகுதி,

மாநிலங் காவலன் ஆவான்
மன்னுயிர் காக்கும் காலைத்
தான் அதனுக்கு இடையூறு
தன்னால், தன் பரிசனத்தால்,
ஊனமிகு பகைத் திறத்தால்,
கள்வரால், உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து
அறங்காப்பான் அல்லனோ ?
ஒருமைந்தன் தன்குலத்துக்கு
உள்ளான் என்பதும் உணரான்
தருமந்தன் வழிச்செல்கை
கடனென்று தன்மைந்தன்
மருமம் தன் தேராழி
உறவூர்ந்தான் மனுவேந்தன் !
அருமந்த அரசாட்சி
அரிதோமற் றெளிதோதான் ?

என்னும் அரிய பெரியபுராணப் பாடல்களை, நம் மனோர் நெஞ்சிற் கொணர்ந்து நமக்கு நினைப் பூட்டி மகிழ்விக்கும் தகைமையதாய் விளங்கு தல் காண்கின்றோம் அல்லமோ ?

இசைக்கலை நுட்பங்கள் :

இளங்கோவடிகள் இசைக்கலைப் புலமை நிரம்பியவர் என்பதும், அவர்தம் சிலப்பதி காரம் இசைக்கலை ஆராய்ச்சிக்குரிய கருவூல மாக இன்றும் விளங்கி வருகின்றது என்பதும், தமிழுணர்வு பெற்றோர் அனைவரும் நன்கறிந்த தொன்று. அருட்டிரு விபுலானந்த அடிகளார் அண்மையில் இயற்றியருளிய "யாழ் நூல்" என்னும் அரும் பெறல் ஆராய்ச்சி நூல், இவ் வுண்மையை மலையிலக்கென விளக்கா நிற்கும். இங்ஙனமே சேக்கிழார் பெருமானும் இசைக் கலையில் நிரம்பிய புலமை கைவரப் பெற்றவர் என்பது, பெரிய புராணத்தாற் புலனாகின்றது.

அவற்றுள் ஓரிடம் மட்டுமே காண்டல் ஈண்டைக்கு அமையும்.

திருவைந்தெழுத்தை உள்ளுறையாகக் கொண்டு, வேய்ங்குழல் வாசித்து, ஆனாய நாயனார் சிவபிரானை வழிபட்ட திறத்தினைச் சேக்கிழார் தமது இசைக்கலைப் புலமை நுண்ணுணர்வு வளம் விளங்கப்பாடியருள்கின்றார். "ஆனாயர் ஏழுவிரல் இடையிட்ட இன்னிசை வங்கியம் (Flute) எடுத்தார். அதன் துளைகளில் அழகிய தம் இதழ்களை வைத்து, மலர்களில் வண்டுகள் மகரந்தப் பொடியினைக் கவருங்காற் செய்வதுபோல முரலுதல் - எழுதல் - நிற்றல் என்பன செய்து ஊதினார். முத்திரை முதலிய அனைத்து முறைத் தானங்களையும் சோதித்தார். வைத்ததுளை ஆராய்ச்சி வக்கரனைவழி போக்கி ஏற்ற நிலையுணர்ந்தார்' உணர்ந்ததற்பின் சட்சம் இடபம் காந்தாரம் மத்திமம் பஞ்சமம் தைவதம் நிஷாதம் என்னும் ஏழு சுரங்களின் படிமுறையாகிய வரிசையினை ஆரோசை (எச்சு, ஆரோகணம்), அமரோசை (தக்கு, அவரோகணம்) என்னும் ஓசைப்பாடுகளில் அமைத்தார். மாறிவரும் குறிஞ்சிப் பண்ணின்பின் முல்லைப் பண்ணைத் தோற்றினார். பாலை யாழுக்கு அமைந்த தாரம் உழை என்னும் இரண்டும் கிழமை கொள்ள இடும் தானங்களில், இளையைக் குரல்எனக்கொண்ட பட்டடைக் குரல்ஆகிய கொடிப் பாலையில் நிறுத்தினார். பண் பண்ணியல் திறம் திறத்திறம் என இசையிற் புகல் நான்கிலும், ஆயத்தம் எடுப்பு உக்கிரம் சஞ்சாரம் இடாயம் என்னும் ஐந்து துறைகளிலும் ஏற்ற முறைகளை விளைவித்தார். மந்தரம் (மெலிவு), மத்திமம் (சமன்), தாரம் (வலிவு) என்ற மூவகைச் சுருதிகளிலும், சுரத்தானத்துக்கு உரிய துளைகளை உரிய அளவு பெறும்படி விரல்களால் அசைத்து இயக்கினார்.

எண்ணியநூற் பெருவண்ணம்
இடைவண்ணம் வனப்பு என்னும்
வண்ண இசை வகையெல்லாம்
மாதுரிய நாதத்தில்
நண்ணிய பாணியும் இயலும்
தூக்கும் நடைமுதற் கதியில்
பண்ணமைய எழும் ஓசை
எம்மருங்கும் பரப்பினார்

இங்ஙனம் பல இசைநுணுக்கக் குறிப்புகள் அமையவரும் பெரியபுராணப் பகுதிகள், இளங்கோவடிகளைப் போலவே சேக்கிழாரடிகளும் இசைக்கலைப் புலமையும் ஈடுபாடும் மிக்கவராக விளங்கிய செய்தியினைப் புலப்படுத்தும்.

பத்தினிப் பெண்டிர் வரலாறு :

(9) சிலப்பதிகாரம் வஞ்சினமாலை என்னும் பகுதியிற் கண்ணகியானவள், பத்தினிப் பெண்கள் எழுவரின் வரலாறுகளைக் குறிப்பிட்டு, அத்தகைய கற்புநலஞ்சான்ற "மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன், பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே யாம்ஆகில், ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும், என் பட்டிமையும் காண்குறுவீர்" எனச் சூள் உரைத்து வஞ்சினம் சாற்றுகின்றாள். அவ்விடத்தில்,

"நற்பகலே
வன்னிமரமும் மடைப்பளியும் சான்றாக
முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள்"

எனவரும் வரிகள், சிலப்பதிகார காலத்திற்குப் பின்னர்த் திருஞானசம்பந்தப் பெருமான், வைப்பூர்த்தாமன் என்னும் வணிகனின் மகள்பால் இரக்கம்கொண்டு, அரவு தீண்ட இறந்த அவள்தன் அருமைக் காதலனைத் திருமருகல் என்னும் தலத்தில் திருப்பதிகம் பாடி உயிர்பெற்றெழச் செய்து, காத்தருளியதாகப் போதரும் பெரியபுராண வரலாற்றினை, ஒருபுடைக் கதையொப்புமை பற்றி, ஓராற்றால் நினைவூட்டா நிற்கின்றன.

மனுநீதிச் சோழன் :

(2) இனி, ஆசிரியர் சேக்கிழாரடிகள் தமது பெரியபுராணத்துள் திருநகரச் சிறப்பின் கண், மனுநீதிச்சோழன் வரலாற்றினை மனமுருகவும், சுவைநலங்கள் பெருகவும், அழகுறப் பாடியருளி இருக்கின்றார்! இவ்வாறு அவர் பாடியிருத்தற்கு அடிப்படைக் காரணமும், சான்றும் சிலப்பதிகாரமேயாகும் என நாம் தயங்காது துணிந்து கூறலாம்.

"புறவு நிறைபுக்கோன்,
கறவை முறைசெய்தோன்" (1)

"எள்ளறு சிறப்பின்
இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண்
தீர்த்தோன் ; அன்றியும்

ஆவின் கடைமணி உகும்நீர்
நெஞ்சுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை
ஆழியின் மடித்தோன்'' (2)

"புறவுநிறை புக்குப்
பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த
கொற்றவன்யார் அம்மானை?
குறைவில் உடம்பரிந்த
கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த
காவலன்காண் அம்மானை! (3)

எனச் சிலப்பதிகாரத்துள், ஆங்காங்கு இடையிடையே வரும் சில வரிகளின் விரிவான பொருள் விளக்கமாகவே, பெரிய புராணத்துள் மனுநீதிச் சோழனின் வரலாறு, சோணுட்டமைச்சராய சேக்கிழாராற் சிறப்புறப் பாடப் பெற்றுள்ளது. 'கறவை முறை செய் காவலன்' என்னும் குறிப்பு, சிலப்பதிகாரத்தின்கண் தான் முதன்முதற் காணப்படுகின்றது. எனவே, சேக்கிழாரடிகள், நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் செஞ்சொற்சுவை நலங்களில் ஈடுபட்டு மகிழ்ந்ததன் பயனாகவே, மனுவேந்தனின் அரிய வரலாற்றினை அழகிய முறையில் தமது நூலுட்சுவை துளும்பப் பாடியருளினர் எனத் துணிதல் பொருந்துவதேயாகும்.

மற்றும் சில மாட்சிகள் :

இம்மட்டோ! கோவலனும் கண்ணகியும் புணர்ந்து மகிழ்ந்தனர் என்னும் செய்தியினை இடக்கர் அடக்கித் "தாரும் மாலையும் கையற்று மயங்க'' என நுட்பமும் சுருக்கமும் அமைய இளங்கோவடிகள் நுவன்றிட்டார். அவ்வாறே திருநீலகண்டர் பரத்தைபால் அணைந்து போந்த செய்தியினை "இளமை மீதூர இன்பத் துறையினில் எளியரானர்'' எனச் சேக்கிழாரடிகள் நயத்தக்க நாகரிக நலம் தோன்றக் கூறியிருக்கும் மாட்சிமையினை என்னென்பேம்!

மதுரையிற் பாண்டிய மன்னன் உயிர் துறந்த தனையும், அவனுக்கு நேர்ந்த பழிச் சொல்லினையும், "தென்னர் கோமான் தீத்திறம்'' என்றும், "செம்மையின் இகந்த சொல்'' என்றும் செங்குட்டுவன் குறிப்பிட்டதாக, இளங்கோவடிகள் இயம்புகின்றார். இம்முறைமைக்கு ஏற்பவே "முன் நின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்'' எனவும், "தான் நினைந்த அப் பரிசே செய்தான்'' எனவும் சேக்கிழாரடிகள் தெரிவிக்கின்றார். இவ்வருமைப்பாடு எண்ணுந் தோறும் நம் மனத்தை உருக்கி இன்பம் பயக்கின்றதன்றோ?

மேலும், பெண்மையழகின் இயல் நலங்களைப் பிற்காலக் கவிஞர்கள் பாடும் முறைகளுக்கும், இவ்விருவரும் பாடும் முறைக்குந் தான், எத்துணைப் பெரு வேறுபாடு உள்ளது! தமது உயர்ந்த தவவொழுக்கமேம்பாட்டிற்கும், மிக மேலான சான்றாண்மை நலங்களுக்கும், சற்றும் மாறுபடா வகையில், தூய்மையுணர்வே சிறந்து விளங்குமாறு இளங்கோவும், சேக்கிழாரும் புனைந்து பாடக் காண்கின்றோம்! மாதவியானவள் தன்னை அடிமுதல் முடிகாறும் அழகுபடுத்தி ஒப்பனை செய்துகொண்ட வகைகளையெல்லாம் வகுத்துக் கூறும் கடலாடு காதைப் பகுதியும் (75—110), திருஞானசம்பந்தரால் உயிர்பெற்ற திருமயிலைப் பூம்பாவை அழகினுக்கு அணியாய் நின்ற தன்மைகளை விதந்து புகழ்ந்து கூறும் (1095-1109) பெரிய புராணப் பாடல்களும், இவ்வுண்மையைச் செவ்விதின் வற்புறுத்துவனவாகும்.

முடிவுரை :

இளங்கோவடிகளுக்கும், சேக்கிழாரடிகளுக்கும் இடையே, இன்னோரன்ன பலகருத்தொப்புமைகளும், பண்பொப்புமைகளும் காணப்படுதலை, ஒப்புமையாய்வு முறையினாற் கண்டுணர்ந்து, அவ்விருவர் தம் நூல்களையும் பல்காற் பயின்றோதிச் செவ்விதிற் சுவைத்து மகிழ்ந்து, நாம் அனைவரும் தமிழ்ச் சைவ நலங்களெல்லாம் பெற்று, நன்கினிது வாழ்ந்து உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்

★

வடலூர்ச் சத்திய ஞானசபை நூற்றாண்டு விழா

வாழ்த்துரை

மாண்புமிகு திரு. எம். கண்ணப்பர் அவர்கள், அறநிலைய அமைச்சர், தமிழ்நாடு அரசு

★

''ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே''

எனப் பிசிராந்தையார் என்னும் சங்க காலப் புலவர், புறநானூற்றுப் பாடல் ஒன்றில் குறிப்பிட்டார். அம்முறையில், தமிழ்நாடு சான்றோர்கள் பலர் தோன்றியருளிய நாடு. அங்ஙனம் தமிழ் நாட்டில் தோன்றியருளிய சான்றோர்களின் வரிசையில், தலைசிறந்த ஒருவராக அண்மைக் காலத்தில் தோன்றியவர், அருட்டிரு இராமலிங்க அடிகளார் ஆவர்.

''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ'' என அவரே, தமது திருவருட்பாவிற் குறிப்பிட்டிருக்கின்றார். இராமலிங்க அடிகளார், தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பலவகைகளில் சிறந்த தொண்டுகள் ஆற்றியுள்ளார். தமிழ் மொழியானது இயல்பிலேயே இனிமை வாய்ந்த சிறந்த மொழி. இராமலிங்க அடிகளார் எளிமையாகவும், தெளிவாகவும், உருக்கமாகவும், உணர்ச்சியாகவும் பாடியுள்ள திருவருட்பா என்னும் தெய்விகப் பாடல்களால், தமிழ் மொழியானது மேலும் மிக்க இனிமையும் சிறப்பும் பெறச் செய்துள்ளார்.

தமிழ் மொழிக்கே யுரிய இனிமை-எளிமை-தெளிவு-தெய்விகம் என்னும் சிறப்பியல்புகள், திருவருட்பா என்னும் செந்தமிழ்க் கலைப் பெருஞ் கருவூலத்தில் ஒருங்கு கலந்து நிரம்பித் திகழ்கின்றன. இறையருட் புகழ்த் துதி நூல்களுள், உலக இலக்கியங்களில் ஒன்றாக மதித்துப் போற்றத்தக்க மாட்சிமை உடையதாகத் திருவருட்பா திகழ்கின்றது.

இராமலிங்க அடிகளார் ஒரு சிறந்த பெருங் கவிஞர், சான்றோர். அருளாளர், சித்தர், தத்துவஞானி, என்றெல்லாம் சொல்லத்தக்க நிலையில் திகழ்கின்றார். இலக்கணத் துறையில் அவர் ஒரு தொல்காப்பியர். உலகப் பொதுமையுணர்வில் திருவள்ளுவர். தொண்டின் திறனில் திருநாவுக்கரசர். ஓதாதுணர்ந்த ஞானத் திறனில் திருஞானசம்பந்தர். பக்தியுணர்வு நெறியில் மாணிக்கவாசகர். யோக அநுபவ நலனில் திருமூலர் போன்ற ஒரு பெரும் சித்தர்.

இராமலிங்க அடிகளார் மிகச் சிறந்த உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் விளங்கியிருக்கின்றார். ஒழிவிலொடுக்கம் என்னும் நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுளுக்கு, அவர் வரைந்துள்ள உரையின் நுட்பமும் திட்பமும் நயமும் பெரிதும் போற்றத் தக்கவை. தொண்டமண்டல சதகம், ஒழிவிலொடுக்கம், சின்மயதீபிகை முதலிய தமிழ் நூல்களை, இராமலிங்க அடிகளார் இனிது ஆராய்ந்து பதிப்பித்திருக்கின்றார்.

தமிழில் உரைநடை நூல்கள் அதிகம் இல்லாதிருந்த காலத்தில், மனுமுறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் முதலிய சிறந்த உரைநடை நூல்களை அடிகளார் எழுதியிருக்கின்றார். தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு இவற்றின்மூலம், அடிகளார் பெருந்தொண்டு ஆற்றியிருக்கின்றார்.

அடிகளார் மிகச் சிறந்த தேசபக்தியும் உடையவராக விளங்கினார். ''கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக, அருள் நயந்த சன்மார்க்கர் ஆள்க'' என நூருண்டுகளுக்கு முன்னரே, அடிகளார் ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் பாடியிருத்தல் போற்றுதற்குரியது.

இராமலிங்க அடிகளார் ஓர் ஒப்புயர்வற்ற சீர்திருத்தச் செம்மல்! குருட்டுப் பழக்க வழக்கங்களை எல்லாம் பெரிதும் கடிந்து ஒதுக்கியவர். ''கலை உரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக'' என்று பாடியிருப்பதனால், அவர்தம் சீர்திருத்தச் செந்நெறியும், புரட்சி மனப்பான்மையும் இனிது விளங்கும்.

அடிகளார் சாதிபேதம் சமய பேதங்களை வெறுப்பவர்; சமய வாதமும் பேதமும் கடந்தவர்; ''எம்மதமும் சம்மதமே'' என்ற சமரச ஞான நன்னெறியைக் கடைப்பிடிப்பவர். ''சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே, ஆதியிலே அபிமானித் தலைகின்ற வுலகீர், அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே'' என்று, கருங்கல் மனமும் கரைந்து உருகும்படி, எத்தனையோ பல பாடல்களைப் பாடியிருக்கின்றார். இவற்றினாலெல்லாம் அவர் தம் சீர்திருத்த நெறியும், உலக நலம் குறித்த தொண்டுள்ளமும் புலனாதல் காணலாம்.

மக்களிடையில் எத்தகைய பேதமும் இருத்தல் கூடாது என்பது, அடிகளாரின் அருளுரை. சாதி வேறுபாடு, சமய வேறுபாடு, இனவேறுபாடு முதலிய வேறுபாடுகள் அனைத்தும் நீங்கி, மக்களெல்லாம் அன்பினால் ஒன்றுபட்டு வாழ்தல் வேண்டும் என அடிகளார் பெரிதும் விரும்பினார். அதனால் உலக மக்களிடையில் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையினை அடிகளார் பெரிதும் வற்புறுத்தினார். எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமல், எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டுதல் வேண்டும் என அறிவுறுத்தினார். ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்று அவர் பாடியிருக்கின்றார். அதனால் அவர்தம் இரக்க உள்ளம் எத்தகையது என்று உணரலாம்.

''அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல்
வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல்
வேண்டும்''

என்று, இறைவனை அவர் வேண்டிக் கொண்டிருத்தலால், அவருடைய கருணை உள்ளம் நமக்கு விளங்குகின்றது. ''என்போல் இவ்வுலகும் பெறுதல் வேண்டுவனே'' என்று, உலகப் பொதுநலம் குறித்து, அடிகளார் இறைவனை மன்றாடுகின்றார்.

இத்தகைய சிறந்த பெருஞ் சான்றோரும், சித்தர் பெருமானுமாகிய இராமலிங்க அடிகளார், இவ்வுலகில் துன்மார்க்கங்களைப் போக்கி, சன்மார்க்கத்தைப் பரப்பி, சத்தியத்தையும் ஞானத்தையும் உலக மக்களுக்குப் போதித்துச் சீர்திருத்தி நன்மை புரிவதற்காகவே, ''சத்திய ஞான சபை'' என்னும் மிகச் சிறந்த அமைப்பினை, நூருண்டுகளுக்கு முன்னரே, இங்கே வடலூர்ப் பெருவெளியில் தோற்றுவித்தருளினார். இந்தச் ''சத்திய ஞான சபை'' ஒரு நூற்றுண்டுக் காலமாக நின்று நிலைபெற்றுச் சிறந்த தொண்டுகள் ஆற்றி வந்துள்ளது. அடிகளார் மறைந்தருளிய போதிலும், அவரது சத்திய ஞான சபை வளர்ந்து நிலைபெற்றுத் தொண்டாற்றி வருவது, நாம் பெரிதும் மகிழ்ந்து போற்றுதற்குரிய தொன்றாகும்.

அடிகளார் தோற்றுவித்தருளிய சத்திய ஞானசபை, இன்னும் ''பலகோடி நூறாயிரம் ஆண்டுகள்'' நின்று நிலைபெற்று, நம் தமிழ் நாட்டிற்கு மட்டுமேயன்றி, உலகம் முழுவதற்கும் சிறந்த தொண்டுகளை ஆற்றி, **அடிகளார் வகுத்த சத்தியஞான சன்மார்க்கக் கொள்கைகளை மக்களுக்கெல்லாம் உணர்த்தி, மனித குலம் ஈடேற எல்லா வகையான நலன்களும் விளைவித்தல் வேண்டுமென்று, இந்தத் தைப்பூசமாகிய நல்ல நாளில், எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.**

வளர்க சத்திய ஞானசபை!

வாழ்க இராமலிங்க அடிகளார் புகழ்!!

உ

தில்லைச் சிவகாமியம்மை கோயில் திருக்குடமுழுக்கு விழா

வாழ்த்துரை

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A. B.L., I.A.S.,

ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை

நமது தமிழ்நாடு, பழமையும் பெருமையும் வாய்ந்த எண்ணிறந்த பல தலங்களையும், கோயில்களையும் பெற்று விளங்குகின்ற தெய்விகத் திருநாடு ஆகும். ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவதரித்து, தமது கால் தரை தோய நடந்து தரிசித்து மகிழ்ந்தும், திருவருள் நலம் நிறைந்த தமது செந்தமிழ்த் திருப்பாடல்களால் துதித்துப் போற்றிச் சிறப்பித்தும் உள்ள திருத்தலங்கள் பற்பல, நம் தமிழ் நாட்டின் பெருமைக்கும் புகழுக்கும் காரணமாக நிலை பெற்று விளங்கி வருகின்றன.

அவைகளுள் எல்லாம், சிதம்பரம் என்னும் திருத்தலம் மிகவும் தலை சிறந்து திகழ்ந்து வருகின்றது. எத்தனையோ பல கோயில்கள் இருப்பினும், 'கோயில்' என்று பொதுவாகக் குறிப்பிடுங்கால், அது சிதம்பரம் என்னும் தில்லைத் தலத்தையும், அங்கு எழுந்தருளியுள்ள சபாநாயகர் எனப்படும் நடராசப் பெருமானின் திருக்கோயிலையுமே சிறப்பாகக் குறிப்பிடும். வைணவ சமயத்தில் கோயில்' என்ருல் திருவரங்கம் கோயிலையே குறிப்பது போல, சைவ சமயத்தில் 'கோயில்' என்பது சிதம்பரம் கோயிலையே குறிக்கும். சைவத் திருமுறைகளில் எல்லாம் சிதம்பரம் என்னும் திருத்தலம், 'கோயில்' என்றே குறிக்கப் பெற்றிருத்தல் காணலாம்.

சிதம்பரம் கோயில் மிக மிகப் பழமையான தொன்ருகும். அத் தலத்தின் பெருமை, வடமொழி வேதாகம உபநிடதங்களிலும், தென்றமிழ் மொழியில் சைவத் திருமுறைகள் முதலிய பலவற்றிலும், பெரிதும் புகழ்ந்து போற்றப்பட்டுள்ளது. நடராசப் பெருமானது திருவுருவத்தின் சிறப்பினை, இந்நாளில் அனைத்துலக நாடுகளிலுள்ள அறிஞர்கள் அனைவரும் விரும்பி வியந்து பாராட்டி மகிழ்கின்றனர். பல்லவர் சோழர் பாண்டியர் விசயநகர அரசர்கள் ஆகிய பலரும், இக்கோயிலின்பால் ஈடுபட்டு, வழிவழியாகத் திருப்பணிகள் செய்து தொண்டு பூண்டு உய்ந்துள்ளனர்.

இத்தலம் சைவர்களுக்கு மட்டுமேயன்றி, வைணவர்களுக்கும் ஒரு சிறந்த திவ்விய தேசமாக விளங்கி வருகின்றது. ''தில்லைத் திருச்சித்திரகூடம்'' என்று குலசேகர ஆழ்வாரும், திருமங்கையாழ்வாரும், இத் தலத்திற்கு மங்களாசாசனம் செய்து மகிழ்ந்துள்ளனர். எனவே சைவ-வைணவ சமரச ஞானத்திற்குச் சிதம்பரம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கி வருகின்றது.

இத்தகைய பல பெருஞ் சிறப்புக்களை உடைய சிதம்பரம் சபாநாயகர் கோயிலில், சிவகாமியம்மை சந்நிதி தனிப்பெரும் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகின்றது. பெரியபுராணம் அருளிச் செய்த சேக்கிழார் பெருமான் காலத்தில் விளங்கியிருந்த, இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133-1150) என்னும் அநபாய

சோழன், சிவகாமியம்மையின் சந்நிதியினை மிகப் பெருஞ் சிறப்பாகவும், அழகு ஓங்கவும் அமைத்தருளினான். இதன்கண், காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரும் அரிய அழகிய நடனக் கலைச் சிற்பங்கள் பற்பல அற்புதமாகச் செதுக்கப் பெற்று மிளிர்கின்றன. அருங் கலை நுண்ணறிஞர்கள் அனைவரும், இவற்றைக் கண்டு வியந்து அகமகிழ்ந்து போற்றுகின்றனர்.

இத்தகைய இணையற்ற எழிற் சிற்பக்கலை நலம் வாய்ந்த, சிவகாமியம்மையின் சந்நிதிக்குத் திருப்பணிகள் செய்யப்பெற்று, அண்மையில் 6-2-72 ஞாயிறன்று திருக்குட முழுக்கு விழா சிறப்புற நடை பெற்றமை, அன்பர்களுக்கெல்லாம் மிக்க பெரும் மகிழ்ச்சி யளிக்கும் அரும் பெரும் நிகழ்ச்சியாகும்.

சிவகாமி யம்மையாகிய உலகன்னையே, இவ்வுலகுயிர்களை யெல்லாம் தன்னுடைய எல்லையற்ற பெருங் கருணையினால், போற்றிக் காப்பாற்றி வருகின்றாள். நடராசப் பெருமான், ஆனந்தப் பெருங்கடல்! அக்கடலில் திளைத்து ஆடுகின்ற அன்னப் பறவையாகச் சிவகாமி யம்மை திகழ்கின்றாள். பல்லாயிரக் கணக்கான உலகங்களாகிய அண்டங்களை (முட்டைகளை), தனது திருவயிற்றினின்று ஈன்றெடுப்பவள் அவளே. அவற்றில், சரம் அசரமாகிய ஈர்ங் குஞ்சுகளை வெளிப்படச் செய்து, அவற்றைத் தன் இரு கைகளாகிய சிறகுகளால் அருளோடு அணைத்து, அவற்றுள் ஒவ்வொரு குஞ்சுக்கும் ஏற்ற இரை தேர்ந்து அளித்து உண்பித்துக் காப்பாற்றி வருபவள், சிவகாமி என்னும் சிறந்த உலகன்னையே ஆவள்!

"வன்னம் செறி வளைக்கைச் சிறகால்,
தன் வயிற்றினுள் வைத்து,
இன்னம் சராசர ஈர்ங்குஞ்சு
அணைத்து, இரைதேர்ந்து அருத்திப்,
பொன்னம் பலத்துள்ஓர் ஆனந்த
வாரி புக்கு ஆடும் பச்சை
அன்னம் பயந்தன கொல்ஆம்!
பல்லாயிர அண்டமுமே!"

எனவரும் பாடலில், குமரகுருபர அடிகள் சிவகாமியம்மையின் திருவருட் சிறப்பினைப் போற்றித் துதித்திருத்தல் காணலாம்.

இத்தகைய திருவருட் சிறப்பு மிக்க உலகப் பேரன்னையாகிய சிவகாமியம்மையின் திருவருளால், உலகிற் பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரந்து, உலக மக்கள் அனைவரும் இன்புற்று வாழ்தல் வேண்டும் என்று விரும்பி, நாம் நம் மனமொழி மெய்களால் துதித்து வணங்கி, நல்வாழ்வு வாழ முயல்வோமாக!

"பரந்தெழுந்த சமண்முதலாம்
பரசமய இருள்நீங்கச்,
சிரம்தழுவு சைவநெறித்
திருநீற்றின் ஒளிவிளங்க,
அரந்தைகெடப் புகலியர்கோன்
அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம
சுந்தரி, பூங் கழல்போற்றி".

நாகப்பட்டினம் நீலாயதாட்சி உடனுறை திரு. காயாரோகண சுவாமி கோயிலின் சார்பில் கட்டப்பெற்ற ஓய்வு மாளிகைக் கட்டிடத்திற்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் அடிக்கல் நாட்டுதல்.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் நிகழ்ந்த பாவை விழாவில், அறங்காவலர் திரு. வி. இலக்குமணன் அவர்களும், திரு. முருக. கிருபானந்தவாரியார் அவர்களும் கலந்துகொள்ளுதல்.



அண்மையில் (1—1—72) சுத்தசாதக சிவசாயுச்சியம் அடைந்தருளிய, சிறுமுதுகுன்றம் திரு குமார தேவர் திருமடத்தின் தலைவர். திருவண்ணா மலைப் பெரியமடம் வீரசைவ ஆதீனத்தைச் சார்ந்த துறையூர் வீரசைவ ஆதீனம் 22-ஆம் சிம்மாசனாதிபதி திருவார்திரு சுப்பிரமணிய சிவப் பிரகாச பண்டார சந்நிதிகள் அவர்களின் திருவுருவம் (அருளாட்சி: 1641-1972).

நெல்லையப்பர் கோயிலில் பாவை விழா (17—1—72)

மீனாட்சியம்மை குறம்

தவத்திரு. முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்,

இளவரசு, ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

நல்லகாலம் பொறக்குது, நல்லகாலம் பொறக்குது என்று கூறிக்கொண்டே, குடுகுடுப் பாண்டிகள் வருவதை மக்கள் அறிவர். கிளி முதலியவற்றை வைத்துக்கொண்டு எதிர்காலச் செய்திகளைப் பார்த்துச் சொல்வார் பலர். இங்ஙனம் குறி சொல்பவர்கள் பலரும், ஆண் பெண் இருபாலாரும் இந்நாட்டில் உலவுதல் கண்கூடு.

பண்டை நாட்களில் தலைவியின் வேறு பாட்டிற்குக் காரணம் அறிந்துகொள்வதற்காகக் கட்டுவித்தி என்பவளைக்கொண்டு குறி பார்க்கும் வழக்கமும் நிலவியிருந்தது. அவள் நெல்லைக் கொணரச் செய்து எண்ணிப் பார்த்துக் குறி கூறுவாள். இங்ஙனம் குறி பார்த்தலைக் கட்டுப்பார்த்தல் என்று கூறுவர்.

கலம்பகம் என்று ஒருவகைப் பிரபந்தம் உண்டு. அதில் குறம் என்பது ஒரு உறுப்புக்குப் பெயர். அது குறத்தி குறி கூறுவதாக அமைந்திருப்பது. "இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலமும், திறப்பட உரைப்பது குறத்தி பாட்டே" என்பது பன்னிருபாட்டியல் சூத்திரம். குறம் என்ற தனிப்பாடலின் வளர்ச்சி குறம் என்னும் பிரபந்தம் ஆகும். இதன் வளர்ச்சியே குறவஞ்சி நாடகம் என்பது. குற்றாலக் குறவஞ்சி, சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் என்பன இவ்வகையைச் சேரும். குறம் என்ற பிரபந்த வகையில் குறத்தியின் கூற்று மட்டும் இருக்கும். இவ்வாறு அமைந்த பிரபந்தமே மதுரை மீனாட்சியம்மை குறம் என்பது.

மதுரை மீனாட்சியம்மை குறத்தைப் பாடியவர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆவர். இவர் ஸ்ரீ வைகுண்டத்தைச் சேர்ந்த கைலாசபுரத்தில் தோன்றியவர். மூன்று வயது வரையில் வாய் வாளாதிருந்து பின்னர்ச் செந்திலாண்டவன் திருவருளால் பேசும் நிலை எய்திக் கந்தர்கலி வெண்பாப் பாடினார். தல யாத்திரையாகப் புறப்பட்டவர் மதுரைக்கு வந்து, திருமலைநாய்க்கரால் எதிர்கொண்டழைக்கப்பெற்று மதுரை மீனாட்சியம்மைமீது பிள்ளைத்தமிழ் பாடினார். நாயக்க மன்னன் மடியமர்ந்து மீனாட்சியம்மை, பிள்ளைத்தமிழ் கேட்டு உள்ளம் உவந்து முத்தாரம் அருளினார். நாயக்கர் வேண்டுகோட்படி நீதிநெறி விளக்கம் என்னும் நூலைப் பாடினார் ஆங்கிருந்தபொழுது மதுரைக் கலம்பகம், மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சியம்மை குறம் முதலிய நூல்களை அருளினார். திருவாரூருக்குஎழுந்தருளித் திருவாரூர் நான்மணிமாலை பகர்ந்தார். தருமபுரத்துக்குச் சென்று ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்தரைக் கண்டு தரிசித்து, வாக்குத் தடைப்பட, அவரையே தமது ஞானாசிரியராக ஏற்று, வைத்தீசுவரன் கோயிலை அடைந்து, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழைப் பாடினார். பின்னர்ச் சிதம்பரத்தையடைந்து, சிதம்பர மும்மணிக்கோவை, சிவகாமியம்மை இரட்டை மணிமாலை, சிதம்பரச் செய்யுட் கோவை முதலியவற்றை அருளினார்.

தருமபுரத்துக்குப் போந்து ஞானாசிரியரைத் தரிசித்துப் பண்டார மும்மணிக் கோவை என்னும் பாமாலை சூட்டிப் பணிந்தார்.

பின்னர்க் காசிக்கு எழுந்தருளிச் சகலகலா வல்லி மாலை பாடி, இந்தி மொழி பேசும் திறம் கைவரப்பெற்றுத் தம் கரையிலாக் கல்விவன்மையாலும், நடையருப் பெருந்துறவாலும், பாதுஷாவின் நன்மதிப்பைப் பெற்றுக் கருடன் காட்டிய இடத்தில் காசியம்பதியில் கேதாரத்துறை

முதலியன நிறுவினார். காசிக்கலம்பகம் முதலிய நூல்களை அருளினார். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 17-ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் வாழ்ந்தருளியவர்கள். மீனாட்சியம்மை குறத்தில், மீனாட்சியம்மை ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானிடத்தில் கருத்திழந்த நிலையில், மீனாட்சியம்மைக்குக் குறத்தி யொருத்தி குறி கூறுவதாகக் கூறப்பட்டுள்ளது.

இதில் கூறப்பட்ட குறத்தி, பொதியமலையிலிருந்து வந்த குறத்தி. அவள் தலைவியினிடம் வருகிறாள். தலைவிக்குச் சொக்கலிங்கப் பெருமானோடு அளவளாவும் பேறு கிடைக்கும் என்று கூறுகிறாள். பிறகு புழுகினால் தரையை மெழுகிப் பிள்ளையார் பிடித்து வைத்துக் கோலமிட்டு நிறைநாழியை வைக்குமாறு தலைவியிடம் கூறினாள். அவளது கையை நீட்டச் செய்தாள். நான் சொல்லும் குறி பழுதுபட்டால் எல்லார் சொற்களும் பொருளற்றனவாகும். தூசும் ஒரு காசும் வை. சொக்கலிங்கர் உனை அணைவர் என்று கூறினாள். கைக்குறி நன்று. முகக்குறியும் நன்று. இடப்பக்கத்தில் எழுந்த பல்லியின் சொல்லும் நன்றாய் உள்ளது, கன்னிமார் வாக்கும் நன்று. இடக் கண்ணும் துடிக்கிறது. இது நல்லது. 'ஆகவே அங்கயற்கண் ''பூவை மாதின் மெய்க் குறியும் முலைக்குறியும் அணிந்தவர் தோள் மேவுவாய்'' என்று பலன் கூறினாள்.

பின்னர்த் தனக்குரிய பொதியமலையின் பெருமையைக் கூறினாள். ஆறிருதோட் சிறுவனுக்குப் பெருந்தடங்கட் கொச்சைச் சிறுமியைக் கொடுத்த குறவர்குலம் தன்குலம் என்றாள். தம் குறக்குடிக்கு உரிய இயல்புகளைக் கூறினாள். தாம் குடியிருக்கும் குறிச்சியிலேயுள்ள காட்சிகளையும் விரித்துரைத்தாள். முன்னர்க் குறவர்கள் தங்கள் மலையாட்சியை முருகப் பெருமானுக்குச் சீதனமாகக் கொடுத்தனர் ஆனால் இப்பொழுதோ எங்கள் பிள்ளைக்கு எண்ணெயில்லை, அரைக்கும் ஒரு துணியுமில்லை என்று கூறித் தன் கணவன் இன்னொருத்தியை மணம் செய்துகொண்ட பிறகு இந்த நிலை தனக்கு வந்தது என்று கூறினாள்.

தான் பாண்டி நாட்டில் தேவாரம் பெற்ற பல தலங்களுக்குச் சென்று குறி கூறியதாகவும் சொன்னாள். அப்பாண்டி பதினான்கு தலங்கள் பின்வருமாறு,

''கூடல்புன வாயில்கொடுங் குன்றுபரங் குன்று
குற்றாலம் ஆப்பனூர் பூவணம்நெல் வேலி
ஏடகம்ஆ டானைதிருக் கானப்பேர் சுழியல்
இராமேசம் திருப்புத்தூர் இவை முதலாம்
தலங்கள்''

பின் அவளுடைய உறவினர் யார் யார் என்றும் அவர்கள் யார் யார்க்கு என்ன குறி கூறினார்கள் என்றும் கூறினாள் :

வள்ளிக்குத் தங்கை இவள் பாட்டி. திருமகள், மாயவன் மார்பில் பொலிவள் என்று கூறினாளாம். இவள் பெரிய தாய், கலைமகள் அயன் திருநாவில் வாழ்வாள் என்று சொன்னாளாம். இவள் தாய், இந்திராணி இந்திரன் தோளை எய்தும் என்று புகன்றனளாம். ஆகவே இவர்கள் சொன்ன குறிகள் தவறாமல் பலித்தன என்று கூறித் தான் கூறிய குறிகள் பலித்த வரலாறுகளைக் கூறினாள்.

அம்மை தடாதகை பிறந்த நாளில் முகக்குறி கண்டு, இவள் உலகமுழுதும் ஆளும் என்று கூறினாளாம். பின்னொரு நாள் கைக்குறி பார்த்து, அம்மையே சிவபெருமானே உமக்கு மணவாளர் என்றனளாம் அவளுடைய மெய்க் குறிகள் பார்த்து உனக்கு ஓர் ஆண்பிள்ளை உண்டு. பிறந்து அரசு ஆளும் என்றாளாம். நான் சொன்ன குறிகள் யாவும் பலித்தமையின். ஒரு காலம் கஞ்சியும் என் குஞ்சுதலைக்கு எண்ணெயும் ஓர் உடுப்பும் ஈந்தால் நீ நினைத்த வெலாம் புகல்வன் என்று கூறினாள். தரையை மெழுகிக் கோலமிட்டுக், குங்குமம் புகை காட்டி, நவமணிகள் திசை நான்கும் பரப்பித் தென் மூலையில் பிள்ளையாரை வைக்கச் செய்து, மலரும் அறுகும் சாத்தி விளக்கு வைத்து நிறைநாழி வைத்து. முந்நாழி முச்சிறங்கை நெல் அளந்துகொண்டுவரச்செய்து முறத்தில்ஒருபடி நெல்லை வைத்து அந்நெல்லை முக்கூறு செய்து, ஒரு கூற்றை எண்ணி அது ஒற்றைப்பட்டது ஆகையால் நீ எண்ணின கருமம் கைகூடும் என்று கூறினாள். பின்னர் நெல் அளந்து இட்டபோது நல்ல நிமித்தம் தோன்றியது. பல்லியின் வாய்ச் சொல்லும் நன்று பத்தினிப் பெண்கள் பேச்சும் நன்றே தும்மலும் நல்லதே. ஆந்தையின் குரலும் நல்லதாயிற்று என்று பிற நற்சகுனங்களையும் கூறினாள். பிறகு அவளுடைய கையை நீட்டச்செய்து, உன் கை வறியார்க்கு நவ நிதியும் சொரியும். புழுகு நெய்ச் சொக்கர்தம் புயம் தழுவிடும் என்று கைக்குறி கூறினாள்.

அப்பொழுது தலைவி தன் கையைத் தன் மார்பில் வைத்துக்கொண்டாளாம். அதனைப் பார்த்துக் குறத்தி அம்மையே! உன் செயல் அபிடேகச் சொக்கர் உனை அணைவர் என் பதைக் காட்டும் என்றாள். மேற்குத் திக்கில் தலைவி கை நீட்டினாள். அதனைக் கண்டு அம்மையே! சொக்கர் அந்திப் பொழுதினில் உனை அடைவர் என்றாள். தலைவி கைம்மேல் கை கட்டினளாம். அம்மையே! நீ கருதியது தப்பாமல் கைகூடும் என்றாள். வயிற்றகத்துத் தலைவி கை வைத்தாளாம். நீ சிறுவர் பதினறு வரைப் பெறுவாய் என்று குறத்தி குறி கூறினாள்.

கையிலுள்ள தனரேகை அளவிலாத செல்வந் தரும். தமருக ரேகை மதுரேசர் செம்பொற் புயத்தில் உனைச் சேர்க்கும். புத்திர ரேகை உனக்கு இருப்பதுபோல் யார்க்கும் இல்லை. தோளிலுள்ள மச்சம் அங்கயற்கண் அம்மையோடு உனைச் சேர்க்கும் என்று கைரேகைகளைப் பார்த்துக் கூறினாள். பின்னர் மீனாட்சியம்மையை வாழ்த்துகிறாள். இப்பகுதியில் (31-39 கண்ணிகளில்) அம்மையின் தசாங்கம் கூறப்பெற்றுள்ளது.

மலை - பொதியமலை. நதி - வைகை. நாடு - தென்பாண்டி நாடு. ஊர் - நான்மாடக்கூடல். தார் - வேம்பு. பரி - கனவட்டம். கரி - திசையெட்டும் திரை கொண்ட யானை. கொடி - மீனக்கொடி. ஆணை - தன்யாணை. இதன்கண், இறுதியில் கண்ட வாழ்த்துப் பாடல்:

நீர்வாழி தென்மதுரை நின்மலனார் அருள்வாழி
கார்வாழி அங்கயற்கட் கன்னிதிரு வருள்வாழி
சீர்வாழி கச்சிநகர்த் திருமலைபூ பதிவாழி
பேர்வாழி அவன்செல்வம் பெரிதூழி வாழியவே.

இதில் திருமலை பூபதி குறிக்கப் பெறுகிறார். இதனால் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மதுரைக்கு எழுந்தருளிய போழ்து அரசோச்சி இருந்த நாயக்க மன்னர் பெயர் விளங்கும். கச்சிநகர் என்றவிடத்து மதுரைநகர் என்று பாடபேதமுண்டு என்று ஆய்வாளர் கூறுவர்.

ஆராய்ச்சிக் குறிப்பு :

கரிகாலன் இமயம் வரை படையெடுத்துச் சென்றான் என்பதை,

'பகைவிலக் கியதுஇப் பயங்கெழு மலையென
இமையவர் உறையும் சிமயப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற்
பெயர்ந்தோன்'

என்று சிலப்பதிகாரம் நவில்கின்றது. அவன் இமயத்தைச் செண்டாலெறிந்தான் என்று 'செண்டு கொண்டு கரிகாலன் ஒரு காலின் இமயச் சிமயமால்வரை திரித்தருளி' என்று கலிங்கத்துப்பரணி (178) கூறும். பாண்டியன் ஒருவனும் இமயம் வரை படையெடுத்துச் சென்றதைக் 'கயலெழுதிய இமய நெற்றியின்' என்ற சிலப்பதிகாரத்தால் அறியலாம். இவற்றை இந்நூலாசிரியர் 'செண்டிருக்கும் வடவரையில் சேலிருந்து அரசிருக்கும் தென்னர்' என்று (செ 3-ல்) குறித்திருக்கிறார். பாண்டியன் கயல்பொறித்தமை இந்நூல் 44-ம் கண்ணியிலும் 'வடவரையில் கயலெழுதும் மீனவர்கோன்' என்று குறிக்கப் பெற்றுள்ளது.

அங்கயற்கண் பூவைமாதின் மெய்க்குறியும் வளைக்குறியும் முலைக்குறியும் அணிந்தவர் (செ. 11) என்றவிடத்துக் காஞ்சிப்புராணம் தழுவக் குழைந்த படலச் செய்தி சொல்லப்பெற்றது. பொதியமலையின் சிறப்பு மிக அழகாகச் சொல்லப்பெற்றுள்ளது. அது 'தமிழ் முனிவன் வாழுமலை, அங்கயற்கணம்மை திருவருள் சுரந்துபொழிவதெனப் பொங்கருவி தூங்குமலை, தென்னம் தமிழும் பசுங்குழவித் தென்றற் கொழுந்தும் திளைக்கும் மலை, வடகலை தென்கலை பயிலும் மலை, கந்தவேள் விளையாடு மலை', அம் மலையில் :

"சிங்கமும்வெங் களிறும்உடன்
விளையாடும் ஒருபால்
சினப்புலியும் மடப்பிணையும்
திளைத்திடும் அங்குஒருபால்
வெங்கரடி மரையினொடும்
விளையாடும் ஒருபால்
விடவரவும் மடமயிலும்
விருந்தயரும் ஒருபால்"

இதனால் அத்தெய்வத் தமிழ்மலையில் பகைமையில்லை என்பது குறிக்கப்பெற்றது. பின்வரும் (18வது) பாட்டில் குறவரது இயல்பு கூறப் பட்டுள்ளது.

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குசுல்லி எடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்துஅருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே

'பழியஞ்சியார்' என்ற இடத்துப் பழியஞ்சிய திருவிளையாடற் செய்தி குறிக்கப்பட்டது. கடலைப் பல நதிகள் புணர்ந்த நதி பதி என்றும், வைகை கடலை யணையாத வைகைக் குல நதி என்றும் 32-ம் கண்ணியில் கூறப்பெற்றுள்ளது.

''பஞ்சவன்தன், நான்மாடக்கூடலிற் கல்வ லிது'' என்று ஔவை பாடிய செய்தி ''அன்பாண்டு கல்வலிது என்று ஔவை பாடிய எங்கள் தென்பாண்டிநாடு'' என்ற 33-ம் கண்ணியில் குறிக்கப் பெற்றது.

ஒன்றாகி அனைத்து உயிர்க்கும் உயிராகி எப்பொருளும் அன்றாகி அவையனைத்தும் ஆன அங்கயற்கண் அம்மைபுகழ் கூறப்பெற்ற இச்சிறு நூல் மிக எளிய நடையில் அமைந்தது. இதனைக் கற்று அங்கயற்கண் அம்மையை வாழ்த்தி அருள்பெற்று மன்பதைகள் வாழ்க!



தென்னாற்காடு மாவட்டம், திருப்பெண்ணாகடம் பெருமாள் கோயிலில் நிகழ்ந்த திருக்குடமுழுக்கு விழாக் காட்சி

☆

★

கனி கொள்வோம்

திரு. அ. மா. பரிமணம், M.A., M.Litt.,

பழனியாண்டவர் பண்பாட்டுக் கல்லூரி, பழனி

மரத்தின் பயன் கனி தரல். மானுடத்தின் பயன் வீடு பெறல். பசுமையும் செழுமையும் அடர்ந்து அரும்புகளும் மலர்களும் செறிந்து, காயும் கனியும் மல்கி நிற்கின்றது மரம். சிறந்த கனிகளைப் பெறவிரும்புபவர்கள் கவனிக்க வேண்டியன பல உள்ளன. தளிர், அரும்பு தோன்றுவது முதல் காய் முதிர்வது வரை அனைத்தும் செம்மையாகத் தீங்கின்றி இருக்க வேண்டும். அவற்றிற்கு அடிப்படையான சுவடுகளும் கிளைகளுமேயன்றி அடிமரமும் வளமாக இருத்தல் வேண்டும். மேலும் கண்ணுக்குப் புலனாகாதவாறு எண்ணற்றுப் பரவி மண்ணில் கால் கொண்டுள்ள வேர்களும் விழுமியனவாக இருத்தல் வேண்டும். மரத்தைப் பொறுத்தமட்டில், கண்ணிற்குப் புலப்படும் தலைப்பகுதியும், இடைப்பகுதியும், கண்ணிற்குப் புலப்படாத வேர்ப்பகுதியும் செம்மையானதாகத் தீங்கின்றி இருந்தாலன்றிப் பயன் கிடைப்பது அரிதாகிவிடுகிறது.

இலைப்பகுதியில் கேடு காணப்பட்டால் எளிதில் மருந்து தெளித்துக் குணப்படுத்தலாம். இடைப்பகுதியில் காணப்படும் தீமையினையும் எளிதாக நீக்கி விடலாம். ஆனால், மண்ணில் மறைந்து நின்று வேரை அரித்துக் கெடுக்கும் புழுக்கள் முதலியவற்றின் தீமையை நீக்க மிக்க கவனமும், முயற்சியும் எடுத்துக் கொள்ள வேண்டும். வேரில் தீமை புக இடங் கொடுத்தால் மரமே நாசமாகிவிடுகின்றது. மரப்பயன் விரும்புகின்றவர்கள் மரத்தின் மூன்று நிலைகளிலும் தீங்கு சேராவண்ணம் காத்தலும், தீங்கு நேருமாயின் அதனைத் தடுத்துப் பேணலும் இன்றியமையாத செயலாகும். மானிடத்தருவின் பயனாகிய வீடு பேற்றை, இறையருட்பேற்றினை அடைய விரும்புபவர்களும் அதனை இவ்வாறே பேணிப் பயன்பெறல் வேண்டும்.

மனித இயக்கத்தினை ஆராய்ந்த பெருமக்கள் அது மூன்று நிலையில் அமையக் கண்டனர். நினைப்புநிலை பேச்சுநிலை, செயல்நிலை ஆகிய அம்மூன்று நிலைகட்கும் முறையே மனமும் வாக்கும் காயமும் கருவிகளாக அமைந்தன. உள்ளம், வாய், உடல் ஆகிய அம்மூன்று கருவிகளும் முக்கரணங்கள் திரிகரணங்கள் என்று கூறப்பட்டன. நினைப்பு, பேச்சு, செயல் மூன்றும் ஒன்றுபட்டுச் செம்மையில் இருக்கவேண்டும் என்பது தமிழ் மக்கள் கொண்ட வாழ்வியல் முடிவாகும். அதனால், சத்தியம் என்பதனை உணர்த்த உண்மை, வாய்மை, மெய்ம்மை என்ற மூன்று சொற்களைக் கொண்டனர். அவை முறையே உள்ளத்தின் செம்மை, வாயின் செம்மை, மெய்யின் செம்மைகளைக் குறித்து அமைந்தனவாகும்.

முக்கரணங்களையும் தீமை புகாதவாறு காத்தல் வேண்டும். இக்காப்பினை அடக்கமுடைமை என வள்ளுவம் விதிக்கும். வஞ்சம் அழுக்காறு பொறுமை வெஃகுதல் முதலிய நெஞ்சக் குற்றங்கள் நீக்கப்படல் வேண்டும். பொய் கூறல், புறங்கூறல், பயனில கூறல் முதலிய வாய்க்குற்றங்கள் நீக்கப்படல் வேண்டும், அவ்வாறே பிறர் மனை விழைதல், தீயொழுக்கம் முதலான மெய்க்கண் நிகழும் குற்றங்களும் கடியப்படவேண்டும்.

மூன்று இடங்களிலும் நேரும் குற்றங்களை அறிந்து நீக்குதலிலும், அங்கு அக்குற்றங்கள் தோன்றுமைக்குக் காரணமான செம்மையைச் செய்துவிடல் எளியதும் சிறந்ததுமான வழியாகும். மூன்றிலும் அடிப்படையாக உள்ள மனத்தினைச் செம்மை செய்துவிட்டால், அதன் வழித்தோன்றும் வாக்கும் செயலும் செம்மையாக அமைந்துவிடும். **உரமும் நீரும் வேரிற்**

குக் கிடைக்குமாறு செய்துவிட்டால் போதும். தளிரும் இலையும் சிறந்து மலரும் காயும் மல்கிக் கனிப்பயன் கிடைத்துவிடும். இதனையே சமய வாழ்விலும், சமுதாய வாழ்விலும், நம் பெரியவர்கள் வலியுறுத்துவாராயினர்.

நம் சமயப் பெருமக்கள் செம்மையாக-செம்பொருளாகக் கண்டு காட்டியது சிவ பரம்பொருளேயாகும். அதனை மனத்திற்கு உரமாக-உறுதுணையாக வைத்துவிட்டால்போதும், அனைத்துக் கரங்களிலும் செம்மை சேரும். அதனால் செங்மையேயாய சிவபதம் சேரும். முக்கரணங்களிலும் மூலமாக விளங்கும் மனத்தில் சிவ பரம்பொருளை இடம்பெறச் செய்துவிடுவதே வாழ்வின் அடிப்படை என்றும், அதனால் வாழ்வின் பயன் வந்தடையும் என்றும் அருட்சான்றோர்கள் தெளிவுறுத்தியுள்ளார்கள். இதனைத் தேவாரச் சான்றோர்கள் மூவரும் தங்கள் குருவருட் பதிகங்களிலேயே நன்கு புலப்படுத்தியுள்ளார்கள்.

திருஞானசம்பந்தர் தம் முதற்பாடலில் ' உள்ளம் கவர் கள்வன் ' என்ற அரிய தொடரால் குறிப்பிட்டுள்ளார். உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் என்பதோடு உள்ளத்தால் கவரப்பெற்ற கள்வன் என்றுமல்லவா அவ்வருந்தொடர் பொருள்தந்து நிற்கின்றது. மேலும், முதற்பதிகத்தின் இறுதிப் பாடலில் " ஒருநெறிய மனம் வைத்து உணர்தல் " என்ற ஒப்பற்ற திருநெறியையும் நமக்குக் காட்டியுள்ளார்.

திருநாவுக்கரசர் தம் முதற்பதிகத்தில் " நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், நினையாது ஒருபோதும் இருந்தறியேன் " எனக் கூறியுள்ளார். இவ்வற்புத வரிகளில், நெஞ்சம் இறைவன் விரும்பித் தங்கும் இடமாக அமைந்த வாற்றையும், அது அவனை இடைவிடாது நினைப்பதற்காம் கருவியா மாற்றையும் அழகுறக் காட்டியுள்ளார். மேலும், அப்பதிக ஐந்தாவது பாடலில் " சலம் பூவொடு தூபம் மறந்தறியேன், தமிழோடு இசைபாடல் மறந்தறியேன், நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன், உன்னுமம் என்னுவில் மறந்தறியேன் " என முக்கரணங்களாலும் அவனை மறவாத் தன்மையைக் குறிப்பிட்டுள்ளது இன்பமிகுவிக்கிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தம் முதற்பதிகத்தில், " எத்தான் மறவாதே நினைக்கின்றேன் " எனக்கூறி அதனை அடுத்து வரும் பாக்களிலும் வற்புறுத்திக் காட்டியுள்ளார். மணிவாசகப் பெருமான் தம் திருச்சதக முதற்பாடலில் இவ்வுண்மையைக் காட்டி, நம்மைத் தெளிவுபடுத்துகின்றார்.

" மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப்போற்றி
சயசயபோற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே "

இவ்வருள்வாசகம் மானிடமரம் சிவக்கனி தருதற்கான செவ்வியைக் காட்டுகின்றது மூலமும் நடுவும் முடிவுமாகிய முக்கரணங்களும் செம்மை சேர்ந்து, செம்பொருளை ஏற்று நிற்கும் சிறப்பினைக் காட்டுகின்றது.

மரத்தின் மெய் அரும்புகள் விடுகின்றன. மலர்ந்து அசைகின்றது. கள் நீர் (கண்ணீர்) ததும்பி நிற்கின்றது மானிட மெய்யும் புளகமுற்று அரும்புகின்றது. அன்பு மேலீட்டால் நடுக்கமுறுகிறது. திருக்கைகள் திருவடியை நினைந்துக் கூப்புகின்றன. கண்கள் நீர் ததும்பி நிற்கின்றன. உள்ளம் பொய்யினை நீக்கிவிடுகின்றது. வாய் " இறைவா, நினக்கு வணக்கம் வணக்கம் வெல்க வணக்கம் " என்று ஏத்துகின்றது உள்ளம் வாய், உடல் ஆகிய முக்கரணங்களும் ஒன்றுபட்டு இறைவன் வயப்பட்டு நிற்கின்றது. அவற்றின் இயக்கங்களாக சிந்தனை சொல் செயல் அனைத்தும் செம்மைப்பட்டுச் சிவத்தொடர்பு கொண்டனவாகஅமைந்துள்ளன. இவ்வாறு முக்கரணங்களும் தத்தம் நிலையில் ஒத்து இறைவன் வயப்பட்டு நிற்கும் நிலை என்றோ ஒருநாள் ஒருபொழுது அமைந்தது அன்று என்றும், அதுவே இடையறாது நாளும் தன்பால் நிலைபெற்று வருவதொன்றாகும் என்றும் காட்ட விரும்பிய அடிகள், " என்றும் கைதான் நெகிழவிடேன் " என்ற உறுதி உரையால் உணர்த்துகின்றார். அதனால், அவன் தன்னை ஏற்று ஆட்கொள்ளவேண்டும் என்றும் வேண்டுகின்றார்.

இதோ அடிகள் வேண்டுகோள் : "என் உடல் புளகங்கொண்டு, மிகவும் நடுக்கமுற்று, நின் தெய்வ மணம் கமழும் திருவடிகளை நினைத்து, கைகளைத் தலைமேல் குவித்து, கண்களில் நீர் ததும்பி நிற்க, மனம் வெதும்பிப் பொய்யை அகற்றி, நின்னைப் போற்றி சயசய போற்றி என்றுரைக்கும் ஒழுக்கத்தைத் தளர விடேன்; எல்லாம் உடைய ஆண்டவனே, என் இயல்பு கண்டு என்னை ஏற்றுக்கொள்வாயாக!"

சித்தம் சிவமாகப் பெற்ற மணிவாசகப் பெருமான், தன் மானிட யாக்கை இறையருட் கனி பெறற்காம் செவ்வியல் அமைந்து விளங்குமாற்றைக் காட்டியுள்ள இத்திருவாசகத்தால், உலக மக்கள் அனைவரும் பிறவிப் பயனாகிய இறையருட் பேற்றினைப் பெறுவதற்காகக் கருவியாகப் பெற்றுள்ள தம் மானுடப் பிறப்பினை எப்படி அமைத்துப் பயன் பெற வேண்டும் என்று வழிகாட்டுகின்றார். அவர் காட்டிய வழியில் நம்மை அமைத்துக்கொண்டு திருவருட் கனி பெறுவோமாக!



தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், பரக்கலக்கோட்டை திரு. மத்திய புரீசுவரசுவாமி கோயில் திருப்பணித் துவக்க விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த பெருமக்கள் (26—1—72).

இயற்கையும் இறைவனும்

சித்தாந்தக் கலைச் செல்வர் திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.,

திருவாவடுதுறை ஆதீன வித்துவான்.

இயற்கை என்பது உயிர்கள் உடம்போடு கூடித் தோன்றி வளர்வதற்கும், பின் அவ்வுடம்பு தேய்ந்து கெட அதனினின்று பிரிவதற்கும் இடமாகவும், சூழ்நிலைச் சார்பாகவும் உள்ள உலகும், உலகத்துப் பொருள்களும் ஆகும். இவை பருவ மாறுதலும் வெப்ப தட்ப மாறுதலும் உடையனவாய், தோற்றம் நிலை மறைவு என்னும் முத்தொழிற்பட்டு இயன்று வருதலின், இயற்கை எனப்படுகின்றன.

ஊன்றி நோக்கும்போது இயற்கை என்பது அறிவுடைப் பொருளும் அறிவில்பொருளும் என இருவகைப்பட நிற்றல் புலனாகும். அறிவில் பொருள்கள் தமக்கு உள்ள இயங்குநிலை இயங்கா நிலை என்னும் இரண்டிலும் தொடர்ந்து நிற்பதும், அத்தொடர்ச்சியில் மாறுதல் இருப்பின் அதற்குக் காரணமாக ஏதேனும் புதுத் தடை அல்லது ஆற்றலால் அம்மாறுதலை அடைவதுமாக உள்ளன என்பது விஞ்ஞானத்தின் துணிபு. அறிவுடைப் பொருள்கள், அங்ஙனம் அன்றித் தாமே துணியும் துணிவு உடையவையாய், அறிவில் பொருள்களைத் தமக்கு உதவியாயிருக்கும்படி மாற்ற வல்லனவாய் உள்ளன.

இவற்றுள் அறிவுடைப் பொருள்களாகிய உயிர்கள் எல்லாம், தமக்கு வரும் துன்பத்தின் நீங்கவும், இன்பத்தை வளர்த்துக் கொள்ளவும், நீடுதலாக வாழவும் விரும்புகின்றன, முயல்கின்றன. இவ் விருப்பத்திற்கும் முயற்சிக்கும் துணையாயிருந்து உதவும் உயிர்ப் பண்புகள் உணர்ச்சியும் பகுத்துணரும் மனஉணர்வும் எனக் கூறலாம். ஆயினும், இவ்வுணர்ச்சியும், பகுத்துணர்வும் இவற்றினால் நிகழும் முயற்சியும் குறித்த பயனை எப்பொழுதும் குறைவின்றித் தருகின்றன என்பது உறுதியன்று. இதனால், உயிர்களுக்குத் தாமே துணிந்து செயலாற்றும் திறன் இருப்பினும், அவை தம்வயம் உடையவை அல்ல என்பது விளங்குகிறது.

இங்ஙனம் உயிர்கள் மாற்றம் பெரிதும் உள்ள உலகில் தம் வயம் இன்றி வேறு வேறு அறிவும் துணிவும் உடையனவாய் வாழ வேண்டுதலின், இவற்றைத் தன் ஆற்றலுள் அடங்கக்கொண்டு ஆட்சிபுரியும் ஒரு பேரறிவுப் பொருள் தன்வயமும், இயற்கை முற்றுணர்வும் உடையதாய் உள்ளது எனவும், அஃது உடலின்கண் உள்ள உயிர்போலப் பல்வேறு அண்டங்களாய் அளவுட்படாது பரந்து விரிந்துள்ள இயற்கையாகிய உடலுக்கு உயிராய் உள்ளது எனவும் உயர்ந்தோர் தம் மெய்யுணர்வால் கண்டு கூறிவருகின்றனர்:

"உரைசேரும் எண்பத்து நான்குநூ
றுயிரமாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் இதழிதர மென்காந்தள்
கையேற்கும் மிழலையாமே"

என்பது திருஞானசம்பந்தர் வாய்மொழி.

இப்பாட்டில் ஆளுடையபிள்ளையார் இயற்கையினையும், இறைவனையும் ஒன்றாக இணைத்து, உண்மையை நன்மைபெருகும்படி அழகுருவில்

படைத்துத் தருகின்றார். உயிர்கள் அளவற்ற வேறுபாடு உடையன ஆயினும், அவை மக்கள் தேவர் விலங்கு பறவை முதலியனவாகவும், அவற்றின் உட்பிரிவனவாகவும் நிரல்பட நின்று தொழிற்படுகின்றன. இவற்றைப் படைத்தவன் ஒருவன் உளன்; அவன் இவற்றை நிரை சேரப்படைத்தமையால் முதல்வன் எனப்படுவன். அவன் உயிர்க்குயிராய் நின்று அவற்றை அறிவித்தும் செயல்படுத்தியும் வருதலின் இயவுள் எனக் குறிக்கவும் தக்கவன். மேலும் எவ்விடத்து எவ்வகைப் பொருட்கண்ணும் தங்கி நிற்றலின் அவன் இறைவன். இறு என்னும் பகுதி இறுத்தல், தங்குதல் என்னும் பொருளைத் தருவது.

அவன் எங்குத் தங்கி எப்பொருளையும் இயக்கி நிற்பினும், சிற்சில இடங்களில் தன் இருப்பு நன்கு விளங்கும்படி உயிர்களுக்கு அணுக்கமாக இருந்து அருள்புரிவன். இறைவன் கலை உருவினனாக, பேரறிவும் பேரின்பமுமே தன் வடிவாக உணரப்படுவோன்; ஆதலால் விளங்கும் இடம் கலையரங்கமாகப் பேரின்பச் சூழலாக உள்ளது. இங்ஙனம் அவன் திருக்கோயில் கொண்டு தன் அருள் விளங்கி வெளிப்பட உள்ள இடம் திருவீழிமிழலை. அங்கு மேகம் சோலைகளின் மேல்படிந்து முழவுபோல இன்னோசை காட்டி, பின் சொரியும் மழைக்கு அறிகுறியாக அதிர்கின்றது. காரைக் காணும் மயில்கள் பலவும் தம் வண்ணத் தோகைகளை விரித்து நடமாடுகின்றன. வண்டுகள் பாடுகின்றன. உயர்ந்து வளர்ந்து சிவபெருமான் வடிவே என நிற்கும் கொன்றைமரம் தன் மலர்களாகிய பொற்காசுகளைச் சொரிகின்றது. பெண் மக்களின் கைவிரல்கள் போல் மலர்ந்துள்ள காந்தள் மலர்கள், அவற்றை ஏற்றுக் கொள்ளுகின்றன.

'தான் ஆடத் தன் தசை ஆடும்' என்பது மக்கள் வழங்கும் முதுமொழி. இது கூத்தப் பெருமானுக்கே மிகப்பொருத்தமானது. அவன் ஆனந்தக் கூத்தன். அவன் தசையே, உடம்பே, உலகு. அவன் 'பாரும் நீரொடு பல்கதிர் இரவியும் பனிமதி ஆகாசம்-ஓரும் வாயுவும் ஒண்கனல் வேள்வியில் தலைவனுமாய் நின்றான்'. அவனை அகத்தே கொண்டார்க்கு ஆனந்தம் அன்றி வேறு நுகர்ச்சி ஏது?

மேலே காட்டிய சம்பந்தர் ஒண்தமிழ்; இயற்கையினையும், இறைவனையும் இயற்கையோடு இறைவனுக்கு உள்ள பிரிப்பில் சம்பந்தத்தினையும், சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டித் தத்துவம் சமயம் கலை என்னும் மூன்றனையும் சேர்த்ததொரு மும்மணிக்கோவையாக உள்ளது. அஃது உணர்வும் இன்பமும் என்றும் பெருக்கும் அழிவில் பொருளாய்த் திகழ்தல் உணர்ந்து நுகர்ந்து இன்புறுதற்கு உரியது. அழகிய பொருள் என்றும்வற்றா இன்ப ஊற்று!

இயற்கையினையும் இறைவனையும், முடிந்த தத்துவ நூல்கள் வழி நின்று தொடர்புபடுத்தி உணரும் தத்துவ நூலோர்க்குள், சில கருத்து வேறுபாடுகள் உள்ளன. சிலர் முதல்வனே உலகாகவும் உயிர்களாகவும் உருவுதிரிந்து (பரிணமித்து) காணப்படுகிறான் என்பர். வேறு சிலர், ஒருவன் அறிவு மயக்கத்தினால் கயிற்றை அரவாகக் காணுதல்போல, முதற்பொருளே தனக்குள் மயங்கித் தன்னை உலகாகவும் உயிராகவும் வேறுபடுத்திக் கண்டுவருகிறது என்பர். ஆயின், முதல்வனை இறைவன் என வழங்கிய பழந்தமிழ்ச் சான்றோர், இவ்விரண்டு கொள்கைகளுள் எதனையும் உடையர் அல்லர் என்பது, அச்சொல்லியல்பால் விளங்குகிறது. உலகும் உயிர்களும் உள்பொருள்; முதல்வனும் உள்பொருள். உலகு மாற்றம் அடையும் அநித்தப்பொருள். உயிர்கள் உடம்பிற் பிரிந்து இறந்தும், அதனோடு கூடிப் பிறந்தும் வருவது; அறிவிக்க அறியும் செயற்கைச் சுட்டறிவு உடையது. முதல்வன் இயற்கை முற்றுணர்வுள்ள பேரின்பச் செம்பொருள். இயற்கை இறைவனுக்கு உடம்புபோல உள்ளது. அவன் அதற்கு உயிர்போல உளன் என்பதே உயர்ந்தோர் பலரும் கொண்ட முடிந்த உண்மை. இவ்வுண்மையை அழகாக விளக்கி உளங்கொள வைப்பது திருஞானசம்பந்தர் திருப்பாட்டு.

திருமால் திருவுருவங்கள்

" திருமால்நெறிச் செல்வர் "

திரு. என். எஸ். தாத்தாசாரியார்,

தஞ்சை.

" தமர்உகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமர்உகந்த தெப்பேர் மற்றப்பேர்—தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியா னும் "

முன்னுரை :

பக்தர்கள் தன்னைத் தத்தம் நிலைக்கு ஏற்ப வழிபட்டு உய்வதற்காகத் திருமால் ஐந்து நிலையில் நின்று தரிசனம் தருகிறார் என வைணவ ஆகமநூல்கள் கூறுகின்றன. அந்த ஐவகை நிலையினுள், "அர்ச்சாவதாரம்" என்ற வழிபாட்டுக்குரிய உருவ நிலையும் ஒன்றாகும். இந்நிலைக்கே ஏற்றமும் அதிகம் என்பார். அந்த உருவநிலைகளின் அமைப்புக் களைப் பற்றிப்பழைய நூல்கள் விரிவாகக் கூறியுள்ளன. சிலவற்றை ஈண்டுக்காணலாம்.

சிவபெருமானின் உருவங்களைப் பற்றிக் கூறும் நூல்கள் பல உள்ளமைபோல, திருமாலின் உருவங்களைப் பற்றிய விளக்கம் உரைக்கும் நூல்கள் அவ்வளவு இல்லை. ஆயினும், பழைய வைகானச ஆகமநூல்களில் சிறப்பாகவும், பாஞ்சராத்திர ஆகமநூல்களில் குறிப்பாகவும், உருவிளக்கம கூறப்பட்டுள்ளது. தென்னிந்தியத் திருமால் வடிவங்கள் பெரும் பாலும் ஆகம நூல் வழியில் அமைந்தவைகளே யாகும். ஆகம முறைப்படிக்குத் திருமால், ஆலயங்களில் நின்ற இருந்த கிடந்த திருக் கோலங்களில் அமைய வேண்டும். இவைகள் யோகம் போகம் வீரம் ஆபிசாரிகம் என நான்கு விதமாக அமையலாம். யோகிகள் யோக மூர்த்திகளையும், குடும்பத்தில் உள்ளவர்கள் போகமூர்த்திகளையும், வீரர்கள் வீரமூர்த்தி களையும், பகைவர்களுக்குத் துன்பம் இழைக்க விரும்புகிறவர்கள் ஆபிசாரிக மூர்த்தியையும் வணங்குவார்கள். ஆக இவை மொத்தம் பன்னிரண்டு பிரிவுகள் கொண்டவை. மேலும் இப்பன்னிரண்டு மூர்த்திகள், உபமூர்த்தி களுடன் முதல் இடை கடை என்று மூன்று பிரிவுகளாக முப்பத்தாறு மூர்த்தங்களாக அமையும். இன்று பழக்கத்தில் திருமால் வடிவங்கள் போக மூர்த்திகளாகவோ, அல்லது யோக போக மூர்த்திகளாகவோ தான் காணப் படுகின்றன. வீரமூர்த்திகள் அருமை. ஆபி சாரிக மூர்த்தங்கள் இன்று இல்லவே இல்லை எனலாம். இதனை வேண்டும்பொழுது அமைத்து அழித்துவிடுவதும் உண்டு.

அயல்நாட்டில் விஷ்ணு வடிவம் :

"விஷ்ணு" என்ற சொல்லுக்கு, எங்கும் பரந்தவர், நன்மை தருகிறவர், மாயையிலிருந்து அகற்றுபவர், எல்லாப் பொருள்களின் உயிர் நாடியாய் இருப்பவர் என நான்கு வகைப் பொருள் உண்டு. இந்த விஷ்ணுவின் சிறப்பும், அவரது வடிவங்களும் அயல்நாடுகளிலும் உண்டு. சிறப்பாகச் சீனா, ஜப்பான் என்ற இடங்களில் திருமால் புத்தர் பெருமானாக வடிவக் காட்சி தருகிறார். சம்ப்பா, காம்போஜம், சயாம், சுமத்ரா, ஜாவா முதலிய நாடுகளில் நாராயணன், அரி, கோவிந்தன் என்ற பெயர் களால் திருமாலே முழுமுதற் கடவுளாக முன்பு வழிபடப் பட்டிருக்கவேண்டும் என்பதும் ஆராய்ச்சியாளர்களின் உறுதி.

பலவகையான வடிவங்கள் :

தமிழ் நாட்டில் இன்று உள்ள திருமால் உருவங்கள் எல்லாம் பெரும்பாலும் 7-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவைகளே. பிருகத் சம்மிதை என்ற பழைய வடமொழி நூலில் (கி. பி. 400) உருவ இலக்கணங்கள் ஐந்து

செய்யுள்களிலே கூறப்பட்டுள்ளன. அவை களாவன : திருமாலின் திருமேனியில் கைகள் எட்டு அல்லது நான்கு அல்லது இரண்டு இருக் கலாம். எட்டுக் கைகளானுல், வலக் கைகளில் கத்தி கதை அம்பும் இடக்கைகளில் வில் கேடயம் சங்கு சக்கரமும். ஒரு வலக் கை அபய முத்திரையுடனும் இருக்கும். நான்கு கை களானுல், வலக்கை அபய முத்திரையுடனும், கதையுடனும், இடக்கைகளில் சங்கு சக்கரமும் இருக்கும். இரண்டு கைகளானுல், வலக்கை அபய முத்திரையுடனும், இடக்கை சங்கேந் தியும் இருக்கும். இந்த வடிவங்கள் மார்பில் ஸ்ரீவத்சம் என்ற மருவுடனும், கௌஸ்துபம் எனற ஆபரணத்துடனும், காதுகளில் கடுக் கன்களும், தலைமேல் முடியும் (கிரீடம்) துலங்க இருக்க வேண்டும். திருமுக மண்டலம் கம்பீர மாகவும், புன்சிரிப்புடனும் இருக்க வேண்டும் என்பதேயாகும்.

பழைய விஷ்ணு சிற்பங்களுக்குச் சீதேவி, பூதேவி என்ற இரு பிராட்டியர்கள் மருங்கே இருப்பதில்லை. ஆயசீர்ஷம் என்னும் பாஞ் சராத்திர நூலில் நான்கு கைகளுடன் கூடிய விஷ்ணுவின் வடிவம் கீழ்வருமாறு அமைக்கப் படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

வலப்பக்கத்து மேல்கையில் சக்கரம், கீழ்க் கையில் தாமரைப் பூ, இடப்பக்கத்து மேல் கையில் கதை, கீழ்க் கையில் சங்கு இரு பக்கமும் ஸ்ரீயும், புஷ்டியும், கையில் தாமரைப் பூவும் வீணையும் பிடித்து விஷ்ணுவின் தொடை அளவிற்குச் சற்றுச் சாய்ந்திருக்கும் என்ப தாகும். மற்றும் இதைப்பற்றிய சிறப்புகளும் இயல்புகளும், மந்தனுவின் ரூபமந்தனம், ஹேமாத்ரியின் விரத காண்டம் போன்ற நூல் களில் காணப்படும். சில இடங்களில் நிற்கும் விஷ்ணு மூர்த்திகள் நான்கு முகங்களுடனும் காணப்படும். முக்கியமாக இந்தியாவின் வட கோடிப் பகுதிகளிலும், கீழ் மத்தியப் பகுதி களிலும் ஓரளவிற்கு அவைகள் காணப்படும். அவைகளில் சில நான்கு, எட்டு, பன்னிரண்டு கைகள் கொண்டவை. இவைகள் குசான் காலத்திற்குப் பிறகு பல மாறுதல்களைப் பெற்று விட்டன என்பர். விஷ்ணு தர்மோத்திரம் என்ற நூலின் கருத்துப்படிக்கு, விஷ்ணு கருடன் மேல் நான்கு முகங்களுடனும், எட்டுக் கைகளுடனும் விற்றிருக்கும் திருக்கோலத்தில் அமையலாம். கிழக்கு முகம் சாந்தம் உள்ளதாகவும், தெற்கு முகம் நரசிங்க முகமாகவும், மேற்கு அதாவது பின்பக்க முகம் கபிலர் முகமாகவும், வடக்கு முகம் வராக முகமாகவும் (வராக அவதாரம் என்பதற்குப் பன்றி அல்ல காண்டாமிருக வடிவம் என்றும் சிலர் கூறுவதுண்டு), காணப் படுகின்றன. அடுத்தபடியாக உட்கார்ந்த விஷ்ணு சிற்பங்கள் நிற்கும் கோலங்களை விடக் குறைவாக உள்ளன. அவைகள் ஆதிசேஷன் மீதோ, கருடன் மேலோ, பத்மாசனத்திலோ தனித்தோ அல்லது தேவிமார்களுடனேகாணப் படும்.

வடநாட்டில் சில இடங்களில் அமர்ந்த விஷ்ணுவின் வகைகளில் பலப்பல தென்படு கின்றன. சிவபெருமான் வடிவமான உமாம கேசுவர மூர்த்தியைப்போல லட்சுமிநாராயண மூர்த்தங்களை அமைப்பதுண்டு. அவைகள் வலக்காலைத் தொங்க விட்டு இடக்காலை மடித்து ஆசனத்தின்மேல் வைத்துக்கொண்டு, அந்தத்திருவடியில் இலக்குமியை உட்கார வைத்திருக்கும் வகையில் இருக்கும். அல்லது இலக்குமி இல்லாமலும் மேலே குறிந்தபடிக்கு வடிவம் இருக்கும். பெரும்பாலும் திருமாலின் அமர்ந்த அழகான வடிவங்களே அதிகம். சயனத் திருக்கோலம் அதிகம் இல்லை. சயனத் திருக்கோலங்கள் அரிதாயினும் அவை எட்டு வகைப்படும். அவை உத்தியோகம் தருப்ப சயனம் புஜங்கசயனம் போகசயனம் மாணிக்க சயனம் வடபத்திரசயனம் வீரசயனம் தலசயனம் என்பவையாகும். இவைகளின் தோற்றங்களில் சில நுணுக்கமான மாறுபாடுகள் உண்டு. பள்ளிகொண்ட அரங்கநாதர் வடிவம் சில உண்டு. அந்த மூர்த்திகள் பிரளய காலத்தில் உண்டாகும் சக்திகள் யாவும், பரம் பொருளான ஸ்ரீமந் நாராயணனை அடைந்து, மறுபடியும் அவன் சங்கல்பத்தால் இந்தச் சக்திகள் யாவும் தோன்றுகின்றன என்பதைக் குறிக்கும்.

திருமாலின் இருபத்துநான்கு வடிவங்கள் :

விஷ்ணு தர்மோத்தரத்தில் கூறியுள்ளபடி, சங்கர்ஷணன் பிரத்யும்நன் அநிருத்தன் வாசு தேவன் ஆகிய நால்வரையும் திருமாலின் நான்கு தனித்தனிப் பிரிவுகளாகக் கொள்ள லாம். இவைகளை வியூக மூர்த்திகள் என அழைப்பார்கள். இந்த நான்கு மூர்த்திகளையும் நான்கு முகங்கள் எட்டுக் கைகள் கொண்டு ஒரே மூர்த்தியான அமைப்பில் கருதலாம். இந்த வடிவில் உள்ள கிழக்குப் பக்க முகம் சிரிப்புடன் கூடிய வாசுதேவனுகும். தெற்கு

நோக்கிய சிங்க முகம் சங்கர்ஷணன். வடக்கு முகமான வராகம் பிரத்யும்நன். பின்பக்கமாய் மேற்குப் பார்த்திருக்கும் ருத்திர முகம் அநிருத்தன் என்பதாம். இந்த வியூக வடிவத்தில் நான்கு நான்கு பிரிவுகளுடன் மொத்தம் இருபத்துநான்கு அமைப்புகள் கணக்கிடப் பட்டுள்ளன. இதன் விபரம் மகாபாரதம் அநுசாசன பர்வத்தில் கூறப்பட்டுள்ளது. பொதுவாகத் திருமாலின் ஆயிர நாமங்களில் 24 நாமங்களின் விளக்கமே மேலே கூறப் பட்டுள்ளது. அந்த 24 நாமங்களின் விளக்கமே மேலே கூறப்பட்ட 24 முகங்களின் அமைப் பாகும். இந்த 24 முகங்களுக்குத் தக்கவாறு ஆயுதங்களும் 24 உண்டு என்கிறது பழைய ஆகம நூல்.

தசாவதார உருவ அமைப்புகள் :

அவதாரம் என்ற சொல்லிற்குப் பரம் பொருள் மக்களுடன் இணைந்து கலந்திருக்கத் தாழ வந்து அருள் பாலிப்பது எனப் பொருள். அவைகள் பூரணம் ஆவேசம் அமிசம் என்று மூன்று வகைப்படும். பத்து அவதாரங்களில் இராமனும் கிருஷ்ணனும் பூரண அவதாரங்கள். சில காலத்திற்குச் சில குறித்த செயலைச் செய்யத் திருமால் தனது சக்தியின் ஒருசிறு பகுதியைத் தான் விரும்பிய வஸ்துவிற் செலுத்தலாம். இதற்கு ஆவேசம் எனப் பெயர். பரசுராம அவதாரமே இதற்குச் சான்று. அமிசாவதாரங்களே ஆழ்வார்கள் போன்ற மகான்களின் தோற்றங்களாகும். திருமாலின் அவதாரங்கள் எண்ணற்றவைகளே யாயினும், பத்து அவதாரங்கள் மிக முக்கியமாகும். இந்தப் பத்து அவதாரங்களின் அமைப்புகள் பலமுறையில் இருக்கின்றன. அவை எப்படி என்பதைச் சிறிது பார்ப்போம்.

மச்சம்—மீன், கூர்மம் — ஆமை. இந்த இரண்டு அவதார உருவங்கள் முழுவதும் மீனாகவோ, ஆமையாகவோ காட்டப்படலாம். அல்லது மேல் பகுதி கிரீடத்துடனும் நான்கு கைகள் கொண்ட மனிதன் போலவும், கீழ்ப் பகுதி மீன் ஆமை ஆகியவற்றின் அமைப்பிலோ இருக்கலாம். வராக அவதாரத்தின் அமைப்போ பல விதம். பன்றித் தலையுடன் நான்கு கைகளுடன் மனித உடலுடன் இருக்கலாம். ஸ்ரீமுஷ்ணத்தில் எம்பெருமான் இந்தமாதிரி தான் சேவை தருவார். திருவிடவெந்தையில் பெருமாள் வராகத் திருமுக மண்டலத்துடன், பூமிப் பிராட்டியை இடது பக்கத்தின் தொடையில் அமர்த்திக் கொண்டும் அணைத்துக்கொண்டும் சேவை தருவார். இவருக்குப் பூவராகன் என்ற திருநாமம். வங்காளத்தில் வராகப் பெருமாள் ஒரு பக்கமாகப் பார்த்துக் கொண்டு, சங்கம் போன்ற முகத்துடன் முற்கால வடிவங்களின் அமைப்பில் தென்படுகிறாராம். சில சமயம் பரமபத நாதன் போல் அமர்ந்து, தேவியை மடியிலோ, அருகிலோ வைத்துக்கொண்டிருப்பது போலும் அமைக்கலாம். இவருக்கு யக்ஞ வராகன் என்று திருநாமமாகும் நரசிங்க அவதாரத்தின் சிறப்பினையும், அமைப்பையும் பற்றி விஷ்ணு தருமோத்திரம் என்னும் நூல் நன்கு உரைக்கிறது இது சிங்க முகத்துடனும் மனித உடலுடனும் இரணியனை மடியில் இட்டுக் கிழிப்பது போன்ற தோற்றமும், 4, 6, 8 கைகள் கொண்ட தோற்றமும் கொண்டதாகும். 12, 16 திருக்கைகள் கொண்ட வடிவங்களும் உள.

யோக நரசிம்மன், கிரிஜா, தாணு (லட்சுமி நரசிம்மன்) போன்றவர்கள் யோகாசனத்தில் இருப்பதாகவும், குகையிலிருந்து வருவது போலவும், தூணில் இருந்து வருவது போலவும் சிங்க முகத்துடன் அமைக்கப் பெற்றிருக்கலாம். கருடன் மேலும், ஆதிசேடன் மேலும் அமர்ந்திருக்கும் நரசிம்ம வடிவங்களும் உண்டாம். வாமன அவதார வடிவம் இரண்டு வகைகளில் இருக்கலாம். குள்ளமான பிரம்மசாரி ஒன்று. ஓங்கி உலகளந்த வடிவம் ஒன்று வைகானச ஆகமப்படி திருவிக்கிரமன் திருவடிகளில் தூக்கி இருப்பது, ஊன்றிய திருவடியான முட்டு வரையிலோ, நாபி வரையிலோ, திருமுடி வரையிலோ இருக்கலாம். 4, 8, திருக்கைகள் அமைக்கப்படலாம். பரசுராம அவதாரத்தில் 2, 4, கைகள் இருக்கும். கோடரியே இவருடைய ஆயுதம். இராம அவதாரத்தில் வில்லும் அம்பும் ஏந்திய கைகளே அடையாளமாகும். இராமனுடைய வடிவங்களில் நான்கு திருக்கைகளும் உண்டு.

பலராம அவதாரத்தில் இவருடைய முக்கிய ஆயுதம் கலப்பை. உலக்கையும் ஆயுதமாக இருக்கலாம். சில சமயம் கருடன் மேல் அமர்ந்திருப்பதாகப் பலராம வடிவத்தைக் காட்டுவதுண்டு. நான்கு திருக்கைகள் இவருக்கு அமைக்கப்பட்டால், அப்பொழுது கலப்பை, உலக்கை, சங்கு, சக்கரங்கள் அத்திருக் கைகளில் ஆயுதங்களாகும். தசாவதார வரிசையில் இவர் எழுந்தருளி இருக்கும்

பொழுது, ஒருகையில் கலப்பையும், மற்றொரு கையில் அபய அல்லது வரத முத்திரையுடன் இருப்பர். இவருக்கு மூத்தபிரான் பலதேவர் பலபத்திரர் சங்கர்ஷணன் என்றெல்லாம் திருநாமங்கள் ஆகும்.

கிருஷ்ணன்: பத்து அவதாரங்களில் இவரே மிகவும் புகழ்பெற்றவர். இவரது அருச்சை வடிவங்களின் தோற்றங்கள் எண்ணற்றவை. கல்கி அவதாரம். இதுவே கடைசி அவதாரம். இந்த அவதாரத் தோற்றத்தைப் பலபடியில் காட்டலாம். முகம் குதிரையின் முகம் போல் அல்லது மனிதனது போல் இருக்க. திருக்கைகள் 2, 4 கொண்டவைகளாக அமைக்கலாம். குதிரைமேல் அமர்ந்து பட்டாக்கத்தியுடன் வருவது போலும் அமைப்பார்கள். ஒரு கையில் கத்தியும், மற்றொரு கையில் குதிரையின் கடிவாளமும் இருக்கும். அல்லது வில்லும் அம்பும் இருக்கும். இவ்வாறு திருமாலின் பிம்ப உருவ அமைப்பில் மேலும் பற்பல அமைப்புகளும் உண்டு. சுருக்கமாக இதில் எழுதியபடி.

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் பரக்கலக்கோட்டை திரு.மத்தியபுரீசுவரசுவாமி கோயில் திருப்பணித் துவக்க விழா (26—1—72) தஞ்சைத் துணையாணையர் திரு. வி. எஸ். கோதண்டபாணி, B. Sc., B. L., அவர்கள் அடிக்கல் நாட்டுதல்.

"வாழ்முதல் ஆகிய பொருள்"

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

"போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே" என்று மணிவாசகப் பெருமான், தமது திருவாசகத்தில் திருப்பள்ளியெழுச்சியில், இறைவனைப் போற்றி வணங்கித் துதிக்கின்றார்.

"போற்றியென் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்
கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி
தொழுகோம்;
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே"

என்பது மணிவாசகர் அருளிய பாடல்.

வாழ்முதல் :

நம்முடைய மனித வாழ்க்கைக்கு இன்றியமையாமல் தேவைப்படுகின்ற பொருள்கள் பல. நம்முடைய வாழ்க்கைக்கு உணவும் நீரும் காற்றும் உடையும் உறையுளும் ஆகிய எத்தனையோ. பல பொருள்கள் இன்றியமையாதனவாக இருக்கின்றன. உணவு உண்ணாமலும், நீர் அருந்தாமலும். காற்றை உட்கொள்ளாமலும், உடை அணியாமலும், உறையுள் இல்லாமலும், நாம் உயிர்வாழ்தல் பெரிதும் கடினமான செயலாகும். இவைகள் அனைத்தும் வாழ்க்கைக்குரிய இன்றியமையாத பொருள்களாகத் திகழ்கின்றன.

எனினும். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பொருளின் உதவி, நமக்கு மேலும் மிகமிக இன்றியமையாத முதற்பொருளாக இருந்து வருகின்றது. அப்பொருளின் அடிப்படையும் ஆதாரவும் துணையும் இல்லாமல், நாம் வாழ்தல் இயலாது. அப்பொருளையே "கடவுள் என்றும், இறைவன் என்றும் பலவகைகளில் ஞான நூல்கள் நவில்கின்றன. அப்பொருள் தான் நம்முடைய வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாமல் உள்ள முதற்பொருளாகத் திகழ்கின்றது. நம் வாழ்க்கைக்கு வேண்டுவன பலவற்றுள்ளும் மிக மிக முதன்மையாக வேண்டப்படுவ தொன்றாதலின், கடவுட் பொருளை மாணிக்கவாசகர் "வாழ் முதலாகிய பொருள்" என்றார். 'வாழ்முதல் ஆகிய பொருள்' என்னும் தொடர், வாழ்க்கைக்கு முதன்மையான - இன்றியமையாத பொருள்' எனப் பொருள்படும்.

இறையுணர்வும் வழிபாடும், அவற்றின் பயனாக விளைந்து பெருகுகின்ற சான்றாண்மைப் பண்புநலங்களும் பிறவும், தனிமனிதனுக்குப் போலவே ஒரு சமுதாயம் அல்லது நாட்டிற்கும், அடிப்படைத் தேவையாக அமைந்து ஆக்கங்கள் பல அளிக்கின்றன. உண்மையான சமய வாழ்வும் உயரிய சமயநெறி உள்ளப்பாங்கும், தனிமனிதனின் வாழ்க்கையைச் சிறந்த முறையில் உருவாக்கி அவனை வையத்து வாழ்வாங்கு வாழச் செய்கின்றன. இவ்வாறே சமுதாயத்திற்கும் நாட்டிற்குங்கூட. அவைகள் பல்லாற்றானும் நலம்பெருக்கி நன்மை புரிகின்றன.

வாழ்வின் வேர் :

ஒரு சிலர், "மனிதன் நல்லவனாக - நல்லொழுக்கமுடையவனாக - பிறருக்குத் தீங்கு செய்யாமல் இயன்ற உதவி புரிபவனாக இருந்தால் அதுவே போதும்: இறையுணர்வும் வழிபாடும் சிறிதும் தேவை இல்லை" எனக் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் மனிதன் நல்லவனாக-நல்லொழுக்கமுடையவனாக-பிறருக்குத் தீங்கு செய்யாமல், இயன்ற உதவி புரிபவனாக வாழ்வதற்கு, இறையுணர்வும் வழிபாடும் இல்லாமல் இயலாது. வேர் இருந்தால் தான், மரஞ்செடிகொடிகள் வளரும்; மலர் காய் கனிகள் முதலியன தரும். அதுபோல இறை

யுணர்வு இருந்தால்தான். நல்லொழுக்கம் தோன்றவும், வளர்ந்து நிலைபெறவும் கூடும்.

தனக்கு மேற்பட்டு எல்லா அறிவும், எல்லா ஆற்றலும் வாய்ந்த பரம்பொருள் ஒன்று, எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் பரவி நின்று எல்லாவற்றையும் கண்டு கொண்டிருக்கின்றது, என்ற திண்ணமான எண்ணம் இருந்தால்தான், ஒரு மனிதன் உண்மையிலேயே நல்லவனாகவும், நல்லொழுக்கமுடையவனாகவும் இருத்தல் இயலும். எல்லாம் வல்ல பரம்பொருள் ஒன்று இவ்வுலகத்தினையும் இதன்கண் வாழும் எண்ணிறந்த உயிர்களையும், தன்னுடைய பேரறிவாலும் பேரருளாலும் படைத்துக் காத்து வருகின்றது என்று திண்ணமாக உணர்ந்து தெளிந்திருந்தால்தான், ஒரு மனிதன் பிற உயிர்களுக்குத் தீங்கு சிறிதும் இயற்றாமல் நலம்புரிந்து வாழ முற்படுவான். இறையுணர்வும் வழிபாடும் எய்தப்பெறாத ஒருவன், வெறும் மனிதநலக்கோட்பாடு (Humanism) கடைப்பிடித்தலால் மட்டும், சிறந்த உயர்ந்த செவ்விய நிலையை அடைந்துவிடுதல் இயலாது.

சிறுகாலை வாணியம் :

"முதல் இலார்க்கு ஊதியம் இல்லை" என்பது திருக்குறள். வாணிகம் செய்து பொருளீட்டி நலம் பெறுதற்கு முதற்பொருள் தேவை. முதற்பொருள் (மூலதனம்) இல்லையேல், நாம் வாணிகம் செய்து ஊதியம் பெறுதல் இயலாது. மனித வாழ்க்கையின் இயல்புகளைக் கவிஞர்களும் ஞானிகளும் பல வகைகளில் உருவகம் செய்து விளக்கியிருக்கின்றனர். வாழ்க்கை என்பது ஒரு வகை வாணிகம்; அன்பைக் கொடுத்து அருளைக் கொள்வது. "சிறுகாலை நாமுறு வாணியம்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிப்பிடுதல் காணலாம். இந்தச் சிறுகாலை வாணியத்திற்கு முதன்மையாகத் தேவைப்படுகின்ற மூலதனம், கடவுளுணர்வும் வழிபாடுமேயாகும். கடவுளுணர்வும் வழிபாடும் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்துகின்றன. நாம் நெறியல்லாத தீநெறிகளில் சென்று உழன்று வருந்தாமல், புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி, நம்மை மேலாம் நன்னெறி ஒழுகச்செய்து, கடவுள் உணர்வும் வழிபாடும் நமக்கு நலம்பல புரிகின்றன.

உடலின் தூய்மையையும் நலத்தையும் விரும்பாதார் எவருமிலர். உடலின் தூய்மையும் நலமும் எங்ஙனம் இன்றியமையாதனவோ, அங்ஙனமே உள்ளத்தின் தூய்மையும் நலமும் பெரிதும் போற்றத்தக்கனவாகும். உள்ளத்தின் தூய்மைக்கும் நலத்திற்கும் கடவுளுணர்வும் வழிபாடும் பெருநலம் பயப்பனவாகும். புறந்தூய்மை நீரான் அமைவது போல், அகந்தூய்மை இறையுணர்வாலும், வழிபாட்டாலும் ஏற்படுகின்றன. உடற்பிணியைத் தீர்ப்பதற்கு மருந்துகள் பயன்படுவதுபோல, உள்ளம் அல்லது உயிர் பற்றிய பிணிகள் நீங்கி நலம்பெறுவதற்கு, இறையன்பும் வழிபாடும் பெருந்துணை புரிகின்றன.

ஒரு தனி மனிதனின் வாழ்க்கை வளம் பெற்றுச் சிறப்பதற்கு, எங்ஙனம் இறையுணர்வும் வழிபாடும் துணை புரிந்து பெருநலம் விளைவிக்கின்றனவோ, அங்ஙனமே ஒரு சமுதாயத்தின் அல்லது நாட்டின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்குங்கூட, இறையுணர்வும் வழிபாடும், அவற்றின் அடிப்படையில் அமைந்த பழக்க வழக்க நல்லொழுக்க நாகரிகப் பண்பாடுகளும், இன்றியமையாதனவாக விளங்கிப் பெருநலம் பயக்கின்றன. எகிப்து, பாபிலோனியா, சீனா, இந்தியா, கிரீசு, உரோம் முதலிய நாடுகளின் வரலாறுகள் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

மனித நலக்கோட்பாடு என்பது தன்னளவில் ஓரளவு நல்ல கொள்கையேயாகுமெனினும், அது மேலும் மிகச் சிறப்புற்றுப் பயன் விளைவித்தற்கு இறையுணர்வும் வழிபாடும் இன்றியமையாதனவாகும். மனிதன் மனிதனாக

(1) "Without religious root there can be no real sincere morality, just as without roots there can be no real flowers.

—Count Leo Tolstoy,
Essays and Letters, p. 154

(2) "Belief is great, life-giving. The History of a Nation becomes fruitful, soul-elevating, great, as soon as it believes."

—Thomas Carlyle.

(3) "A systematic study of such cases, in the history of great civilizations of ancient Egypt, Babylonia, China, India, Greece, Rome and the Western Countries, the principal steps in religious and moral progress have uniformly been taken either during periods of major and protracted calamity or immediately after there termination......"

—Dr. Sorokin.

மட்டுமல்லாமல், அதனினும் மேம்பட்ட தெய்வ நிலைக்கும் உயருதல் வேண்டும். மனிதன் புனிதமுற்றுத் தெய்வ நிலையை அடைதலை வற்புறுத்தியே 'வையத்துள் வாழ்வாங்கு வாழ் பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்' என்று திருவள்ளுவர் அருளிச் செய்தார்.

"மனிதன் சமயம் இல்லாமல் வாழ முடியாது; ஏனெனில் அஃது ஒன்றே அவனுடைய ஒழுக்கத்தினை உருவாக்குகின்றது" என்பது தம்முடைய திண்ணமான கருத்து என்று, நம் பேரறிஞர் அண்ணா அவர்களும், நேர்முக உரையாடல்(பேட்டி) ஒன்றில் தெரிவித்திருப்பது இங்கு நாம் அறிந்து இன்புதற்குரியது.

இறையுணர்வும் ஒழுக்கமும் :

இறையுணர்வும் வழிபாடும் மனிதவாழ்க் கைக்கு எத்தனை இன்றியமையாதவை என்பதனை, லின்.யூ டாங் என்னும் சீன நாட்டுப் பேரறிஞரும், பின்வருமாறு கூறியிருத்தல் கொண்டு தெளிவுற உணரலாம். (5)

"கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக, என்னுடைய ஒரே சமயமாக, மனித நலக்கோட் பாடே இருந்து வந்தது. மனிதன் அறிவை வழி காட்டியாகக் கொண்டு நடந்து வந்தால், அதுவே அவனுக்குப் போதும்; அறிவில் முன்னேற்றமடைதல் ஒன்றே, தானாக ஒரு சிறந்த உலகத்தைக் கொண்டுவரும்' என்ற நம்பிக்கை எனக்கு இருந்து வந்தது. ஆனால், இந்த 20ஆம் நூற்றுண்டின் உலகாயத முன் னேற்றங்களையும், கடவுள் இன்றி வாழ்ந்து வரு கின்ற நாடுகளின் அழி செயல்களையும் பார்த்த பிறகு, வெறும் மனித நலக்கோட்பாடு மட்டும் போதாது; மனிதன் தான் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்தல் ஒன்றற்குக்கூட, தனக்குப் புறம் பாகத் தன்னைவிடப் பெரியதாக உள்ள ஒரு பேராற்றலுடன் தொடர்பு கொள்ள வேண்டிய வனாக இருக்கிறான்' என்பதனை, நான் இப்போது மிகவும் தெளிவாக நன்குணர்ந்து கொண்டு விட்டேன். அதனால்தான், நான் மீண்டும் கிறித்தவ சமயத்திற்குத் திரும்பிவிட்டேன். இயேசுபெருமான் எளிய முறையிலும், தெளிவான நிலையிலும், கற்பித்தருளிய கடவுள் உணர்விலும், கடவுள் அன்பிலும், யான் மீண்டும் சென்று சேர்தலை விரும்புகின்றேன்" என்று சீன நாட்டுப் பேரறிஞராகிய லின். யூ டாங் கூறியிருப்பது, ஒருவகையில் நம்முடைய மாணிக்கவாசகப் பெருமான் இறைவனை "வாழ்முதல்ஆகிய பொருள்" என்று குறிப் பிட்டு அருளியதின் சிறப்பையும் உண்மையை யும் தெளிவுற விளக்குகின்றது எனலாம்.

முடிவுரை :

எனவே நாம், நமக்கு வாழ்முதலாக அமைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல இறைவனை, நம் மனம் மொழி மெய்களால் நினைந்து துதித்து வணங்கி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து நலமுற முயலுவோமாக!

—ஆசிரியர்.

---

(4) "I am no atheist. But I dont belive in institutional religion. *It is, however, my conviction that man connot live without religion, because it alone can build up his character.* I am against idol worship. I am also against iconoclasm. Breaking idols is as bad as worshipping them. I am a rationalist."

—Dr. PERARIGNAR ANNA,
in The Illustrated Weekly of India,
sep. 26, 1965.

(5) "For over 30 years my only religion was humanism; the belief that man, guided by reason, was sufficient unto himself; that progress only in knowledge would automatically bring a better world. But, having witnessed the advances of 20th century materialism, and the doings of nations living without God, I am now convinced that humanism is not enough—that man, for his very survival, needs contact with a Power outside and greater than himself. And that is why I have returned to Christianity. I wish to re-enter that *knowledge and love of God* which Jesus taught with such clarity and simplicity."

—*Dr. Lin Yu-tang,*
Mysteps back to Christianity.

ஞான நூல்களில் திருமுறைக் குறிப்புக்கள்

பேராசிரியர் திரு. கு. சுந்தரமூர்த்தி

செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

சைவ நன்னெறியைத் தெய்வத் தமிழுடன் வளர்த்தவர்கள் திருத்தொண்டர்க ளாவர். கடைச்சங்க காலத்தை ஒட்டி எழுந்த தொண்டர்கள் முதல், பன்னிரண்டாம் நூற்றுண்டுவரை தோன்றிய தொண்டர்கள் வரை தெய்வச் சைவ நன்னெறி என்றென்றும் நின்று நிலவ அருந்தொண்டாற்றிய திருத் தொண்டர்கள் ஆவர். இவர்கள் அருளியவை திருமுறைகள் எனப்படும். இவைகளுக்குப் பின் தோன்றியவை ஞான சாத்திரப் பனுவல்கள் ஆகும். திருமுறைகள் நெய்யும், ஞானநூல்கள் அதன் சுவையும் போன்றவை. ஆதலின் ஞான நூல்களின் கருத்துக்கள் பலவும் திருமுறைகளி னின்றும் முகந்தெடுக்கப் பெற்றவையாய் விளங்குகின்றன. அது மட்டு மன்றித் திருமுறைகளின் சொற்றெடர்களை அப்படியே கொண்டெடுத்து மொழிவனவாயும் உள்ளன. அவற்றை இக்கட்டுரையில் ஒரு சிறிது காண்போம்.

1. திருக்களிற்றுப்படியார் :

இந்நூலை அருளியவர் திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனுர் ஆவர். இதன்கண் சைவ சமய குரவர்களாகிய சம்பந்தர் அப்பர் சுந்தரர் மணிவாசகர் ஆகியோரின் வரலாறுகளும் சிறுத் தொண்டர் கண்ணப்பர் முதலிய ஏனைய திருத் தொண்டர்களின் வரலாறுகளும் பேசப்படு கின்றன. அத்துடன் திருவாசகச் சொற்றெடர் இரண்டு அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன.

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை" என்னும் தொடர் திருவாசகத்தில் திருக்கோத் தும்பி என்னும் பகுதியில் உள்ளதாகும். அன்பு நெறியே சிறந்தது. அந்நெறி நின்றவர்களின் பெருமை அளவிட்டுரைத்தற் கரியது என்பதை விளக்கும் முகமாக இத்தொடர் எடுத்தாளப் பெற்றுள்ளது.

> கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை
> யென்றமையாற்
> கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக் —
> கண்ணப்பர்
> தாமறிதல் காளத்தி யாரறிதல் அல்லது
> மற்(று)
> யாமறியும் அன்பன் றது!

என்பது, அத்திருக்களிற்றுப்படியார் பாடலாகும்.

"சிவனென யானுந் தேறினன் காண்க" என்னும் தொடர். திருவாசகத்தில் திருவண்டப் பகுதியில் உள்ளதாகும். இறைவனே குருவாக எழுந்தருளி உயிர்களை ஆட்கொண்டருளு கின்றுன் என்னும் உண்மையை விளக்க இத்தொடர் எடுத்தாளப் பெற்றுள்ளது.

> சிவனெனவே தேறினன்யான் என்றமை
> யால் இன்றும்
> சிவன் அவனிவந்தபடி செப்பில்—
> அவனிதனில்

உப்பெனவே கூர்மை உருச்செய்யக்
கண்டமையால்

அப்படியே கண்டாய் அவன்.

என்பது, அத்திருக்களிற்றுப்படியார் பாடல்.

2. இருபாவிருபஃது :

இதனை அருளியவர் அருள்நந்திசிவாசாரியார். இந்நூல் குருவால் உணர்த்தப்படும் மெய்ம்மைகளைக் குருவை முன்னிலைப்படுத்தி வினவும் முகமாக அமைந்துள்ளது. அவற்றிற்குரிய விடைகளை ஒரோவழிக் கூறியும், ஏனைய இடங்களில் உய்த்துணருமாறும் கூறப் பெற்றுள்ளது. பத்து வெண்பாவும், பத்து அகவலும் கொண்டு இந்நூல் விளங்குதலின் இப்பெயர் பெற்றது. இந்நூலில் ஐந்து இடங்களில் திருமுறைத் தொடர்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன.

(1) "இருநிலனாய்த் தீயாகி" இத்தொடர் அப்பர் அடிகளில் திருத்தாண்டகத்தில் உள்ள பாடலின் முதற் குறிப்பாகும். இறைவன் உயிர்களுக்கு அருளும்பொழுது உடனின்று உணர்த்துவனோ? வேறாக நின்று உணர்த்துவனோ? வேறாக நின்று உணர்த்துவனாயின், எங்கும் நிறைந்தவன் என்பதை உணர்த்தும் இருநிலம் தீ என்று தொடங்கும் பெருநிலைத் தாண்டவத்தின் பொருள் பெருமானுக்குப் பொருந்தாதாகுமே! எனக்கேட்குமுகமாக, இத்தாண்டகம் இடம் பெறுகின்றது.

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாச மாயட்ட மூர்த்தியாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே

என்பது அத்திருத்தாண்டகமாகும்.

(2) "காண்பார் யார்கொல் காட்டாக்கால்"

(3) "ஆட்பால் அவர்க்கருள்"

இவற்றுள் முன்னையது அப்பர் அடிகளின் திருத்தாண்டகத்திலுள்ளது. பின்னையது ஞானசம்பந்தர் அருளியதாகும். உயிர்களுக்கு இறைவன் எப்பொழுது குருவாக வருவான்? பக்குவமுடைய பொழுது எனின், அப்பக்குவமே அமையும். இறைவன் குருவாக வருவது எற்றுக்கு? என்ற வினாக்களை எழுப்பிக் கொண்டு, அவற்றுக்கு விடையாக இத்தொடர்களைக் காட்டுகின்றார் ஆசிரியர்.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர்
அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா
தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா
தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க்
காட்டாக்காலே—அப்பர்.

ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதி
மாண்பும்
கேட்பான் புகிலளவில்லை கிளக்கவேண்டா
கோட்பாலனவும் வினையுங் குறுகாமையெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க
தக்கார்.—சம்பந்தர்-

என்பன அப்பாடலாகும் இறைவன் திருவருளைப் பெறுவதற்குத் திருத்தொண்டுகள் செய்து 'எது எமைப் பணிகொளும் ஆறு அது கேட்போம்' என்னும் பாங்கில் நிற்க வேண்டுமேயன்றி, ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதித்தல் கூடாது என்பது. மேல் வினவிய வினாவிற்கு விடையாகும். இப்பாடலின் கருத்துமாகும்.

(4) "உன்னில் துன்னி உறவிடில் பெயர் குவை": இது அப்பரடிகளின் திருமுறைப் பாடல் ஒன்றின் மூன்றாம் அடியில் உள்ள தொடராகும். இறைவன் உயிர்கள் தன்னை நினையும் பொழுது கூடியும், நினையாதபொழுது நீங்கியும் நிற்பன், என்பதை விளக்க எடுத்தாளப் பெற்றதாகும்.

"பன்னிலூறும் பழத்தினில் இன்சுவை
என்னிலூறி எனக்கே களிதரும்
உன்னில் உன்னும் உறவிடில் விட்டிடும்
என்னுள் ஈசன் இருந்த இயற்கையே"

என்பது அப்பாடலாகும்.

3. சங்கற்ப நிராகரணம் :

இந்நூல் உமாபதி சிவாசாரியரால் அருளிச் செய்யப்பெற்றது. இது மாயாவாதி முதல் சைவவாதி வரையுள்ள பல திறத்தவரின் கோட்பாடுகளைக் கூறி அவற்றை மறுத்துத் தன்கோள் நிறுவ எழுந்ததாகும். இதில் பல் வேறு இடங்களில் திருமுறைக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

"காழி மாநகர்க் கவுணியர் கடவுள்
ஞானமாகிய நற்பதி கங்கள்"

என ஞானசம்பந்தரையும், அவர் அருளிய பதிகங்களையும் சிறப்பித்திருப்பது ஈண்டு இன் புறுதற்குரியதாகும். இறைவன் பொறிபுலன் களுக்கு எட்டாதவன் என்பதை அருள் தலைவர் பலரும் முன்னர்க் கூறியுள்ளனர் என்பதைச் சங்கிராந்த வாதிக்கு அறிவுறுத்தும் முகமாக நக்கீரர், அப்பர், மணிவாசகர் அருளிய திரு முறைகளைக் குறிக்கின்றார். 'நிறைந்து நீயாய் நின்றனை யேனும், மறைந்து ஐம்புலனால் வாராய் என்றும்' என்ற தொடர்கள்,

நிறைந்து எங்கும் நீயேயாய் நின்றாலும் ஒன்றின்
மறைந்து ஐம் புலன்காண வாராய் சிறந்த
கணியாருந் தண்சாரற் காளத்தி ஆள்வாய்
பணியாயால் என்முன் பரிசு

என்ற பதினோராம் திருமுறையின் பாடற் றொடர்களை முகந்து நிற்றல் காணலாம். 'கரணம் எல்லாம் கடந்தனை என்றும்' என்ற தொடர்,

"கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறை மிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென்று இவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்னும் திருவாசகத்தோடு ஒத்திருக்கும். இவ்வாறே, இந்தச் "சங்கற்ப நிராகரணம்" என்னும் சைவசித்தாந்தத் தத்துவப் பெரு நூலின்கண்,

"உலகேழ் எனத்திசை பத்தென ஒருவன்
பலவாய் நின்ற படிஇது என்றும்;
ஊனாய் உயிராய் உணர்வாய் என்றும்
மானக் கண்ணே மணியே என்றும்
தாமே தானுச் செய்பவன் என்றும்
நாமே சிவமாய் நண்ணினம் என்றும்
காயாய்ப் பழமாய்ச் சுவையாய் நுகர்வும்
ஓயாது உண்போன் தானே என்றும்
அறிவோன் தானும் அறிவிப் போனும்
அறிவாய் அறிகின்றானும் அறிவுறு
மெய்ப்பொருள் தானும் வியந்திது வெனப்படும்
அப்பொருள் யாவும் அவனே என்றும்
தாய்தலைப் பட்டங் கொன்றாய்த்து என்றும்
ஏத மறநான் கெட்டேன் என்றும்
இன்னும் இன்னும் இறையோர் அளித்தவை
பன்னில் எண்ணரும் பான்மைத்து ஆதலின்"

"சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாய்
என்றிறை இயற்கை இயம்புதல் தகுமே"

எனவரும் இடங்களில் எல்லாம் எத்தனையோ பல திருமுறைப் பாடல்களின் மணம் முழுமை யாகக் கமழ்ந்து நிற்கக் காணலாம்! இவற்றால் திருமுறைகளுக்கும் சித்தாந்த நூல்களுக்கும் இடையேயுள்ள பலவகை இயைபுகளை நாம் இனிதுணர்ந்து மகிழ்ந்து இன்புறலாம்.

கூத்துக்கலையும் தெய்வநலமும்

திரு. செ. வைத்தியலிங்கம், M.A., M.Litt.,

தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

இயல் இசை கூத்து என்ற முப்பெரும் அடிப்படையிலே மொழியை வளர்த்துச் சிறந்தவர்கள் தமிழர்கள். இயலும் இசையும் துணை நிற்கக் கூத்தினுள் இன்பங் கண்டவர்களும் அவர்களே. சாந்திக்கூத்தினுள் ஒருவகையே நாடகம்; கதை தழுவிவரும் கூத்தினையே நாடகமெனக் கருதுகிறார் அடியார்க்கு நல்லார். நடனமெனப்படும் கூத்தினையே நாடகமெனவும் புலவர்கள் கருதிக் கையாண்டுள்ளனர்.

நாடகத்தை நுண்கலையாகக் கண்டு, அதனைத் தெய்வ நலத்தொடர்புடன் தமிழர்கள் வளர்த்துள்ளனர். கிரேக்க நாடகங்கள் தொடக்கக் காலத்தில் புராணக் கதைகளையே மையமாகக் கொண்டு வளர்ந்தன என்பர்; அவைபோன்று தமிழ் நாடகங்களும் புராண இதிகாசக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்தன எனலாம். வடமொழியிலும் தமிழ்மொழியிலுமாக அமைந்துள்ள கடவுட் கதைகளை, நடன நாடகங்களுக்கு ஏற்பப் பகுத்தும் குறைத்தும் அமைத்துக் கொள்ளுவதைச் சேதம் என்பர். சிலப்பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார் இதனைக் குறித்திட,

"ஆரியந் தமிழெனுஞ் சீர்நட மிரண்டிலும்
ஆதிக் கதையை அவற்றிற் கொப்பச்
சேதித் திடுவது சேதமென் றாகும்"

என்ற உரைமேற்கோளினைத் தருகின்றார். கதை தழுவி ஆடிய நடனங்களே நாளாவட்டத்தில் பல பாத்திரங்களால் நடிக்கப்படும் இசை நாடகங்களாகவும், உரையாடல் நாடகங்களாகவும் வளர்ச்சியுற்றன. அவை மக்களுள்ளத்தை ஈர்த்துச் செந்நெறிப்படுத்தும் கலைக் கருவிகளாகத் தொண்டாற்றத் தலைப்பட்டன.

நடனமும் நாடகமும் :

சிலப்பதிகாரத்துள் குறிப்பிடப்படும் பதினோராடல்களைக் காணுகையில் அவை அவுணர்களை அழித்திட அமரர்கள் ஆடியன என்பது புலனாகும்; அவற்றுள் பாண்டரங்கம் கொடுகொட்டி ஆகிய இரண்டும் சிவனுக்குரியன என்றும், அல்லியம் மல் குடம் ஆகிய மூன்றும் கண்ணனுக்குரியன என்றும், துடி குடை என்ற இரண்டும் முருகனுக்குரியன என்றும், பேடு என்பது காமனுக்குரியது என்றும், மரக்கால் என்பது துர்க்கைக்குரியது என்றும், பாவை என்பது திருமகளுக்குரியது என்றும், கடையம் என்பது இந்திராணிக்குரியது என்றும் அறியலாம். ஆக இந்த ஆடல்களெல்லாம் தெய்வத் தொடர்புடையன என்பது விளங்கும். இவையேயன்றி ஆய்ச்சியர் குரவையால் கண்ணன் மாண்பும், குன்றக் குரவையால் முருகன் மாட்சியும் அறியலாகும். அவ்வாறிருக்கக் குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என்ற ஆறுடன் விதூடகக் கூத்தையோ, வெறியாடலையோ (வேலன் வெறியாட்டு) சேர்த்து ஏழாகக் கொண்டு விநோதக் கூத்து என்பர்.

அக அடிப்படையில் ஆடப்படும் ஆய்ச்

சியர் குரவையைப் போன்றே, வடநாட்டிலும் இராசலீலை (கோபியர் ஒவ்வொருவரிடத்தும் கண்ணன் தோன்றிக் கைகோத்து ஆடும் நடனம்) ஆடப்பெற்று, மக்களால் பெரிதும் போற்றப்படுகிறது.* தெய்வமேயன்றி மக்களும் பேய்களும் கூடக் குரவைக் கூத்து ஆடியமைக்குத் தமிழிலக்கியங்களில் குறிப்புக்கள் உள. போர்க்களத்தில் தேர்த்தட்டிலே நின்று கொற்ற வேந்தன் போர் வீரர்களுடன் கை கோத்து ஆடும் குரவையாகிய முன் தேர்க் குரவையும், கொற்ற வேந்தனைப் பாராட்டுமுகத்தான் போர்க்களத்திலே நிணமுண்ட பேய் ஆடுகின்ற பின்தேர்க்குரவையும் பற்றிப் புறத்திணை இலக்கியங்களில் காண்கிறோம்.

கலிநடம் என்பதைக் கழாய்க்கூத்து என்பர் அடியார்க்கு நல்லார்; கழாய்க்கூத்தினையும் கழைக்கூத்தினையும் ஆரியக் கூத்தாகவே அறிஞர்கள் கூறுகின்றனர். ஆரியக் கூத்தானது சேதம் அடிப்படையிலே, புராண இதிகாசங்களைச் சேதித்து அமைத்துக் கொட்டிச்சேதம் போல ஆடப்பட்டிருக்குமோ என்றும் சிந்திப்பது நல்லது. திருவிடைமருதூரில் பாண்டியன் முடித்தலை கொண்ட கோப்பரகேசரி வர்மனை இரண்டாம் ஆதித்தனுடைய ஆட்சியில் ஆண்டுதோறும் ஏழு நாட்கள் ஆரியக்கூத்து நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டது. அரசனுடைய திருமுகத்தைப் பெற்றவுடன் கோயில் ஸ்ரீகாரியம் பார்க்கும் அதிகாரியும், திரைமூர் ஊர்ச்சபையினரும், வணிகர்குழாமான நகரத்தாரும், தேவகன்மிகளும் கோயில் நாட்டிய அரங்கத்தில் கூடி ஆண்டுதோறும் ஏழுநாட்டியங்களை நிகழ்த்தவேண்டும் எனவும், கூத்தன் ஒவ்வொருவனுக்கும் 14 கலம நெல் வழங்க வேண்டும் எனவும் முடிவு செய்தாராக அறிகிறோம் என்று கல்வெட்டாராய்ச்சி அடிப்படையுடன் கூறுகிறார் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியனார்.

குடக்கூத்து என்பது நின்றாடல் திறத்தது. மன்மதன் மகன் அநிருத்தனைத் தன்மகள் உழையின் பொருட்டுச் சிறை வைக்கிறான் வாணாசுரன்; அவனூர்த் தெருவிலே கண்ணன் குடங்கொண்டு ஆடிய கூத்தாகும். இதன் வழிவந்த அடையாளம் போல இன்று கரகக் கூத்தினை ஆடுகின்றனர்.

கரணம் என்பது படிந்த ஆடலாகக் கூறப்படுகிறது. ஆடுகையில் தலைகீழாகப் புரண்டாடும் கூத்து வகையாகவும் இருக்கலாம்; புற அகக் கரணங்களுக்கு வேலை தரும் கூத்தாகவும் இருக்கலாம்; ஆராய்தற்குரியது.

நோக்கு என்பது பாரமும், நுண்மையும், மாயமும் உடையதென்பர் அடியார்க்கு நல்லார். இது கண்களுக்கு நிரம்பவும் வேலை தருகின்ற கூத்தாக இருக்கலாம். மணிவாசகர் குறிப்பிடும் திருத்தோள் நோக்கம் இந்த அடிப்படையில் அமைந்ததா என்பதும் ஆராய்தற்குரியது.

தோற்பாவைக்கூத்து என்பது தோலினால் பாவைகளைச் செய்து அவற்றினைக் கயிறுகளால் தொடர்புபடுத்திச் சூத்திரதாரியினால் இயக்குவதாகும். புராண இதிகாசக் கதைகளை இன்றும் 'பொம்மலாட்டம்' என்ற பெயரால் நடத்துவதைக் காணலாம். இடைக்காலத்திலும் கோயில்களில் தோற்பாவைக்கூத்து நடத்தப் பட்டதைப்பற்றி வரலாற்றுக் குறிப்புக்களால் அறியலாம். தோற்பாவைக் கூத்தினுள், கடவுள் என்ற சூத்திரதாரியினால் தாம் ஆட்டுவிக்கப்பட்டு மயங்கிக் கிடக்கின்ற குறிப்பினை மணிவாசகர்,

'சீல மின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை'

என்று திருவாசகம் ஆனந்தமாலையுள் குறிப்பிடுகிறார். இந்த இலக்கியச் சான்றாலும் தோற்பாவைக் கூத்தின் தொன்மை பெறப்படும். இன்றும் நம் நாட்டுப் பண்பினையொட்டிய இராமாயணக் கதைப்பகுதிகளை, இந்தோனேசியாவில் பொம்மலாட்டமாக நடத்திக் களிக்கின்றனர்.

வெறியாட்டு என்பது வேலன் என்ற பூசாரி தெய்வ மேறப்பட்ட நிலையில் இன்னியங்கறங்கப் பூப்பலி சிதறியாடும் கூத்தாகும். தொல்காப்பியம் பொருளதிகாரத்துள்,

'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும்'

என்று குறிப்பு வருகின்றது. இந்த வெறியாட்டிலே பெண்பாற்பக்கமாகிய வெறியெனவும் குறிஞ்சி நிலத்துள்ளார் வென்றி வேண்டியாடும் வெறியெனவும் இருவகை உண்

JL
O2m211, N59TK
N71.14.6
148695
000 008

டென்பர். இக்கூத்தினுல் திருமுருகனிடம் தணிவும் கனிவும் ஏற்படுமென மக்கள் நம்பினர். பயத்துடன் பக்தியை வளர்க்க இக்கூத்து வழிகோலியது. பரிபாடலும்,

"சால்வ தலைவவெனப் பேஎ விழவினுள்
வேல னேத்தும் வெறியு முளவே"

என இதனை நன்கு குறித்திடுதல் காண்க.

ஆக, இவ்வாறெல்லாம் அமைந்த விநோதக் கூத்துக்கள். கொடித்தேர் வேந்தரும் குறுநில மன்னரும் முதலாக உடையோர், பகை வென்றிருந்த இடத்து விநோதத்துடன் பார்த்துச் சுவைக்கத்தக்கனவாய் விளங்கின. இவற்றுள் பெரும்பாலன தெய்வத்தொடர்புடன் அமைந்திருந்தன.

மன்னர்கள் காணுமாறு வேத்தியல் கூத்துக்களாக இவை ஆடப்பட்டு வந்தன பிற்காலத்தில் கோயில் விழாக்களில் பொது மக்களை ஒன்று திரட்டவும், இவைகள் பெரிதும் பயன்பட்டன. மக்கள் இவற்றின் தெய்வநல நோக்கத்தைத் தக்காங்குப் புரிந்து கொள்ளவில்லை. பெரிய கோயில்களை உருவாக்குகின்ற போதே நிருத்தமண்டபம் அல்லது நடனசாலையானது அமைக்கப்பட்டதைப்பற்றி வரலாறு கூறுகின்றது; அவ்வாறிருந்தும் மக்கள் கொண்ட பயனென்ன? நடனமும் நாடகமும் நன்கு நடந்தேற வேண்டும் என்ற நோக்கத்துடன் காப்புத் தெய்வங்களை வாழ்த்திய வண்ணம் தொடங்கியிருக்கின்றனர் கலைஞர்கள். கலைப்புரவலர்களும் போதிய ஊக்கம் தந்திருக்கின்றனர்.

தஞ்சைப் பிரகதீசுவரர் கோயிலை இராசராசன் எடுப்பித்த காரணத்தால் அது இராசராசேச்சுரம் என வழங்கப்படுகிறது. அதனில் சதயத்திருநாள் கொண்டாடப்பட்டமை பற்றியும், வைகாசி மாதத்துத் திருவிழாவில் கோயிலிலே இராசராசவிசயம் என்ற நாடகம் நடத்தப்பெற்றமை பற்றியும், நாடகமாடுவோர்க்கு மாமன்னன் நிவந்தங்கள் அளித்தமை பற்றியும் கோயில் கல்வெட்டுக்களால் அறியலாம். பிறகு, தஞ்சைக் கோயிலில் அஷ்டகோடி எனும் எட்டாம்நாள் உற்சவத்தின் இரவு சரபேந்திர பூபாலகுறவஞ்சி நாடகம் என்பது கோயில் நடனப் பெண்களால் ஆடப்பட்டு வருகிறது. கோயிலுள், திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற நாடகம் நடந்ததைப் பற்றியும் அறிகிருேம். இதனுல் நடனம் என்னும் கூத்துக்கலைக்கும், தெய்விக நலத்துக்கும் உரிய இயல்புகளும் இயைபுகளும் பெரிதும் புலனுகும்.



சிதம்பரம் சிவகாமசுந்தரியம்மை கோயில் கும்பாபிஷேகக் காட்சி, 6—[illegible]—72.

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய

திருமாலை

(மூலமும் உரையும் ; முற்றொடர்ச்சி)

பணிவினால் மனம தொன்றிப்
பவளவாய் அரங்க னார்க்குத்
துணிவினால் வாழ மாட்டாத்
தொல்லை நெஞ்சே நீ சொல்லாய்!
அணியினார் செம்பொன் ஆய
அருவரை அனைய கோயில்
மணியனார் கிடந்த வாற்றை
மனத்தினால் நினைக்கல் ஆமே?

(பொழிப்புரை) பவளம் போன்ற உதடுகளையுடைய அழகிய மணவாளனுக்குப் பணிபுரியும் ஆர்வத்தால், மனத்தினை ஒருமைப்பாடு உறச் செய்து அதனால் அச்சமின்றித் துணிவுடன் வாழத் தெரியாமல், துன்பம் விளைவிக்கின்ற நெஞ்சமே! அழகினால் நிறைந்த, செவ்விய பொன்னால் அமைந்த, பெரிய மேரு மலையைப் போன்ற திருவரங்கம் பெரிய கோயிலில், நீல மணி போன்ற நிறமுடையவராகிய திருவரங்க நாதர் கண்வளர்ந்தருளும் அழகினை, நாம் நம் நெஞ்சினால் அளவிட்டு அறிதல் கூடுமோ? நீயே சொல்லிக் காண்பாயாக!

(குறிப்புரை) திருவரங்கநாதன் கண்வளர்ந்தருளுகின்ற அழகினை, நாம் நம் நெஞ்சினால் அளவிட்டறிதல் இயலாது என்பது கருத்து. எனினும், மனத்தை ஒன்றுவித்து எம்பெருமான்பால் சிந்தனையைச் செலுத்தி அவனைப் பணிதல் வேண்டும் என்றும், நாம் உய்வதற்குரிய எளிய இனிய வழி இதுவே என்றும் வலியுறுத்தியவாறு.

பணிவினால்-பணி செய்யும் ஆர்வத்தால். துணிவு தெளிவு: உறுதியான பக்தி. உள்ளமானது பல வகைகளில் அலையாமல் இறைவன் ஒருவனையே நினைந்து பற்றுதல் வேண்டுமாதலின் 'மனமது ஒன்றி' என்றார். ஒன்றி-ஒருமைப்பட்டு. இறைவனைப் பணிந்து உய்ய முயலாமல் நெடுங்காலமாக உலகியல் நுகர்ச்சிகளில் உழன்று கெட்டொழிந்தமையின் "வாழமாட்டா" என்றும் இன்பம் தருதற்குத் துணை புரிதற்குரியது துன்பம் விளைதற்குக் காரணமாயினமையின் "தொல்லை நெஞ்சு" என்றும் குறிப்பிட்டார். திருவரங்கம் பெரிய கோயில், பொன்மயமாக அழகிற் சிறந்து, அகன்று விரிந்து உயர்ந்து ஒரு பெரும் மலை போல் காணப்படுதலின், "அணியினார் செம்பொன்னாய அருவரை அனைய கோயில்" என்றார். கோயிலாழ்வார்க்குள்ளே பெரிய பெருமாள் கண்வளர்ந்தருள்கிற தன்மை, மாமேரு மலையைப் புடைபடத் துளைத்து, அது விம்மும்படி அதன்கண் ஒரு நீலமணியை அழுத்தி வைத்தாற்போலக் கவினுற்றுத் திகழ்கின்றது என்பது கருத்து. (21)

பேசிற்றே பேசல் அல்லால்,
பெருமை ஒன்று உணரலாகாது;
ஆசற்றார் தங்கட்கு அல்லால்,
அறியல் ஆவானும் அல்லன்;
மாசற்றார் மனத்து ளானை
வணங்கிநாம் இருப்ப தல்லால்,

பேசத்தான் ஆவதுண்டோ?
பேதை நெஞ்சே நீ சொல்லாய்

(பொழிப்புரை) அறிவில்லாத நெஞ்சமே! வேதங்களும் முனிவர்களும் பிறரும் புகழ்ந்து துதித்தனவற்றையே, நாமும் கூறிப்புகழ்ந்து துதித்தலல்லாமல், இறைவனது மேன்மைகளுள் ஒன்றனையும் நாம் சிறிதேனும் உணர்தல் இயலாது. குற்றமற்ற சிறந்த அடியவர்களுக்கு அல்லாமல், ஏனையோரால் அவன் அறியப்படக் கூடியவன் அல்லன். குற்றமற்ற அடியவர்களின் நெஞ்சில் என்றும் நிலைபெற்றிருக்கின்ற இறைவனை, நாம் வணங்கிக் கொண்டு இருப்பதனைத் தவிர, அவனது பெருமையை ஆராய்ந்தறிந்து அதனை அளவிட்டுப் பேச நம்மால் இயலுமோ?

(குறிப்புரை) இறைவன் குற்றமற்ற அடியவர்களின் சிந்தையில் என்றும் நிலைபெற்று நிறைந்திருப்பவன். அவனை வேதங்களும் ஆகமங்களும் போற்றிப் புகழ்ந்து துதிக்கின்றன. அப் புகழுரைகளையே நாமும் திரும்பக் கூறி அமைவதல்லாமல், நம்மால் அவனுடைய பெருமைகளுள் ஒரு சிறு கூற்றினையும் உணர்தல் இயலாது. அவனது எல்லையற்ற பெருமைக்கு ஏற்றபடி, நாம் அவனைப் புகழ்ந்துரைத்தல் என்பது, நம்மால் இயலாத செயலேயாகும் என்பது இப்பாடலின் கருத்து. "நின் ஆர்வலர் தொழுதேத்தி நின் புகழ் விரித்தனர் கிளக்குங்கால், அவை நினக்கு இறும்பூது அன்மை நற்கறிந்தேம் ஆயினும், நகுதலும் தகுதி ஈங்கு ஊங்கு நிற்கிளப்ப" எனவரும் பரிபாடல் வரிகளும், அவற்றிற்கு "நின் புகழ்களெல்லாம் நினக்கு இயல்பாவன அல்லது வியக்கப்படுவன அல்லாமையை அறிந்து வைத்தும், அத்தன்மையம் அல்லாத நாங்கள் அவற்றுட் சிலவற்றை ஈங்கும் ஊங்குமாகப் பிறழக் கூறுவதற்கு நீ நகுதலும் எமக்கு ஒரு தகுதியாம்; அதனால் யாம் நின் புகழ் கிளத்தலும் ஒழிதற்பாற்றன்று" எனப் பரிமேலழகர் எழுதிய உரையும் இங்கு உணரற்பாலன. (22)

கங்கையிற் புனிதம் ஆய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம் தன்னுள்,
எங்கள்மால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்,
எங்ஙனம் மறந்து வாழ்கேன்?
ஏழையேன் ஏழை யேனே!

(பொழிப்புரை) கங்கையாற்றைக்காட்டிலும், தூய்மையும் தெய்விகத் தன்மையும் உடையதாகிய காவிரி யாற்றின் நடு இடத்தில், பொங்கி வருகின்ற நீர்ப்பெருக்கானது எங்கும் பரந்து பாய்வதும், அழகிய சோலைகளை உடையதுமாகிய திருவரங்கத்தில், எங்கள்பால் பேரன்பு உடையவனும், எல்லோர்க்கும் எல்லாவற்றிற்கும் தலைவனும், அனைத்தையும் இயக்கி ஆள்பவனுமாகிய திருவரங்கநாதன், பள்ளி கொண்டிருக்கின்ற ஒப்பற்ற அழகிய திருக்கோலத்தை, இனிது கண்டு வணங்கப்பெற்ற பிறகும், அவ்வழகிய காட்சியினை யான் எங்ஙனம் மறத்தல் இயலும்? மறந்தால் உண்மையிலேயே யான் ஏழையாகிவிடமாட்டேனா? அரங்கனின் அழகிய காட்சியை மறந்துவிட்டு, ஏழையேன் ஆகிய நான் எங்ஙனம் வாழ்வேன்?

(குறிப்புரை) கங்கை நதியானது, திருமாலின் திருவடியினின்று தோன்றியது ஆதலால் தூய்மையானது. ஆயினும் உருத்திர சம்பந்த முடையதாய், அதனால் சடைச்சாறு எனப்படும் ஒரு குறையுடையது. காவிரிக்கு அத்தகையதொரு குறையின்மையுடன், கங்கையைத் தன் திருவடியினின்று தோற்றுவித்த திருமாலே, மிகவும் விரும்பிப்போந்து தன்கண் பள்ளிகொண்டுள்ள மாட்சிமையை உடையதாதலின், 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்று, ஆழ்வார் காவிரியைச் சிறப்பித்தார். காவிரி வெள்ளமானது, திருவரங்கம் கோயிலை அணுகுகின்றோம் என்னும் பெருமகிழ்ச்சியினால் உந்தப்பெற்றுக் கிளர்ந்து மேலிட்டுப் பெருகி விரைந்தோடி வருகின்றது என்பார் "பொங்கு நீர் பரந்து பாயும் அரங்கம்" என்றார். பெரிய பெருமாளின் எழிலிளங் குமரப் பருவத்துக்கு ஏற்ப இனிய நீர்வளத்தையும், இனிய குளிர்ந்த சோலைகளையும் உடையதென்பார் "நீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம்" என்றார். மால் பேரன்பினையுடையவன். இறைவன் எல்லா உலகங்களுக்கும் தலைவன். ஈசன் எல்லா உலகங்களையும் ஆள வல்ல திறமையுடையவன். அழகிய மணவாளன் பள்ளிகொண்டுள்ள திருக்கோலத்தைக் கண்டவர்கள் அதன் அழகினை ஒரு போதும் மறத்தல் இயலாது. மறந்துவிட்டால் பின்னர் உயிர் தரித்தல் இயலாது. ஆதலின் 'மறந்து எங்ஙனம் வாழ்கேன்' என்றார். (23)

வெள்ளநீர் பரந்து பாயும்
விரிபொழில் அரங்கம் தன்னுள்,
கள்வனுர் கிடந்த வாறும்,
கமலநன் முகமும் கண்டும்,
உள்ளமே வலியை போலும்;
ஒருவனென் றுணர மாட்டாய்;
கள்ளமே காதல் செய்துன்
கள்ளத்தே கழிக்கின்ருயே

(பொழிப்புரை) வெள்ளப் பெருக்கை யுடைய காவிரி ஆருனது, எங்கும் பரந்து பாய்வதும், விரிந்து பரந்த சோலைகளையுடையதுமாகிய திருவரங்கத்தின் கண், பெருமாளை அணுகினல் அநுபவிக்கமாட்டாமலும், பிரிந்தால் தரிக்க மாட்டாமலும், பேதைமைக் குணம்கொண்டு நிற்கின்ற யான், அடியார்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுபவனை அழகிய மணவாளன் பள்ளி கொள்ளும் படியையும், அவனது தாமரை மலர் போன்ற அழகிய திருமுகத்தையும் கண்டு வணங்கப்பெற்ற பிறகும், உருகாமல் இருத்தலால், நெஞ்சமே நீ ஒரு கருங்கல்லைப்போன்ற வலிய தன்மை யுடையை போலும். அழகிய மணவாளன் ஒப்புயர்வற்றவன் என்று உணர்ந்து கொள்ள மாட்டாமல், கள்ளத்தன்மை மிகுந்த பக்தியையே செய்துகொண்டு, உன்னுடைய கள்ளச் செயல்களிலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்ருயே! இஃது என்?

(குறிப்புரை) திருவரங்கத்தின் இயற்கை அழகின் சிறப்பினை விதந்து வியந்து, "வெள்ள நீர் பரந்து பாயும் அரங்கம்" என்றும்; 'விரி பொழில் அரங்கம்' என்றும் புகழ்ந்துரைத்தார். பெருமாள் பரமபதத்தில் நித்திய சூரிகளுடன் கலந்து மகிழ்தலைக் கைவிட்டுத் திருவரங்கத்தில் வந்து கண் வளர்ந்தருளுவது, உண்டியே உடையே உகந்தோடும் உலக மக்களைத் தன் பக்கல் வயப்படுத்திக் கொள்ள வலை வீசுதற்கே யாதலால், 'கள்வனுர்' என்று குறிப்பிட்டார். தாய்க்கொலை செய்யும் இயல்பினனும் கண்டு மயங்கி நிற்கத் தகுந்த பேரழகு வாய்ந்த பெருமாளின் கமல நன்முகம் கண்டும் உருகாத, நெஞ்சத்தினைக் கடிந்து "உள்ளமே! வலியை போலும்" என்று இகழ்ந்தார். உள்ளம் உருகாதிருத்தலைக் குறிக்க 'ஒருவனென்று உணர மாட்டாய்' என்ருர். ஒருவன் - ஒப்புயர் வற்றவன். ஏழைமை-அறிவின்மை; திருவருட் பேறின்மை. உண்மை அன்பும் உருக்கமும் இன்றிப் போலியாக நடித்தலின் 'கள்ளமே காதல் செய்து, உன் கள்ளத்தே கழிக்கின்ருயே' என்று, ஆழ்வார் தம் உள்ளத்தை இகழ்ந்து கூறிப்பழிக்கின்ருர். (24)

(தொடரும்)—ஆசிரியர்



சிதம்பரம் திரு. சிவகாமசுந்தரி கோயில், கும்பாபிஷேகக் காட்சி. (3—2—72)

படிமத் திருக்கோலங்கள்

திரு. வை. கணபதி ஸ்தபதி அவர்கள், B. A., B. T.,

கண்காணிப்பாளர்,

அரசினர் சிற்பக்கலைப் பயிற்சி நிலையம், மாமல்லபுரம்.

தெய்வப் படிமங்களின் திருக்கோலங்கள் 'ஆசனங்கள்' எனப்படும். அவற்றை முறைப்படுத்தி ஐவகையாக வகுத்துள்ளன சிற்ப நூல்கள். அவை முறையே ஸ்தானகம், ஆஸனம், சயனம், ஸ்தானாசனம், சயனாசனம் ஆகும். இவற்றை ஐந்தொழில் என்றும், 'பஞ்ச கிருத்யம்' என்றும் விசுவகர்மீயம் என்ற சிற்ப நூல் கூறும்.

நின்ற கோலத்தை ஸ்தானகம் என்றும், அமர்ந்த கோலத்தை ஆஸனம் என்றும், கிடந்த கோலத்தை சயனம் என்றும், நின்ற கோலத்தைச் சார்ந்த பிற சாயல்களை ஸ்தானாசனம் என்றும், கிடந்த கோலத்தைச் சார்ந்த பிற சாயல்களை சயனாசனம் என்றும் ஐந்து பொதுவகையாக நாம் கூறுகிறோம்.

ஆஸனம் என்ற சொல் அமர்ந்த நிலையைக் காட்டுவதோடல்லாமல் கோலம் (Posture) என்ற பொருளையும் உணர்த்தும். தலையையும் உடலையும் நேராக நிமிர்த்தி ஒரு பாற் கோடாமல், சமநிலையில் கைகளையும் கால்களையும் அமைத்து, நேர் நோக்குடையதாக அமைக்கப்படும் சிற்ப அமைதிக்கு சமபாத ஸ்தானகம் என்று பெயர். இந் நிலையிலேயே இரு உட்பிரிவுகளும் உண்டு. ஒன்றை வைதஸ்திக ஸ்தானகம் என்றும் மற்றொன்றை அர்த்த வைதஸ்திக ஸ்தானகம் என்றும் அழைக்கிறோம். சமபாத ஸ்தானக நிலையில் பாதங்களின் இடைவெளி ஒரு விதஸ்தி (சாண்) அளவிருப்பின் இந்நிலை வைதஸ்திக ஸ்தானகம் என்றும், அரைச் சாண் இடைவெளியே இருப்பின் அர்த்த வைதஸ்திக ஸ்தானகம் என்றும் கூறப்படும்.

ஒரு காலை நன்றாக ஊன்றி மற்றதைச் சிறிது 2-1/2 சாண் இடைவெளியில் காலை எட்டி வைத்து நிமிர்ந்து அழகுற நிற்கும் நிலை வைசாக ஸ்தானகம் என்று கூறப்படும். இவ்வாசனத்தை வில்லேந்திய வேலவன் திருக்கோலத்தில் காணலாம், வளைத்த காலைப் பக்க வாட்டிலாதல் கோணவாக்கிலாதல் அமைப்பதும் உண்டு. எல்லோராச் சிற்பங்களில் இந்நிலையைக் காணலாம். விசாக நட்சத்திரத்தில் தோன்றிய முருகனை வைசாகன் என்று அழைப்பதுண்டு. இது அவரது விசேட நிலையாதலால் இதனை வைசாக ஸ்தானகம் என்று அழைப்பதாயிற்று.

ஸ்தானாசன வகையில் வைஷ்ணவம் என்றொரு கோலமும் உண்டு. இந்நிலை, ஒரு காலை நன்றாக ஊன்றி மற்றொரு காலைச் சிறிதே மடக்கி உடல் வளைவோடு கூடி அமைக்கப்படும். இதனை ஸ்தித குஞ்சித நிலை என்று சிற்பிகள் கூறுவர். இக் கோலம் சாந்த நிலையைக் காட்டுவதாகும். சிவமூர்த்தங்களிலும் விஷ்ணு மூர்த்தங்களிலும் சக்தி வடிவங்களிலும் சாத்விக பாவத்தை உணர்த்த இது கையாளப்படுகிறது.

ஒரு காலை ஸ்திதமாக ஊன்றி மற்றொரு காலைக் குறுக்கே வைத்து நிற்கும் நிலை[ஸ்வஸ்திகாசனம் என்றழைக்கப்படும். குழலூதும் கண்ணனின் திருக்கோலத்திலும் ரிஷபாந்திக சிவ மூர்த்தத்திலும் கொடிப்பெண் வடிவங்களிலும் இந்நிலை காட்டப்படுகின்றது. அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கும் படிமங்களில் சுகாஸனம், பத்மாசனம், அர்த்த பத்மாசனம், வீராசனம், உத்குடிகாசனம், யோகாசனம் ஆகியவை விசேட ஆசனங்களாகும். உடலை எப்பக்கத்திலும் சாய்வின்றி நேராக நிமிர்த்திக் கைகளைச் சமச் சீருடையதாகக் கோலித்து, ஒருகாலை ஆசனத்தின் மீது படுக்கையாகக்

கிடத்தி, மற்றொரு காலைச் சுகமாகத் தொங்க விட்டு அமர்ந்திருக்கும் நிலைக்கு, சுகாஸனம் என்று பெயர். தனித்த சிவமூர்த்தங்களையும் விஷ்ணு மூர்த்தங்களையும் ஒரு சில சக்தி வடிவங்களையும் கோலத்தை உணர்த்த சுகாஸனம் என்ற அடை சேர்த்தே வழங்குவதுண்டு. எடுத்துக்காட்டாக, அமர்ந்த கோல சிவமூர்த்தத்தை, சுகாஸன சிவமூர்த்தம் என்று அழைக்கிறோம்.

அமர்ந்த நிலையில் உடலை நேரியதாக அமைத்துக்கொண்டு இருபாதங்களை ஒன்றுக்கொன்று குறுக்காகவும், தொடைமீது கிடத்தியும், பாதங்களில் அடிப்பக்கம் மேல் நோக்கியும் அமையுமாறு செய்த ஆசனத்தைப் பத்மாசனம் என்றும் பர்யங்காசனம் என்றும் கூறுகிறோம். பர்யங்கம் என்றால் படுக்கை என்பது பொருள். இரு பாதங்களில் ஒன்றினைச் சாதாரணமாக ஆசனத்தில் கிடத்தி மற்றொன்றைத் தொடை மீது கிடத்திப் பாதத்தின் அடிப்பகுதி மேல் நோக்கித் தெரியும் வண்ணம் அமைத்துக் கொண்டு அமர்ந்த நிலைக்கு அர்த்த பத்மாசனம் என்றும் அர்த்த பர்யங்காசனம் என்றும் பெயர். முன்னையது தியானநிலையில் அமைக்கப்படும் பிரதிமைகளில் காட்டப்படுகின்றது; பின்னையதைக் கங்கை கொண்ட சோழபுரத்து ஞானசரஸ்வதிப் படிமத்தில் காணலாம்.

அமர்ந்த நிலையில், ஒரு காலை பிகுவாகத் தொங்கவிட்டு ஊன்றி மற்றொரு காலை அதன் மீது படுக்கையாகவும் விரைப்பாகவும் கிடத்தி நீட்டி உடலை சமநிலையிற் கொண்டு விரைப்பாக நிமிர்த்தி ராஜஸ நோக்குடன் அமைந்த கோலத்தை வீராசனம் என்றும் ராஜலிங்காசனம் என்றும் கூறுகிறோம். இதனை வியாக்யான தக்ஷிணாமூர்த்தத்தில் சிறப்பாகக் காணுகிறோம். உலகத்திற்கு நீதி புகட்டும் ஆசிரியரின் கோலமும் இஃதே. இராஜராஜேஸ்வரி போன்ற ஒப்பற்ற சுதந்திர சக்திகளையும் இந்நிலையில் அமர்த்துவதுண்டு.

ஒரு காலைத் தொங்கவிட்டு மற்றொரு காலை மடக்கி ஆசனத்தின்மீது ஊன்றி அமர்ந்த நிலைக்கு உத்குடிகாசனம் என்று பெயர். தியான தக்ஷிணாமூர்த்தியையும், ஐயனாரையும் இவ்வாசனத்தில் அமர்த்துவதுண்டு. இதனை ஒருசிலர் ஊர்த்துவஜானு என்றும் கூறுகின்றனர். இந்நிலையில் தாண்டவகரணம் ஒன்றிருப்பினும் இந்நிலையில் திரிபுர சம்மார மூர்த்தி அம்பு எய்யும் கோலத்தில் காட்டப்படுகின்றது. ஒரு காலைக் கீழே ஊன்றி மற்றொரு காலைத் தேரின் மேல்தட்டில் தூக்கிவைத்து நிற்கும் ஸ்தானக நிலையை இது சாருகின்றது.

உத்குடிகாசனக் கோலத்தில் யோகபப்பட்டம் தரித்து, தியான நிலையில் கற்பிக்கப்படும் பிரதிமையை யோகாசனத்தில் இருப்பதாகவும் நடப்பில் சொல்லி வருகிறோம். ஆஸனத்தில் அமர்ந்து, இரு கால்களைக் குறுக்காகப் பின்னிக் கொண்டு இரு கைகளை முழங்கால்கள் மீது நேராக நீட்டிக் கரதலத்தை இலை போன்று தொங்கவிட்டு யோக பட்டம் தரித்து யோக நிலையில் உள்ள கோலத்தை யோகாசனம் என்று அழைக்கிறோம். கால்கள் இரண்டும் குறுக்காக-ஸ்வஸ்திகமாக-அமைவதால் இதனை ஸ்வஸ்திகாசனம் என்றும் அழைப்பதுண்டு. நீட்டிய கைகள் கஜஅஸ்த பாவனையில் அமைக்கப்படுவதால், இதனை, கஜ அஸ்தாசனம் என்றும் கூறுவதுண்டு.

ஆஸன வகையில் ஆலீடம், பிரத்தியாலீடம் என்ற இரு கோலங்களும் இடம் பெற்றிருக்கின்றன. இடது காலை முன்னே எட்டி வைத்து வலதுகாலைப் பின்னோக்கி நீட்டிக் கணை எய்யும் கோலத்தில் ஆலீடம் என்றும், கணை எய்தபின் ஏற்படும் பின் வாங்கிய நிலைக்குப் பிரத்தியாலீடம் என்றும் சொல்லுகிறோம்.

சயனம் இருவகைப்படும். கால்களையும் கைகளையும் நீட்டி மல்லாந்து படுத்த நிலைக்குச் சாதாரண சயனம் என்றும், ஒரு காலை நீட்டி மற்றொரு காலைக் குஞ்சிதமாக (சிறிது மடக்கி) வைத்துக் கிடந்த நிலைக்கு அர்த்தாங்க சயனம் என்றும் பெயர். சாதாரண சயன நிலையில் ஒருபக்கத்தில் சற்றுச் சாய்ந்து படுத்த நிலையையும் ஒரு சில ஆசிரியர்கள் அர்த்தாங்க சயனம் என்றழைக்கின்றனர்.

உடலையும் தலையையும் இடது புறமாதல் வலது புறமாதல் வளைத்துப் பார்ப்போர் உள்ளத்தில் ரசானுபவம் தோன்றுமாறு சிற்ப ஆசனங்களில் பங்க இலக்கணம் இடம் பெறச் செய்யப்படுகின்றது. உடல் ஒடிவைப் பங்கமென்று நூல்கள் கூறும். பங்கங்கள் மூன்று. அவை முறையே ஆபங்கம், சமபங்கம், அதிபங்கம் ஆகும். ஆபங்கம் சாத்விக பாவத்தையும், சமபங்கம் ராஜஸ பாவத்தையும், அதிபங்கம் தாமஸ பாவத்தையும் உணர்த்துவனவாம்.

இம்மூன்று பங்கங்களையும் சேர்த்துத் திரிபங்கம் என்றும், ஒவ்வொரு பங்கத்திலும் மூன்று ஒடிவுகள் இருப்பதால் ஒவ்வொன்றையும் பொதுப்படையாகத் திரிபங்கம் என்றும் கூறுகிறோம்.

★

இந்திர விழா

"செந்தமிழ்ப் பெருஞ்செம்மல்"

திரு. நாரண-துரைக்கண்ணன் அவர்கள்

தமிழ் மக்கள் கொண்டாடி வரும் பண்டிகைகளில் தைப்பொங்கல் விழா தலை சிறந்தது ஒன்ருகும். இப்பண்டிகை முதன் முதலில் சூரிய வழிபாட்டுக்கு உரியதாய்ப் பின்னர், அருக்கனில் சோதி வைத்த எல்லாம் வல்ல இறைவன் வழிபாடாய் முடிந்தது. தமிழர்கள் பண்டைக் காலத்தில் கண்ணன், முருகன், இந்திரன், வருணன், காளி ஆகிய தெய்வங்களை வழிபட்டு வந்தனர். ஒவ்வொரு தெய்வத்தாலும் தங்கள் வாழ்க்கைக்குரிய நன்மைகள் ஏற்பட்டு வருவதாக அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். இந்திரனே, குபேரன், வாயு, வருணன், அக்கினி முதலிய தேவதைகளுக்கு அதிதேவதை யாதலால், போகியாகிய அவனே மக்களின் உயிர் வாழ்க்கைக்கும் சுக போகங்களுக்கும் ஏதுவான நன்மைகளை உண்டு பண்ணுகின்ருன் என்று அழுத்தமான நம்பிக்கை கொண்ட மக்கள், ஆண்டுதோறும் ஒருநாள் இந்திரனை நினைத்துப் பண்டிகை கொண்டாடலாயினர். பொங்கல் பண்டிகைக்கு முன்னுளில் கொண்டாடப்படும் போகிப் பண்டிகை, போகியான இந்திரனை முன்னிட்டே கொண்டாடப்படுவதாகும் என்று சொல்லப் படுகின்றது.

இன்று நாம் போகிப் பண்டிகை எனக் கொண்டாடி வருவதுதான், பண்டைக் காலத்தில் இந்திரவிழா என்ற பெயருடன் கொண்டாடப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காவியங்களில் அக்கால மக்கள் இந்திர விழாவைக் கொண்டாடிய செய்திகள் காணப்படுகின்றன.

'இந்திர விழாக் கொண்டாடுவது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயப்பதாகும்' என்று அகத்திய முனிவர், தூங்கெயில் எறிந்த தொடித்தோட்செம்பியன் என்னும் சோழ மன்னனுக்கு அறிவுறுத்தினர் என்றும், அவரது கட்டளைப்படி அம்மன்னன் இந்திர விழாவை நடத்தத் தொடங்கினன் என்றும், அவனைப் பின்பற்றியே சோழ பரம்பரையினர், ஆண்டுதோறும் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனுக்கு விழா நடத்தி வந்தார்கள் என்றும், வரலாறு ஒன்று விவரிக்கிறது. இவ்விந்திர விழாவை நெடுமுடிக்கிள்ளி என்னும் அரசன் செய்யாமல் விட்டமையால் தான், காவிரிப் பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட்டது என்று ஒரு குறிப்பு தெரிவிக்கிறது. இந்திரவிழா முதலில் உபரிசரவசு என்பவனுல் இந்திரன் பொருட்டுச் செய்யப்பட்டதென்றும், பிறகு அரசர்கள் அவ்விழாவை நடத்தி வந்தனர் என்றும் மகாபாரதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்திர விழாச் செய்தோரினுடைய தேசத்தில் தீமையுண்டாகாது என்று இந்திரனுல் வரம் அளிக்கப்பட்டதாம்.

முன்னெரு காலத்தில் சோழ மன்னனெருவன் 'என் நகரத்தில் விழாக் கொண்டருள வேண்டும்' என்று இந்திரனை வேண்டிக் கொண்டான் என்றும், அதற்குத் தேவேந்திரன் இணக்கந் தெரிவித்தான் என்றும், அதன்படி இந்திர விழா காவிரிப்பூம் பட்டினத்தில் நடைபெற்று வரலாயிற்று என்றும் சீத்தலைச்சாத்தனுர் பாடியிருக்கிருர்.

சோழப் பேரரசர்களின் மூதாதையாகிய முசுகுந்தன் என்பான், ஒரு சமயம் இந்திரனுக்கு உதவியாக நின்று, அவனுடைய பகைவர்களான அவுணர்களுடன் போரிட்டுத் தன் புயவலியால் அவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்

தான் என்றும், இடையில் அசுரர்களின் மாயத்தால் மயங்கி நின்ற முசுகுந்தனுக்குப் பூதமொன்று ஒரு மந்திரத்தை உபதேசித்து மயக்கந் தெளிவித்ததென்றும், முசுகுந்தன் அவுணர்களைக் கொன்று குவித்த பேராற்றலைக் கண்ட இந்திரன் இவர்களை எப்படிக் கொன்று குவித்தாய் என வியந்து கேட்க, அவன் பூதத்தின் செயலெனக் கூற, இந்திரன் அப்பூதத்தை அவனுக்கு மெய்க்காப்பாக வைத்துக் கொள்ளுமாறு வரமருளினன் என்றும், அப்பூதம் முசுகுந்த மன்னனுக்கு மட்டுமன்றி, அவன் வழிவழி வந்த சோழ அரசர்களுக்கும் துணையாயிருந்து இன்றைக்கும் நாளங்காடியிலிருந்து பூம்புகார் நகரைக் காவல் காத்து வருகிறது என்றும் மற்றொரு கதை கூறுகிறது.

இந்திர விழா எப்படியோ நீண்ட நெடுங்காலமாக நம் நாட்டில் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது என்பதை, மகாகவி வான்மீகியும் காளிதாசர் முதலியோரும் தங்கள் காவியங்களில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இந்திர விழா இருபத்தெட்டு நாட்கள் நடக்கும். பங்குனி மாதத்துச் சித்திரை நாளிலே தொடங்கி, அடுத்து சித்திரைத் திங்கள் சித்திரா பௌர்ணமியன்று முடிவடையும். தென்னாட்டில் சித்திரைத் திங்களில் இந்திர விழா கொண்டாடப்படும் அதே சமயத்தில், வடநாட்டில் பங்குனித் திங்களில் காமன் பண்டிகை கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. வடவிமயத்தை யடுத்த பெருங்சேடி என்னும் ஊரைச் சேர்ந்த வித்தியாதரனொருவன் தன் மனைவியுடன் காமக்கடவுள் விழாவைப் பங்குனித் திங்களில் தென்னாட்டுக் காவிரிப் பூம்பட்டினத்தில் நடந்த இந்திரவிழாவைக் காண வந்தான் எனச், சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. இந்திரவிழா கொண்டாடப்படும் செய்தி சிலப்பதிகாரத்தில் ஒரு விதமாகவும், மணிமேகலையில் ஒருவிதமாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சித்திரைத் திங்கள் பௌர்ணமி இறுதியாக உள்ள 28 நாட்கள் என்று சிலம்பும், வைகாசி விசாகம் இறுதியாக உள்ள 28 நாட்கள் என்று மணிமேகலையும் கூறுகின்றன.

சித்திரைத் திங்கள் சித்திரா பௌர்ணமியன்று பெண்கள் அவரை, துவரை, எள்ளு, பொங்கற்சோறு, பூக்கள் முதலியவைகளைப் படைத்துப் பூசையிட்டுக் குரவைக் கூந்து ஆடுவார்கள். "சோழ நாட்டில் பசி, நோய், பகைமை என்பன வெல்லாம் நீங்கி, மழையும் செல்வமும் செழித்து அரசன் நீடுழி வாழவேண்டும் என்று வாழ்த்தியவாறு மகளிர் ஆரவாரத்துடன் கூத்தாடுவார்கள்.

இந்திர விழாவை அக்காலத்தில் காவிரிப் பூம்பட்டினத்திலுள்ள எல்லா மக்களும் சாதி சமய வேறுபாடின்றிக் கொண்டாடி வந்திருக்கின்றனர். "இந்திர விழாவை நாம் மறந்தால் முசுகுந்தனது துயரைப் போக்கியதான நாளங்காடிப் பூதம் துன்பஞ் செய்யும். பாவிகளைப் புடைத்து உண்பதாகிய சதுக்கப் பூதம் இந்நகரை விட்டு நீங்கும். ஆதலால், இவ்விழாவை நடத்துவோமாக" என்று எண்ணி, இந்திர விழாவை மக்கள் கொண்டாடினர் என மணிமேகலை கூறுகிறது. இவ்விழா நடக்கப் போவதை நகர மக்களுக்கு அறிவிக்குமாறு மன்னன் முரசு அறைவோனுக்குச் சொல்வானும். முரசு அறைவோன் வச்சிரக் கோட்டத்துள்ள முரசை யானையின் பிடரிமீது ஏற்றி, முதலில் ஊரை வாழ்த்தி, "மேகம் மாதந்தோறும் மும் மழை பொழிக! அரசன் சொங்கோலினன் ஆகுக! அறிஞர்களே! இந்திர விழா நடக்குங் காலத்தில் சுவர்க்க லோகம் வறிதாகும்படி, எல்லாத் தேவர்களும் அதனை நீங்கி இங்கே எழுந்தருளுவார்கள் என்பது பெரியோர்களுடைய துணிபு; ஆதலால், நகரை அலங்கரித்து விழாக் கொண்டாடுங்கள்" என்று இந்திர விழாவைக் குறித்துத் தெரிவிப்பானும்.

இதன்படி, "நகர மக்கள் வீதி முதலியவற்றில் பூரண கும்பங்களும் பொற் பாலிகைகளும் பாவை விளக்குகளும் பரப்புவார்கள்; குலைக் கமுகும் குலை வாழையும் கரும்பும் வஞ்சிக் கொடியும் பூங்கொடியும் கட்டுவார்கள்; தூணங்களில் முத்து மாலைகளை நாற்றுவார்கள்; வீதிகளிலும், மன்றங்களிலும் பழ மணலை மாற்றிப் புது மணலைப் பரப்புவார்கள். துகிற்கொடி வகைகளை மாடங்களிலும். வாயில்களிலும் கட்டுவார்கள். சிவபெருமான் முதல் சதுக்கப் பூதம் இறுதியாக உள்ள தெய்வங்கள் உறையும் கோயில்களில் நித்திய நைமித்திக விழாக்களைச் செய்வார்கள். தருமோபதேசஞ் செய்ய அறிந்தவர்கள் பந்தலிலும் ஆம்பலங்களிலும் சென்று பிரசங்கம் புரிவார்கள். சமய வாதிகள் வித்தியா மண்டபத்தை அடைந்து இருத்தற்குரிய இடத்திலிருந்து சமயவாதம் புரிவார்கள். நகர மக்களோ யாரிடத்தும் பகைமையும் கோபமும்

கொள்ளாது மகிழ்ச்சியாக இருப்பார்கள்'' என்று மணிமேகலையில் வருணிக்கப்பட்டிருக்கிறது.

இந்திரன் மழை பெய்விப்பவன் ஆதலால், அவன் செய்த நன்மையின் பொருட்டு, தை மாத முதலில் அறுத்த முதற் பயிரை மழைக் கடவுளாகிய இந்திரனுக்கு மக்கள் ஆராதித்து வந்தனர் எனவும், அது கண்ணபிரான் அவதரித்த பின் அவர் அதை நாராயணனுக்குப் படைக்கக் கட்டளையிட்டனர் எனவும், அதனால், இந்திரன் கோபித்துப் பெருமழை பெய்விக்கக் குடிகள் நிலைகுலைந்து மாடு கன்றுகள் இழந்து தடுமாறக் கண்ணபிரான் கோவர்த்தன மலையை எடுத்துக் குடையாகப் பிடித்துக் குடிகளைக் காத்தனர் எனவும், 'அரிவம்சம்' கூறுகிறது. அதனால், இந்திரன் செருக்கு அடங்கி வேண்ட, கண்ணன் அருள் புரிந்தபடி சங்கராந்திக்கு முன்னால் மக்கள் இந்திரன் பெயரால் பண்டிகை கொண்டாடலாயினர் எனவும், மறுநாள் மழையால் வருந்திய மாடு கன்றுகளைத் தளையவிழ்த்துக் களித்தமையால், மாட்டுப் பொங்கல் என்றும், அதற்கு அடுத்த நாள் ஒருவரையொருவர் சென்று மழையால் உண்டாகிய நன்மை தீமைகளை விசாரித்ததால், காணும் பொங்கல் என்றும் கொண்டாடப்பட்டன எனவும், செவிவழிச் செய்தியாக வழங்கப்படுகிறது.

இவ்விந்திர விழாக் காலங்களில் இரு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இருபெருங் காவியங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று, கோவலன், மாதவி பிரிவு குறித்தது. மற்றொன்று மாதவியும், மணிமேகலையும் இவ்விழாவின் போது பண்டைக் கால வழக்கப்படி நடனமாட வர முடியாதென்று சித்திராபதிக்குச் சொல்லி அனுப்பியது. சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் ''கானல் வரி'' என்ற தலைப்பிலும், கூலவாணிகன் சாத்தனால் மணிமேகலையில் ''விழா வறை காதை'' யிலும் இவ்விரு நிகழ்ச்சிகளும் முறையே பாடப்பட்டிருக்கின்றன.

இவ்விதம், இந்திர விழாக் காலங்களில் கோவலன்-மாதவி ஆகிய இருவரிடையே ஏற்பட்ட பிணக்கத்தையும் பிரிவையும் பௌத்த சமயக் குறியீட்டு வழக்கின்படி சொல்ல வேண்டுமானால், துக்கம், துக்கோற்பத்தி என்றும், மாதவி வாய்மொழி வாயிலாக மணிமேகலை யடைந்த தவநிலையை, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்றும் சொல்லலாம்.

நம் நாட்டைப் போர்ப்பீடை முதலிய தொல்லைகளினின்றும் விடுபடச் செய்து வளப்படுத்தும் என்றும், நமக்கெல்லாம் துக்க நிவாரண மார்க்கத்தைக் காட்டும் என்றும் நம்பிக்கை கொண்டே, நம் நாட்டு மக்கள் இந்திர விழாவான போகிப் பண்டிகையையும், பொங்கல் பண்டிகையையும் இந்நாளிலும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றார்கள்.

148695



காஞ்சிபுரம் திருமேற்றளி ஈசுவரர் கோயிலில் நிகழ்ந்த தமிழருச்சனைத் தொடக்கவிழாவில், திரு. சி. வி. எம். அண்ணாமலை, M. L. A. அவர்கள், திருமேற்றளித் தலவரலாற்று நூலை வெளியிட்டு, அதன் முதற்படியினைக் காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி முதல்வர் திரு: செல்வி. சரோஜா சுவாமிநாதன், M. A. அவர்களுக்கு வழங்குதல்.

உ

திருவிடைமருதூர்,

திருமுறைக் கருத்தரங்கம்

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கசுவாமி திருக்கோயிலின் ஆதரவில் சென்ற ஆண்டு பிப்ரவரி மாதத்தில், முதல் திருமுறைக் கருத்தரங்கம் சீரும் சிறப்புமாக நடந்தது நாடறிந்த தொன்றும். கல்வித்துறையிலும், நீதித்துறையிலும் தொடர் புள்ளோர் கலந்து கொள்வதற்கு அனுகூலமாக, இவ்வாண்டுக் கருத்தரங்கம் வருகிற மே மாதத்தில் நடைபெற இருக்கிறது. சென்ற ஆண்டு போலவே இவ்வாண்டிலும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வோர்க்கும், வந்திருந்து கேட் போர்க்கும் விழா நடைபெறும் மூன்று நாட்களிலும் தங்க வசதியும், உணவும் இலவசமாக அளிக்கப்படும். பல மாவட்டங்களிலுள்ள அடியார் திருக்கூட்டங்களைச் சார்ந்தோரும், வழிபாட்டுச் சங்கங்களின் அங்கத்தினர் களும், திருமுறைகளில் ஈடுபாடுள்ள கல்லூரி மாணவ மாணவியரும், சென்ற ஆண்டு பெருமளவில் வந்தது போலவே, இவ்வாண்டும் வரு வார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது. இவ்வாண்டு இவ்விழாவிற்கு வர விரும்புவோர் **ஏப்ரல் மாதம் 20** தேதிக் குள்ளாகத் தங்கள் முகவரி களையும், தங்களைப் பற்றிய அவசியமான விவரங்களையும் **தேவஸ்தான மேலாளருக்குத்** தெரிவித்தால், அவர்களுக்குத் தனித்தனியே அழைப்புகள் அனுப்புவதோடு, மேற்சொன்ன வசதிகளுக்கான ஏற்பாட்டையும் உரிய காலத்தில் செய்ய இயலும் என்று அறிவிக்கப்படுகின்றது.

தொடர்பு கொள்ளும் முகவரி :

திருமிகு. டி. என். அருணசலம்பிள்ளை, B.A., B.L.

மேலாளர்,

ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானம்,

திருவிடை மருதூர், தஞ்சை மாவட்டம்

The following particulars regarding the ownership of "THIRUKKOIL" the monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV-(Sec Rule 8)

1. Place of publication	...	Nungambakkam, Madras-34.
2. Periodicity of publication	...	Monthly.
3. Printer's Name	...	Thiru S. Sivaparkasam, Owner, Sivarts Printers, 119, Strahans Road, Madras-12.
Nationality	...	Indian
Address	...	119, Strahans Road, Madras-12.
4. Publisher's Name	...	Thiru K. S. Narasimhan, B. A. B. L., I. A. S., Commissioner, H.R. & C.E. (Admn.) Department, (Ex. Officio).
Nationality	...	Indian.
Address	...	Nungambakkam, Madras–34.
5. Editor's Name	...	Thiru N. R. Murugavell, M.A.,M.O.L.,
Nationality	...	Indian,
Address	...	Nungambakkam, Madras–34.
6. Name and addresses of individuals who own the Newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.	...	Thiru K. S. Narasimhan, B. A. B. L., I. A. S., Commissioner, H. R. & C.E. (Admn.) Department, Madras-34. (Ex. Officio)

I, K. S. Narasimhan, do hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

(Signed) K. S. NARASIMHAN,
Publisher.

Dated 1–3–1972.

சோளிங்கபுரம் திரு. இலக்குமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலுக்கு, மாண்பு மிகு அறநிலைய அமைச்சர் திரு. எம். கண்ணப்பர் அவர்கள் வருகை தந்த போது, வரவேற்றுச் சிறப்பிக்கப்படுதல்.



சோளிங்கபுரம் திரு. இலக்குமி நரசிம்ம சுவாமி கோயிலில், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. எம். கண்ணப்பர் அவர்கள், உரைநிகழ்த்துதல்.



சோளிங்கபுரம் திரு. இலக்குமி நரசிம்மசுவாமி கோயிலில், வெளிப்பிரா காரம் கடைகள் கட்ட, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. எம். கண்ணப்பர் அவர்கள் அடிக்கல்நாட்டுதல்.

சோளிங்கபுரம் திரு. இலக்குமி நரசிம்மசுவாமி கோயிலில், வெளிப்பிராகாரம் கடைகள் கட்ட நிகழ்ந்த அடிக்கல்நாட்டு விழாவில், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார் B.A., B.L., I. A. S. அவர்கள் உரை நிகழ்த்துதல்.

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34, Printed at Sivarts Printers. 119, Strahans Road, Madras-12. Editor . N. R. Murugavell, M.A., M.O.L.